

நீதிக்
கதைகள்
கே.வி. குணசேகரம்



# என்னுரை

**ச**மய நூல்களையும் ஒழுக்கங்களைப் பற்றியும் கூறும் நூல்களையுமே சிறுவர்களுக்காக கதை வடிவில் எழுதி வருகிறேன். மனிதன் படைக்கப்பட்ட நாளில் இருந்து பல்வேறு விதமான சமயநூல்களும் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும் நூல்களும் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. ஆனால் மனிதர்கள் இவற்றை வாசித்த போதும் அவற்றைப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை.

**மு**தன்முதலாக ஒரு தீய செயலைச் செய்யத் தான் துணிவு வேண்டும். அத்தீய செயலைச் செய்து விட்டால், துணிந்து பல தீயசெயல்களைச் செய்யலாம். அதனால் ஒரு தீயசெயலைக் கூடச் செய்யாது வாழப்பழகிக் கொள்ள வேண்டும். நான் சமய நூல்களுக்கும், நீதி நூல்களுக்கும் கதையெழுதுவது ஏனென்றால் அவற்றிற்கு உரை எழுதுவோர் மயக்கமான உரையையே எழுதுகின்றனர். இலட்சக்கணக்கானோர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளனர். இப்போதும் எழுதிக்கொண்டிருக்கின்றனர். பரிமேலழகர் எழுதிய உரைதான் சிறப்பானது என்று அதையே தொடர்ந்து எழுதிவருகின்றனர். அது சரியானதென்றால் அதையே திரும்பத்திரும்ப ஏன் எழுதுவான்.

**ப**ல குறள்களின் உரை மயக்கத்தைத் தருவனவாக உள்ளன. வள்ளுவர் எதையும் மிகைப்படுத்திச் சொல்லவில்லை, பொய்யாகவும் எழுதவில்லை அதனால் தான் குறளுக்குப் பொய்யாமொழி என்ற பெயர் உண்டானது. திருக்குறள் உலகப் பொதுமறை. உலகில் வாழும்

அத்தனை உயிர்களுக்கும் பொருத்தமானது. ஆனால் உரை பொருத்தமானதா என்று ஆராய்வார் இல்லை.

**உ**தாரணமாக ஆறாம் அதிகாரமான வாழ்க்கைத்துணை நலம் என்ற அதிகாரத்தில் 55 ஆவது குறள்,

55. தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுது எழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை

**அ**டுத்து ஒன்பதாவது அதிகாரமான விருந்தோம்பல் என்ற அதிகாரத்தின் 85 குறள்.

வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்து ஓம்பி

மிச்சில் மிசைவான் புலம்

**இ**வ்விரண்டு குறள்களின் கருத்துக்களும் மயக்கத்தை உண்டு பண்ணி விளங்காதுள்ளன. இது போலப் பல குறள்கள் உள்ளன. அதனால் தான் கதை எழுதினேன். எழுதி வருகிறேன்.

**இ**ப்பொழுது உலகநாதன் என்ற புலவர் எழுதி உலக நீதி என்ற கவிதை நூலுக்கு கதைகளை எழுதியுள்ளேன். இந்நூலை மிகுந்த கவனத்துடன் கணினிமயப்படுத்தித் தந்த கோப்பாய் ஆரியன் கிரியேஷன்ஸ் நிறுவனத்துக்கு நன்றி கூறிக் கொள்கிறேன் இன்று எனது பிறந்ததினம். அதற்காக இந்நூலை வெளியிடுகிறேன்.

கே.வி. குணசேகரம்

கோட்டக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)

# நட்பு



**அ**து ஒரு அடர்ந்த காடு அங்கு ஊன் உண்ணும் பெரிய விலங்குகளான சிங்கம், புலி, கரடி, சிறுத்தை என்பன இல்லை. பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்பு சுற்றுலாவுக்கு வந்த யானைகள் ஐந்து அக்காட்டின் வனப்பைக் கண்டு அதை ரசித்து மகிழ்ந்து அங்கேயே தங்கிவிட்டன. இப்போது அவை இருபதாகப் பெருகிவிட்டன. காட்டின் எல்லைப் பகுதியில் மக்களின் குடியிருப்புக்கள் இருப்பதால், மக்கள் அடிக்கடி காட்டில் நுழைந்து காட்டு மரங்களை வெட்டுவர். மிருகங்களை வேட்டையாடுவர். யானைகள் வந்தபின்பு, முதலில் மிருகங்கள் யாவும் யானைகளுக்குப் பயந்து ஒதுங்கி வாழ்ந்தன. யானைகளின் பெருத்த உருவத்தோற்றம் சிறு சிறு மிருகங்களை அச்சுறுத்தின அதனால் அவை ஒதுங்கி வாழ்ந்தன. கூட்டத்தில் தலைவனாக இருந்த கதிரேசன் என்ற யானை பயந்து ஒதுங்கி வாழும் மிருகங்களுடன் அன்பாகப் பேச எண்ணி அவற்றிற்கு அருகே செல்ல மிருகங்கள் பயந்து ஓடின.

"**ம**னிதர்கள் தந்திரமாக எம்மைப் பிடிப்பார்கள். நாம் அவர்களது ஏமாற்றை அறியாது அகப்பட்டு விடுகிறோம். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமாக எம்மை ஏமாற்றுகிறார்கள். எவ்வாறுதான் முன்னெச்சரிக்கையாக இருந்தாலும் எம்மை அவர்கள் ஏமாற்றிவிடுகின்றனர்" என்று பெருமூச்சு விட்ட மான், தொடர்ந்து சொன்னது, "மனிதர்களைப் போலத்தான் புதிதாகக் காட்டுக்கு வந்து சேர்ந்த மிருகங்களும் எம்மை ஏமாற்றிப் பிடித்து உண்ண நினைக்கின்றன. அதற்காகத் தான் அவை எம்மீது அன்புள்ளவை போலக் காட்டிக் கொள்கின்றன. அவற்றின் ஏமாற்றுப் பேச்சை நம்பிவிடாதீர்கள்".

"**மா**ன் சொல்வது சரி. ஒருமுறை ஒரு மனிதன் உணவுப் பொருளைக் கொண்டு வந்து போட்டான். அதை விரும்பி உண்டவர்கள் மயக்கமடைய உணவை வைத்தவன் மயக்கமடைந்த எம்மவரைத் தூக்கிச் சென்றுவிட்டான். அதுபோல தான் இதுவும் இருக்கும்" என்றது முயல்.

"**அ**வற்றைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை. நான் மறைந்திருந்து பார்த்தேன். அவை இலை, குழைகளைத்தான் உண்கின்றன. எதற்கும் புறாவை விட்டுப் பேசிப் பார்ப்போம். புறா மரத்தில் இருந்து பேசும் அதனால் அதற்கு ஆபத்து வராது" என்றது நரி.

**எ**ல்லா மிருகங்களும் நரி சொல்வது சரியென்று கூற புறா புறப்பட்டு யானைகள் இருக்கும் இடத்திற்குச் சென்று ஒரு உயரமான மரக்கொப்பில் அமர்ந்து சொன்னது, ‘ஐயா, உங்களை யார் என்று எனக்குத் தெரியாது. நாம் சிறு பிராணிகள் உங்களது பெரும் உருவத்தைக் கண்டு பயப்படுகிறோம்’’ என்று புறா கூறும் போது கதிரேசன் குறுக்கிட்டுச் சொன்னது, ‘‘புறாவே, எம்மால் உங்களுக்கு எந்தவிதமான துன்பங்களும் நேராது. மாறாக உங்களுக்குத் தேவையான உதவிகள் யாவற்றையும் செய்வோம். நாம் மாமிசம் உண்பதில்லை. அதனால் உங்களில் எவரையும் பிடித்து உண்ணமாட்டோம். உங்களோடு நட்புக்கொள்ள நாம் முயன்ற போதெல்லாம் நீங்கள் பயந்து ஓடிவிடுகிறீர்கள். பயப்படாமல் வாருங்கள். நாம் ஒன்றாகக் கூடி வாழ்வோம்’’ என்றது கதிரேசன்.

**அ**தன் பேச்சை நம்பிய புறா, அதைச் சென்று ஏனைய மிருகங்களிடம் கூற எல்லா மிருகங்களும் யானைகளை வந்து சந்தித்தன.

**யா**னைகள் அவற்றை மிக்க மகிழ்வுடன் வரவேற்றன. கதிரேசன் சொன்னது, ‘‘நண்பர்களே, நாங்கள் யாருக்கும் துன்பம் செய்யமாட்டோம். உங்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வோம்’’ என்றது.

‘‘**ந**ண்பரே, காட்டின் எல்லைப் பகுதியில் வாழும் மனிதர்கள் எம்மை வேட்டையாடுகின்றனர். அதை உங்களால் தடுக்க முடியுமா?’’ என்று கேட்டது மான்.

**ப**யப்படாதீர்கள் இனிமேல் மனிதர்களைக் காட்டுங்கள் நுழைய விடமாட்டேன்’’ என்ற கதிரேசன், தனது மகனைப் பார்த்துக் கூறியது, ‘‘மகனே, காட்டுள் மனிதர்கள் நுழைந்தால் பெருஞ்சத்தமாகப் பிளிறி அவர்களைப் பயமுறுத்து. எக்காரணம் கொண்டும் அவர்களைத் தாக்கக் கூடாது’’ என்றது.

**ம**றுநாள் மூன்று மனிதர்கள் வேட்டையாடக் காட்டுள் நுழைந்தனர். அவர்களைக் கண்ட நரி ஓடி வந்து கதிரேசனிடம் சொல்லக் கதிரேசனின் இரண்டு மகன்மார் நரியுடன் மனிதர்கள் இருக்கும் இடத்திற்குப் பிளிறியபடி வந்தன. யானைகளைக் கண்ட மனிதர்கள் பயத்துடன் ஓடிச் சென்றனர். அதன்பிறகு சிறு மிருகங்கள் யானைகளுடன் மகிழ்வோடு விளையாடின. அவர்களுக்கு பயம் சிறிது சிறிதாக அகன்றது.

## உ. ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்



**மா**லை நான்கு மணிக்குக் கதிரேசன் ஒரு மரநிழலில் படுத்திருந்து புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தது. கதிரேசன் படிப்பதை மிருகங்களும், குட்டிகளும் மறைந்திருந்து பார்க்கும். தொண்ணூறு வயதிலும் கதிரேசன் படிப்பதை பார்த்துச் சில மிருகங்கள், "இவர், சாகிற வயதில் பெரிய உத்தியோகம் பார்க்கப்போறார்" என்று கேலி செய்யும்.

"**அ**வருக்கு பதவி நீடிப்புச் செய்யப் போகிறார்களாம். இறக்கும் வரை வேலை கொடுக்கப் போகிறார்களாம்" என்று கேலியாக மான் கூறியது.

**ந**ரி விழுந்து விழுந்து சிரித்து விட்டுச் சொன்னது, "கதிரேசனின் பேரன் பாடசாலைக்குப் போகாது ஒளிந்திருக்கிறான். அவன் படிப்பதேயில்லை அதைத் திருத்தாமல் தான் படிக்கிறார்" என்றது மான்.

**த**னது தும்பிக்கையில் ஏதோ ஊர்வதை உணர்ந்த கதிரேசன் பிளிறியபடி எழுந்த போது தன்னைச் சுற்றிப் பல மிருகங்கள் நிற்பதைக் கண்டது. கதிரேசன் தம்மைக் கண்டுவிட்டது என்று எண்ணிய மிருகங்கள் அவ்விடத்தை விட்டுச் செல்ல, கதிரேசன் அவர்களைப் பார்த்து, "என்ன வேடிக்கை பார்க்கிறீர்கள், என்னருகில் வாருங்கள்" என்றது.

**மி**ருகங்கள் அனைத்தும் கதிரேசனின் அருகில் வந்து அமர்ந்தன, "நண்பர்களே, நான் தள்ளாத வயதிலும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் படிப்பதைக் கண்டு கேலியாகப் பேசிச் சிரிக்கிறீர்கள். அது எனக்குத் தெரியும். உங்களுக்கு நான் இதைப் பற்றி முன்பே சொல்லியிருந்தல் வேண்டும். படிப்பைப் பற்றிக் கதைத்தால் எனது பேரனே எழும்பி ஓடி விடுவான். அத்துடன் உங்களில் பலருக்குப் படிக்க விருப்பமில்லை. பலமுறை நான் சொல்லியும் நீங்கள் கேட்பதாக இல்லை. இருந்தபோதும் இன்றைக்கு நான் படிப்பதைப் பற்றிச் சொல்லப் போகிறேன்" என்றது கதிரேசன்.

"**வ**சமாக அம்பிட்டுப் போனோம் ஒரே அறுவையாக இருக்கப் போகிறது" என்றது மான்.

"**போ**கவும் முடியாது. என்ன செய்யலாம்" என்று கேட்டது நரி.

‘‘**க**தைக்கத் தொடங்கினால் விடமாட்டார். சிலர் மேடை கிடைத்தால் இறங்கவே மாட்டார்கள். பயனுள்ளவற்றைப் பேசினாலாவது கேட்டுக்கொண்டிருக்கலாம். படி படி இறக்கும் வரை படிக்க வேண்டும் என்று சொல்வார் பார்’’ என்றது முயல்.

‘‘**உ**ங்களுக்குப் புத்திமதி சொல்வது விருப்பமில்லை என்பது எனக்குத் தெரியும். நான் உங்களுக்குப் புத்திமதிகள் கூறப்போவதில்லை. ஏனென்றால் அது உங்களுக்குப் பிடிக்காது அதனால் நான் ஏன் நேரங் கிடைக்கும் போதெல்லாம் படிக்கிறேன் என்பதை மட்டும் கூறப்போகிறேன். அதைச் சிறிது நேரம் அமைதியாக இருந்து கேளுங்கள். விருப்பமில்லாதவர்கள் எழுந்து செல்லலாம்’’ என்றது கதிரேசன்.

‘‘**ஏ**ன், கிழடு தட்டியும் படிக்கிறார் என்பதை அமைதியாக இருந்து கேட்போம். பல நாட்களாக இதையே சிந்தித்து மண்டை கலங்கினது தான் மிச்சம்’’ என்றது நரி.

‘‘**ந**ண்பர்களே, இந்த வயதிலும் நான் படிப்பதைக் கண்டு எனது குடும்பத்தினரே சிரிக்கின்றனர். கற்கும் கல்விதான் ஓர் உயிருடன் கூட வருவது. சைவசமயத்து ஞானிகள் கற்ற கல்வி அந்த உயிர் எடுக்கும் பிறவிகள் தோறும் வந்து உதவிகள் செய்யும் என்று சொல்லியுள்ளனர். கல்வி தேவையில்லாத உணர்வுகளையும், உறவுகளையும் ஒதுக்கி வைக்கும். புத்திசாலித்தனமாக நடக்க வைக்கும். மற்றவர்களைத் திருத்த வைக்கும். நான் படிப்பதைக் கண்ட கரடியார் வந்து, ‘‘நீங்கள் படிப்பதன் காரணம் என்ன? என்று கேட்டார். நான் சொன்னேன். அதனால் அவர் தானும் படித்துத் தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், தமது உறவினர்கள் அனைவரையும் கற்பித்தார். இப்போது அவர்கள் மிகமிக உயர்ந்த பதவிகளில் இருக்கிறார்கள். இப்போதும் கரடியார் வந்து என்னிடம் விளங்காத விடயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வார். எமக்கு எவ்வளவு ஆபத்துக்கள் வந்தன அப்போதெல்லாம் நீங்கள் என்னிடம் வந்து ஆலோசனை பெறுவீர்கள். நான் பல்வேறு விதமான நூல்களைக் கற்றமையால் அவற்றின் துணையால் வரும் ஆபத்துக்களை நீக்கி வருகிறேன். கற்கா விட்டால் என்னால் இவற்றைச் செய்ய முடியுமா...? தீயவற்றை விலக்கி நல்லவற்றைச் செய்யக் கல்விமட்டும் தான் உதவி செய்யும். கல்வி மனதைப் பண்படுத்தும், ‘‘கற்றது கைபிடி மண் அளவு கல்லாதது உலகளவு’’ என்று ஞானிகள் கூறியுள்ளனர். பிரச்சினைகள், துன்பங்கள் வரும்போதெல்லாம் நான் அவற்றைத் தீர்க்கக் கூடிய நல்ல நூல்களைப் படிப்பேன். அதன் பின்பு தான் முடிவெடுப்பேன். அதற்காகத் தான் நான் படிக்கிறேன்’’ என்றது கதிரேசன்.

‘‘**நீ**ங்கள் நன்றாகப் படியுங்கள். நீங்கள் படித்தமையால் தான் எமக்கு வந்த துன்பங்களை நீக்கியதாகச் சொன்ன பின்புதான் எமக்கு அது தெரிந்தது’’ என்றது மான்.

“இப்போது நான் கற்ற கல்வியின் மூலம் உங்களது பிரச்சினைகளைத் தீர்க்கிறேன். நான் இல்லாத காலத்தில் என்ன செய்யப் போகிறீர்கள்” என்று கேட்டது கதிரேசன்.

“தாத்தா என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்கள் படிக்கும் படி எனக்குக் கூறும் போது நான் உங்களது சொல்லைக் கேளாது விட்டு விட்டேன். இனி நான் உங்களைப் போல இறக்கும் வரை படிப்பேன்” என்றது கதிரேசனின் பேரனான யானை.

எல்லோரும் கை தட்டி ஆரவாரம் செய்தனர்

## 3. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்



முருகேசன் என்ற முதிய கரடியொன்று ஆதவன் என்ற பன்றிக் குட்டியை அழைத்துக் கொண்டு கதிரேசனிடம் வந்தது. அது கதிரேசனின் புத்திமதியைக் கேட்டு வாலிபனான பின்பு படித்துப் பட்டம் பெற்றது.

‘குருவே, இது எனது நண்பனான சிவநாதனின் மகன். உரிய வயது வந்ததும் பாடசாலைக்குச் செல்லாது தீயவர்களுடன் சேர்ந்து திரிவதால் அவர்களுடைய பழக்கங்களையே பழகி இப்போ பெரும் தீயவனாக மாறிவிட்டது. தகப்பன் எனது நீண்ட கால நண்பன். அதனால் என்னிடம் இவனை ஒப்படைத்து இவனைத் திருத்துமாறு பலமுறை வேண்டினார். நான் சொல்லக் கூடிய புத்திமதிகளையெல்லாம் சொல்லிவிட்டேன். திருந்துவதாக இல்லை. நாட் செல்லச் செல்ல மேலும் பல தீயவர்களுடன் சேர்ந்து தீய செயல்களைச் செய்கிறான். அதனால் பெற்றோர் பெருந்து துன்பப்படுகின்றனர். அவர்களது துன்பத்தை என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஒரு காலத்தில் நானும் இவனைப் போலத்தான் தீயவர்களுடன் கூடித் தீய செயல்களைச் செய்தேன். அப்போது எனது தந்தை என்னை உங்களிடம் அழைத்து வந்து முறையிட்டார். அதனால் நான் திருந்தி இன்று சமூகத்தவர் மதிக்குமளவிற்கு உயர்ந்து விட்டேன். இவனது தந்தை குடிகாரன். குடும்பத்தைக் கவனிப்பதேயில்லை. அதனால் தான் இவனது குடும்பத்தினர் தீய செயல்களை அஞ்சாது செய்கின்றனர். தயவு செய்து இவனை நல்லபடி வாழவையுங்கள்” என்றது கரடி. அதன் குரலில் அளவுக்கதிகமான வேதனை தெரிந்தது.

கதிரேசன் தனது தும்பிக்கையால் ஆதவனை அணைத்து அதற்கு ஒரு இனிப்புக் கொடுத்துவிட்டு, “மகனே, உனக்கு இப்போது பதினைந்த வயது. இதுவரை நீ பாடசாலைக்குச்

செல்லவில்லை'' என்று சொல்லும்போது பன்றிக் குட்டி குறுக்கிட்டுச் சொன்னது, ''தாத்தா, எனது தந்தைக்குக் குடும்ப நினைவே இல்லை. குடித்துவிட்டு அம்மாவைத் துன்புறுத்துவார். அவரது உழைப்பு அவருக்குக் குடிக்கப் பற்றாது. அதனால் அம்மாவை வேலைக்குச் செல்லும்படி அடிப்பார். அதனால் தான் நான் பாடசாலைக்குச் செல்லவில்லை'' என்றது ஆதவன்.

''**பே**ரா, அப்படிச் சொல்லாதே உன்னில் அக்கறை இருந்ததால் தானே முருகேசனிடம் உனக்குப் புத்திமதி கூறிப் பாடசாலைக்கு அனுப்புமாறு உனது தந்தை கூறினார். சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகப் பலர் தீய பழக்கங்களைப் பழகி விடுகின்றனர். அவற்றைத் திருத்தலாம். ஆனால் உடனே திருத்த முடியாது. சிலகாலம் செல்லும். உனது தந்தையைக் கரடியார் நேற்று அழைத்து வந்தவர். நான் அவரோடு கதைத்தேன். அவர் திருந்துவதாகக் கூறினார்''.

''**அ**வர் திருந்தமாட்டார் தாத்தா. பலமுறை அவர் கடவுள் சாட்சியாக நான் குடிக்கமாட்டேன் என்று சத்தியம் செய்தவர் அவர் ஒழுங்காக வாழ்ந்திருந்தால் நானும் ஒழுங்காக வாழ்ந்திருப்பேன்'' என்றது ஆதவன்.

''**ம**கனே, ஒருவர் தீயவராக இருந்தாலும் அவரைப் பற்றி அவதூறாகச் சொல்லக் கூடாது. அவர் நீங்கள் தீய நடவடிக்கைகளில் ஈடுபடுவதால்தான், தான் குடிப்பதாகச் சொல்கிறார். ஒவ்வொருவரும் இன்னொருவர் மீது குற்றம் சுமத்தினால் இருவராலும் நல்லபடி வாழ முடியாது. குறைகூறுவதை விடுத்து நீ படி. பாடசாலைக்குச் சென்று தான் படிக்க வேண்டும் என்றில்லை இங்கு மாலை நேரங்களில் பாடசாலைக்குச் செல்லாதவர்களுக்கும் பாடசாலையில் பின்தங்கியவர்களுக்கும் வகுப்பு நடைபெறுகிறது. அங்கு வந்து படி சோதனை எடுக்கலாம். எம்மில் தான் குற்றங்கள் குறைகள் உள்ளன. அவற்றை நாம் நீக்கினால் மற்றவர்களின் குறைநிறை எமக்குத் தெரியாது. உனது தந்தை உன்னால்தான் தான் குடிப்பதாகச் சொல்கிறார். நீ அவரால்தான் பாடசாலைக்குச் செல்லவில்லை என்று கூறுகிறாய். ஒருவருக்குகொருவர் குறைகூறுவதை விடுத்து அவரவர் திருந்த வேண்டும். உனது தந்தை திருந்துவதாகச் சொன்னார். நீயும் திருந்து அவரவர் தான் திருத்த வேண்டும். ஒருவருக்காக இன்னொருவர் உண்ண முடியாதது போல ஒருவருக்காக இன்னொருவர் திருந்தமுடியாது. குறை கூறுவதை விடுத்து நீ முதலில் திருந்து'' என்றது கதிரேசன்.

## 4. மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்



**ஆ**தவன், கதிரேசனுக்கு அருகில் வந்து நின்றது. அதனால் துக்கத்தைத் தாங்க முடியவில்லை. சிறிது நேரம் விக்கி விசும்பியபடி நின்ற ஆதவன்பின் பெரிதாக அழ ஆரம்பித்தது. கதிரேசன் பலமுறை கேட்டும் ஆதவனால் பதில் சொல்ல முடியவில்லை. என்னவாக இருக்கும் என்றும் நினைத்துப் பார்க்க முடியவில்லை. பல வருடங்களாகத் தீயவர்களுடன் சேர்ந்து தீய செயல்களைச் செய்த ஆதவன் தற்பொழுது முற்றாகத் திருந்தி மாலைநேர வகுப்புக்களுக்குத் தவறாது வருகிறான். நல்ல முறையில் படிக்கிறான். வீட்டிலும் வேலைகளைச் செய்து கொடுக்கிறான்.

“**பே**ரா, நீ நடந்ததைச் சொன்னால் தானே நான் எதுவும் செய்யலாம். சொல்லாமல் அழுதால் நான் எப்படி உனக்கு உதவுவது அழாது சொல்” என்றது கதிரேசன்.

“**தா**த்தா, அப்பா குடிக்கமாட்டன் என்று சத்தியம் செய்துவிட்டு இன்று குடித்துவிட்டு வீட்டுக்கு வந்தபோது அப்பம்மா ஏச அவர் அப்பமாவை வீட்டை விட்டுப் போகும்படி கூறி அவரை இழுத்துச் சென்று வீதியில் விட்டுவிட்டார். எனக்கு அப்பம்மா வேணும். அப்பா வேண்டாம். நாங்கள் எங்கும் தேடிப் பார்த்தோம் அவரைக் காணவில்லை” என்று கூறிவிட்டு பலமாக அழுதது ஆதவன்.

**சி**வநாதன் குடிகாரன் அடிக்கடி சத்தியம் செய்வது அவனது வழக்கம். அதனால் பரபரப்படையாது அங்கு நின்ற மானையும் நரியையும், புறாவையும், கிளியையும் அழைத்து ஆதவனின் அப்பம்மாவைத் தேடும்படி அனுப்பியது.

“**ப**யப்படாதை ஆதவா. உனது அப்பம்மா யாராவது இனத்தவரின் வீட்டில் இருப்பார்” என்றது கதிரேசன்.

“**இ**ல்லைத் தாத்தா அவா போகும்போது, “உன்னுடைய கரைச்சலைத் தாங்க முடியவில்லை. நான் ஆற்றிலோ, குளத்திலோ விழுந்து சாகப் போறன்” என்று சொல்லிவிட்டுப் போனதாக அம்மா சொன்னவா. அதுதான் பயமாக இருக்கு” என்றது ஆதவன்.

**அ**ப்போது முருசேகனும் சிவநாதனும் அங்கே வந்தனர். முருகேசன் சொன்னது, ‘‘இவன் குடிக்கமாட்டன் என்று பலமுறை சத்தியம் பண்ணிவிட்டுக் குடித்ததால் தாய்க்குச் சரியான கோபம் குடித்துவிட்டு வந்து சட்டிபானைகளை உடைத்துவிட்டான். அதுதான் அவாவுக்குக் கோபம். உச்சில் குளத்துக்குள் விழுந்து சாகப்போறேன்’’ என்று சொல்லிக் கொண்டு போனவாவை சிவநாதனின் மருமகன் கண்டு கூட்டிவந்து விட்டான். அவன் காணாவிட்டால் அவா குளத்தில் விழந்து இருக்கும்’’

‘‘**சி**வநாதா, அன்னையும் பிதாவும் தான் நாம் கண்ணால் காணும் தெய்வங்கள். அவர்களைத் துன்பப்படுத்தினால் ஒருபோதும் நிம்மதியாக வாழ முடியாது. உனது தந்தையை வேட்டைக்காரர் கொன்றபின் பெருங்கஷ்டப்பட்டுத் தான் உன்னை உனது தாயார் வளர்த்தெடுத்தவர். அத்துடன் தான் பெற்ற பிள்ளை குடித்து வெறித்துத் தீய செயல்களைச் செய்வதை எந்தத்தாய் தான் விரும்புவாள். அத்துடன் தாய் சொல்லை ஒருபோதும் தட்டக் கூடாது. தாய்மார் தமது பிள்ளைகள் கெட்டுப் போவதை ஒருபோதும் விரும்பமாட்டார்கள். அதனால் முதியவரான உனது தாயை அன்போடு பராமரித்தல் வேண்டும். எந்தத் தாயும் தன் மகனிடம் பொன்னைப் பொருளை எதிர்பார்க்க மாட்டாள். அவன் நன்றாக வாழ்வதைக் தான் விரும்புவாள்’’ என்றது கதிரேசன்.

‘‘**ஐ**யா, இதை நான் பலமுறை சொல்லி விட்டேன். சொல்லும் போது அக்கறையுடன் கேட்பது போலக் கேட்டுவிட்டு, நான் இனிமேல் ஒழுக்கமாக வாழ்வேன் என்பான். ஒரு மணித்தியாலத்தின் பின் எல்லாவற்றையும் மறந்து குடித்துவிட்டு வருவான்’’ என்றது முருகேசன்.

‘‘**இ**ல்லை ஐயா, இனிமேல் நான் குடிக்க மாட்டன்’’ என்று சிவநாதன் கூறியபோது ஆதவன் சொன்னது, ‘‘இவரை நம்பவேண்டாம். இப்ப சொல்வார் வீட்டை போகும் போது வழியில் இருக்கும் சாராயத் தவறனையில் குடித்துவிட்டுத் தான் போவார்’’.

‘‘**இ**ல்லை ஐயா’’ என்று சிவநாதன் சொன்ன போது கதிரேசன், ‘‘பேசாதை போனவாரம் குடிக்கமாட்டான் என்று எனக்குச் சொன்ன நீ மறுநாள்க் குடித்துவிட்டு வீதியால் போவோர் வருவோரோடு பிரச்சினைப்பட்டாய். இப்ப உனது தாயோடு பிரச்சினைப்பட்டு அவாவை இழுத்துக்கொண்டு போய் வீதியில் விட்டாய் இதற்குமேல் நீ எதுவும் சொல்லத் தேவையில்லை. இனிக் காவல்துறையிடம் சொல்லி நடவடிக்கை எடுக்க வேண்டும்’’ என்றது கதிரேசன்.

‘‘**வே**ண்டாம் ஐயா, முன்பொருமுறை காவல்துறையினர் என்னைக் கைது செய்து கொண்டு சென்று கண்டபடி அடித்தவர்கள் இப்போ நீங்கள் சொன்னால் கடுமையாகத் தாக்குவார்கள். நான் இனி அம்மாவைத் தொந்தரவு செய்யமாட்டன். அவர்

சொல்வதையெல்லாம் கேட்பேன். அவரின் சொல்லைத் தட்டமாட்டேன். இந்த ஒருமுறை மட்டும் பொறுத்துக் கொள்ளுங்கள். இனிமேல் பிழைவிட்டால் காவல்துறைக்கு அறிவியுங்கள்'' என்று அழுதது சிவநாதன்.

''**அ**ழாதை. உது உண்மையாக கண்ணீரல்ல எம்மை ஏமாற்றுகின்ற கண்ணீர். எனது சகோதரனின் மகன் தான் காவல்துறை அதிகாரி அதனால் நான் சொல்லித் தகுந்த தண்டனை கொடுக்கச் சொல்வேன்'' என்றது கதிரேசன்

## 5. வஞ்சனைகள் செய்வாரோடு இனங்க வேண்டாம்



''**தா**த்தா, இவர் திருந்தவே மாட்டார். தீய செயல்களைச் செய்யமாட்டேன் என்று எத்தனை தரம் சத்தியம் செய்திருப்பார். இதற்கெல்லாம் நரியாரான மாறன் தான் காரணம் மாறனின் நண்பர்கள் எல்லோரும் தீயவர்கள். சுந்தரன் என்ற குரங்குடன் இவர்கள் மிகமிக நெருங்கிப் பழகுகின்றனர். காட்டின் ஓரப் பகுதியில் மனிதர்கள் கள்ளச் சாராயம் காய்ச்சுவார்கள். அவர்கள் நித்திரையான பின்பு, அல்லது அவர்கள் சென்ற பின்பு குரங்கு சாராயத்தைத் திருடிவந்து இவர்களுக்கு விற்கும். அத்துடன் பனைமரங்களிலும், தென்னைமரங்களிலும் ஏறி மனிதர்கள் கள்ளுச் சேகரிப்பதற்காகக் கட்டி வைத்திருக்கும் கள்ளு மட்டிகளை அவிழ்த்து வந்து இவர்களுக்கு விற்கும். ஒருமுறை மனிதர் கள்வைத்த பொறிக்குள் அகப்பட்டதால் அதனது முன்னங்கால் துண்டிக்கப்பட்டது. இருந்தும் அது திருடுவதை விடவில்லை. கை அகப்படாமல் தலை அகப்பட்டிருந்தால் எவ்வளவு நல்லது'' என்றது ஆதவன்.

''**பே**ரா, நீ சிறியவன் இவ்வாறு கதைக்கக் கூடாது. நல்லவர்கள், தீயவர்களைத் தான் அதிகம் நேசிக்க வேண்டும். ஏனென்றால் சாதாரணமானவர்கள் தீயவர்களை வெறுத்தொதுக்குவர். நல்லவர்கள் அவர்கள் மீது அனுதாபம் கொண்டு திருந்த வேண்டும்'' என்று கதிரேசன் கூறியபோது ஆதவன் சொன்னது, ''தாத்தா, நீங்கள் சொல்வது சரி. நீங்கள் எத்தனை தரம் அப்பாவுக்கும், மாறனுக்கும் சுந்தரனுக்குப் புத்திமதி கூறியிருப்பீர்கள். தீயவர்கள் உங்கள் மீது கொண்டுள்ள பயத்தின் காரணமாக நீங்கள் சொல்வதைக்

கேட்பார்கள். சத்தியமும் செய்வார்கள். பின் மறந்துவிடுவார்கள். தீயவர்களும் அவர்களோடு சேர்ந்தவர்களும் திருந்தமாட்டார்கள். அதனால் காவல்துறை அதிகாரிக்கு அறிவியுங்கள்'' என்றது.

''**தா**த்தா, காவல்துறைக்கு அறிவிக்காதைங்கோ. அவர்கள் நீங்கள் அறிவித்தால் என்னை சித்திரவதை செய்வார்கள்'' என்று கலங்கியது சிவநாதன்.

''**அ**ப்பா திருந்துவதற்கு வேண்டுமானால் இன்னொரு சந்தர்ப்பங் கொடுங்கள். ஆனால் இவர் எக்காரணங் கொண்டும் மாறனுடனும் சுந்தரனுடனும் சேரக் கூடாது என்று சொல்லுங்கள். அனேகமாக இவர்கள் இரவில் தான் ஒன்று கூடித் திட்டமிடுவர். அதனால் அப்பாவை இரவில் உங்களது வீட்டில் தங்கச் செய்யுங்கள்'' என்றது ஆதவன்.

## 6. போகாத இடந்தனிலே போகவேண்டாம்



''**சி**வநாதா, ஆதவன் சொல்வதுதான் சரி. அதனால் நீ இரவுவேளைகளில் என்னுடன் வந்து தங்கியிரு. நீயும் உனது நண்பர்களும் பகலில் நல்லவர்கள் போல நடமாடுவீர்கள். இரவில் போகக்கூடாத இடங்களுக்கெல்லாம் போவீர்கள். சென்ற வாரம் காட்டின் அருகே பயிர் செய்யும் இடங்ளுக்குச் சென்று காய்கறி வகைகளைப் பிடுங்கித் தின்றதோடு விவசாயிகளின் பயிர்களையும் அழித்துவிட்டீர்கள். இது பெருங்குற்றம். எமக்கு இறைவன் தேவையானவற்றையெல்லாம் காட்டுக்குள்ப் படைதுள்ளான். காட்டில் உள்ள மரங்கள் யாவும் பூத்துக் காய்த்துப் பழமாக எமக்குத் தருகின்றன. அப்படியிருக்க நீங்கள் ஏன் மனிதர்கள் பயிர் செய்யும் இடங்களுக்குச் செல்கிறீர்கள்''.

''**க**டவுள் எம்மீது இரக்கப்பட்டு எமக்குத் தேவையான நல்ல உணவு வகைகளைப் படைத்துள்ளார். ஆனால் மனிதர்கள் மிகமிகக் கஷ்டப்பட்டு உழைத்தால் தான் அவர்களுக்கு உணவு கிடைக்கும். நீர் கூட எமக்கு இலவசமாகக் கிடைக்கிறது. ஆனால் மனிதர்கள் நீரைப் பெற பெருங்கஷ்டப்படுகின்றனர். பணத்தைச் செலவு செய்து கிணறுகள் வெட்டுகின்றனர். இலவசமாக அனைத்தையும் பெறும் நாம், பெருங்கஷ்டப்பட்டு வாழும் மனிதர்களுக்குத் துன்பம் செய்யலாமா...? யோசித்துப்பார்'' என்றது கதிரேசன்.

“**ஆ**யிரம்தரம் நான் சொல்லிவிட்டேன். கேட்பதாக இல்லை மனிதர்கள் கஷ்டப்பட்டு பணம் செலவு செய்து பயிரைச் செய்ய நீங்கள் அதை அழித்தால் அவர்கள் உங்களுக்குப் பெருந்துன்பம் செய்வர். சிவநாதனின் அண்ணன் பலமுறை நான் சொல்லச் சொல்ல கேட்காமல் மனிதர்களது தோட்டங்களுக்குச் சென்று காய்கறிவகைகளை உண்ண, அவர்கள் பொறிவைத்து அதைப் பிடித்துக் கொன்று தின்று விட்டனர். அதனால் அக்குடும்பம் பெரும் துன்பத்திற்குள்ளானது. அதுதான் உனக்கும் நடக்கும். மனிதர்கள் தமக்குத் துன்பமேற்பட்டால், துன்பப்படுத்துவோரைக் கடுமையாகத் தண்டிப்பர். அதனால் போகக் கூடாத இடங்களுக்குப் போகாதே என்று சொல்லியும் சிவநாதன் கேட்பதாக இல்லை” என்றது முருகேசன்.

“**க**ரடித் தாத்தா சொல்வதுதான் நடக்கப் போகிறது” என்று கலங்கியது ஆதவன்.

“**ப**லநாள் களவெடுக்கும் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்று அறிவுடையோர் சொல்வார்கள். முருகேசன் மிகவும் நல்லவர். ஒழுக்கமானவர். உனது சகோதரனை மனிதர்கள் கொன்றபின் அந்தக் குடும்பத்திற்கு உதவுபவர் உனது சகோதரரின் பிள்ளைகள் படிப்பில் கெட்டிக்காரர்கள். அவர்கள் படிக்கவும் அவர்தான் உதவுகிறார். நீ ஒரு நாளென்றாலும் அக்குடும்பத்தினருக்கு உதவி செய்திருக்கிறாயா...? எதைச் சொன்னாலும் உனக்குப் புரியாது. போகக் கூடாத இடங்களுக்குப் போபவர்கள் ஒருநாள் கட்டாயம் அழிவார்கள்” என்றது கதிரேசன்.

## 7. போகவிட்டுப் புறஞ் சொல்லித் திரிய வேண்டாம்



“**தா**த்தா, அப்பாவிடம் எல்லாத் தீயகுணங்களும் இருக்கிறது. முருகேசன் தாத்தாவின் வீட்டில் தான் அப்பா வேலை செய்கிறார். அங்குள்ள பொருட்களை இவர் திருடுவார். அது முருகேசன் தாத்தாவுக்குத் தெரியும். அவர் அப்பாவைத் தண்டிக்காது புத்திமதிகள் கூறுவார். தண்டிப்பதால் யாரையும் திருத்த முடியாது. தண்டனைகள் ஒருவருக்கு வக்கிர உணர்வுகளை உண்டாக்கும். பழிவாங்ங வேண்டும் என்ற நினைப்பை உருவாக்கும். பகையை ஏற்படுத்தும் சந்தர்ப்பம் வரும்போது பழிவாங்க வேண்டும் என்ற நினைப்பை உண்டாக்கும். அதனால் நான் எனக்குத் துன்பம் செய்பவர்களை அன்பால் தான் திருத்த வேண்டும் என்று நினைப்பேன். அதன்படி பலரைத் திருத்தியுள்ளேன். சிவநாதனும் ஒரு நாள்த் திருந்துவான்” என்று சொல்வார்.

“**ஆ**னால் அப்பாவுக்கு நல்ல சிந்தனைகளே இல்லை. முருகேசன் தாத்தா புத்திமதி கூறினால் நன்றாகக் குடித்துவிட்டு வந்து அவரைப் பற்றிக் கேவலமாகப் பேசுவார். உலகத்தில் களவெடுக்காதவன் யார்? ஒருவரைச் சொல்லுங்கள் பார்ப்போம். முருகேசனின் தந்தை பலசரக்குக் கடை வைத்திருந்தார். பொருட்கள் எல்லாவற்றிலும் கலப்படம் செய்ததாகப் பலர் இப்பவும் கூறுகின்றனர்” என்று வாய்க்கு வந்தபடியெல்லாம் சிந்திக்காமல் பேசுவார்.

“**அ**ம்மா சொல்வா, “எனக்கு முருகேசனின் தந்தையைத் தெரியும். அவர் கடவுள் பக்தி மிக்கவர். எந்த உயிருக்கும் தீங்கு செய்யாத ஒழுக்கமான மனிதன். இந்தக் காட்டில் உள்ள யாரும் அவரைக் குறைகூறியதில்லை. நீ இல்லாதவற்றையும் பொல்லாதவற்றையும் கூறுகிறாய். இது கடவுளுக்குப் பொறுக்காது” என்பா. அதனால் இவருக்குமிடையே சண்டை வரும். பின் அது அடிதடியாகவும் மாறுவதுண்டு. முருகேசன் தாத்தாவைக் கண்டால் விழுந்து கும்பிடுவார். நீங்கள்தான் எனது குலதெய்வம் என்பார். பெரும் மரியாதை கொடுப்பார். அவரைக் காணாத இடத்தில் புறம் சொல்வார். இவரை நம்பாதைங்கோ தாத்தா” என்றது ஆதவன்.

**சி**வநாதனுக்குப் பெருங்கோபம் வந்தது, எனினும் கதிரேசனுக்கும் முருகேசனுக்கும் முன்னால் வெளிப்படுத்த முடியவில்லை. அதனால், “பேசாமல் இரு நான் எப்ப முருகேசன் ஐயாவைக் குறையாகச் சொன்னனான். என்ரை தம்பி முருகனைத்தான் நான் ஏசுவேன். அதை ஆதவன் தவறாகப் புரிந்து விட்டது” என்றது சிவநாதன்.

“**உ**ன்னைப்பற்றி எனக்குமட்டுமல்ல ஊருக்கே தெரியும்” என்றது முருகேசன்.

## 8. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்



**பா**டசாலை விட்டுவரும் போது மாறன் என்ற நரி, சுந்தரன் என்ற குரங்குக்குச் சொன்னது, “சுந்தரா, பாடசாலையில் ஆசிரியர் ஒன்றைச் சொல்கிறார். அதிபர் இன்னொன்றைச் சொல்கிறார். இருவரும் மாறுபாடாகத்தானே சொல்கின்றனர். நாமிருவரும் சிறுவர்கள் என்று புரியாமல் இவ்வாறு சொல்லலாமா!”.

**மா**றன் சற்றுத் துடுக்கானது. ஆராயாது பல தீய செயல்களைச் செய்பவது. பொதுவாகப் பாடசாலைப் பிள்ளைகளது பெற்றோர் மாறனுடன் தமது பிள்ளைகளைச்

சேரவிடுவதில்லை. சுந்தரன் மிகவும் நல்லவன். ஒழுக்கமானவன். பெரியவர்களை மதிப்பவன். ஆசிரியர்களது சொற்களைக் கேட்டு நடப்பவன். அதனால் ஆசிரியர்கள் அவனுடன் அன்புடன் பேசுவார்கள். சுந்தரனது பெற்றோர், சுந்தரன் மாறனுடன் நட்புப்பூண்டிருப்பதை விரும்புவதில்லை. அவர்கள் சுந்தரனை மாறனுடன் சேரக்கூடாது என்று சொல்வார்கள். ஆனால் அதிபர், ‘‘சுந்தரா, நீ நல்லவன். படிப்பில் கெட்டிக்காரன். ஒரு போதும் நீ தீய செயல்களைச் செய்யமாட்டாய். ஏனென்றால் உனது குடும்பத்தவர்கள் அனைவரும் ஒழுக்கமானவர்கள். சுந்தரா, நல்லவர்கள் தீயவர்களுடன் சேர்ந்தாலும் தீயவற்றைச் செய்யாது தீயவற்றைச் செய்யும் தீயவர்களைத் திருத்துவார்கள். மாறன் தீயவர்களுடன் சேர்ந்து தீயவனாகிவிட்டான். நீ அவனைத் தீயவர்களோடு சேரவிடாது புத்திமதிகள் கூறு. தீயவர்கள் அன்பாகப் பேசினால் திருந்துவார்கள். கண்டிப்பும் தண்டனையும் தான் ஒருவரைத் தீயவழியில் செல்லவைக்கிறது. அதுனால் அவனுடன் மிகவும் அன்போடு பேசு’’ என்பதற்காகவே சுந்தரன் மாறனுடன் நட்புப் பூண்டுள்ளான்.

**தி**னமும் சுந்தரனது தந்தை சொல்வார், ‘‘சுந்தரா, மாறனோடு சேர்வது எனக்கு மிகுந்த கவலையைத் தருகிறது தயவுசெய்து அவனுடன் சேராதே’’ என்று கூறியபோது சுந்தரன் சொன்னது, ‘‘அப்பா, நான் உங்களது சொற்களைக் கேட்கவில்லை என்று கவலைப்படாதீர்கள் எமது அதிபர் தான் அவனைத் திருத்துவதற்காக என்னை அவனோடு நட்புப் பூணச் சொன்னவர். தீயவர்கள் தீயவர்களுடன் சேர்ந்தால் தீயவற்றைத் தான் செய்வர். நான் மாறனுடன் சேர்ந்தபின் அவன் மாறிவிட்டதாக ஆசிரியர்களும், அதிபரும் சொல்கிறார்கள். அதனால் பயப்படாதீர்கள் அப்பா. நான் ஒருபோதும் தீயவனாக மாட்டேன்’’.

‘‘**எ**ன்ன யோசிக்கிறாய். அதிபர் சொன்னது பிழைதானே’’ என்றது மாறன்.

‘‘**மா**றா, நீ எதையும் ஆராயாது நம்புவதால்தான் உன்னை அனைவரும் வெறுக்கின்றனர். ஆசிரியர் பொய் சொல்வதும், களவெடுப்பதும் பெரும்பாவம் என்றனர். அது உண்மை இன்னொருவர் கஷ்டப்பட்டு உழைத்ததைக் களவெடுப்பதும், பின் தான் களவெடுக்கவில்லை என்று பொய்சொல்வதும் பாவம் என்று ஆசிரியர் சொன்னவர். அதிபர் களவெடுத்தாலும் பொய் சொல்லக்கூடாது என்றவர். களவெடுத்தவன் உண்மையைச் சொன்னால் அகப்பட்டுவிடுவான். அதனால் தண்டனைகிடைக்கும். அதற்காகத்தான் அதிபர் களவெடுத்தாலும் பொய்சொல்லக் கூடாது என்றவர். அது சரிதானே’’ என்றது சுந்தரன்.

‘**ச**ரிதான். நான் ஆராயாது கதைப்பதால் தான் என்னை எல்லோரும் வெறுக்கின்றனர். இனி உன்னைக் கேளாமல் நான் கதைக்க மாட்டேன்’’ என்றது மாறன். அதைக் கேட்ட சுந்தரனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

## ௯. நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்.



“**சு**ந்தரா, நீ மிகவும் நல்லவன் எல்லோரும் நான் தீயவன் என்று சொல்லி ஒதுக்கிவைத்துள்ளனர். ஆனால் நீ என்னுடன் மிகவும் அன்பாகப் பழகுகிறாய். பண்பாகப் பேசுகிறாய். சிறுவயதில் எனது இனத்தவர்களின் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடியமையால்தான் நான் அவர்களது பழக்கவழக்கங்களைப் பின்பற்றினேன். எனது மைத்துனர் இருவர் தீயவர்கள். என்னிலும் பார்க்க மூத்தவர்கள். அவர்கள் தாம் செய்யும் தீய செயல்களை என்னைக் கொண்டு செய்விப்பர். தோட்டங்களில் திருடுவர். நான் திருடாவிட்டாலும் அவர்கள் திருடிவந்து தருவதை உண்பேன். அதனால் எனக்கும் திருட வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். பாடசாலைக்கு வந்தபின்பு தான் பழக்கதோசத்தால் வகுப்பில் உள்ள மாணவர்களின் பொருட்களைத் திருடுவேன். பின் அவற்றை மறைத்து வீட்டுக்குக் கொண்டு சென்றால் எனது பெற்றோர் அவற்றை மகிழ்வுடன் வாங்கிவைப்பர். இன்னும் திருடுமாறு ஊக்குவிப்பர். அதனால் திருடும்போது அகப்பட்டு ஆசிரியர்களிடம் தண்டனை பெறுவேன். அதிபர் மிகமிக நல்லவர். அவர் எனக்குப் புத்திமதிகள் கூறுவார், “மகனே, திருடுவது பாவம், ஒருவர் கஷ்டப்பட்டு உழைப்பதைத் திருடுவதால் அவர் மிகவும் பாதிப்புக்குள்ளாவார். துன்பப்படுவார். கடவுளிடம் முறையிடுவர். கடவுள் பாவம் செய்பவர்களுக்குத் தண்டனை கொடுப்பார். திருடுவது யாருக்கும் தெரியாது என்று நினைக்காதே. கடவுள் எந்நேரமும் விழித்திருப்பதால் எல்லாவற்றையும் அறிந்து கொள்வார். சுந்தரன் மிகவும் நல்ல மாணவன் அவனோடு நட்புக் கொள். அவனைப் பார்த்துத் திருந்திவிடுவாய். சுந்தனமரத்திற்கு அருகில் இருக்கும் முட்செடியும் சந்தன வாசமுடையதாக இருக்கும் என்று பெரியவர்கள் கூறுவார்கள். அதனால் அவனுடன் சேர்ந்து படி. ஒருபோதும் நிலையில்லாத செயல்களைச் செய்யக்கூடாது”.

“**க**திரேசன் தாத்தாவைப் பார். அவர் நிலையில்லாத தீய செயல்களை எப்போதாவது செய்திருக்கிறானா? அவர் நிலையில்லாத தீய செயல்களைச் செய்யாமையால் தான் காட்டில் உள்ள அனைவரும் அவரை மதித்துப் போற்றுகின்றனர். தீய செயல்கள் செய்யும் போது மிக்க மகிழ்வைத் தரும். ஆனால் அதன் மூலம் வரும் பிரச்சினைகள் நீங்காத துன்பத்தைத் தான் தரும். அதனால் நிலையில்லாத துன்பத்தைத் தரும் தீய செயல்களைச் செய்யாதே”

என்றவர். இப்போ உன்னுடன் நட்புப் பூண்ட பின் நான் மகிழ்வுடன் இருக்கிறேன். எனது மைத்துனர்களுக்குக் களவெடுக்க வேண்டாம் என்று பல முறை கூறியும் அவர்கள் கேட்பதில்லை. அதனால் எப்போதும் அவர்கள் துன்பப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். காவல்துறையினர் இரவுபகலென்று பாராது அவர்களைத் தேடி வருவதால் அவர்கள் வீட்டில் தங்குவதில்லை. உணவுக்குக் கூடக் கஷ்டப்படுகின்றனர். அதிபர் என்னை உன்னோடு நட்புக் கொள்ள வைத்ததால் நான் தப்பினேன்'' என்றது மாறன்.

## 10. நஞ்சுடனே ஒரு நாளும் பழக வேண்டாம்



''கதிரேசன் தாத்தா மாலை நேரங்களில் முதியவர்களுக்கு நடத்தும் பாடசாலையில் ஒழுக்கமான வாழ்வைப் பற்றித்தான் அதிகம் பேசுவார். சில நேரங்களில் அப்பாவுடனும், மாமாவுடனும் நானும் செல்வேன். அப்பா முன்பு தீய செயல்கள் பலவற்றை ஆராயாது செய்து வந்தவர். இப்போ திருந்தி நல்லவராக வாழ்கிறார். இப்போது அவர் குடிப்பதில்லை. மாமா தீயவர், தாத்தா எப்படிச் சொன்னாலும் கேட்கமாட்டார். சில தினங்களுக்கு முன்பு காட்டுக்குள் பாம்புகளைப் பிடிக்கக் குறவர் வந்திருப்பதை அறிந்து கதிரேசன் தாத்தா அன்றைய வகுப்பில் பாம்பு பிடிப்பதைப் பற்றித்தான் சொன்னவர். அந்த வகுப்புக்கு அப்பாவுடன் நானும் சென்றேன். கதிரேசன் தாத்தா சொன்னார், ''காட்டுக்குள் குறவர்கள் வந்திருக்கிறார்கள் அவதானமாக இருங்கள். அவர்கள் காட்டிற்கு வரும்போது மதுபான வகைகளைக் கொண்டு வருவார்கள். அதை வாங்கிக் குடியாதீர்கள். மதுபானம் நஞ்சு. நஞ்சு உடன உயிரைக் கொல்லும் சாராயம் படிப்படியாக உயிரைக் கொல்லும். சென்ற முறை அவர்கள் காட்டுக்கு வந்தபோது கொண்டுவந்த சாராயத்தை முருகேசனது இனத்தவன் ஒருவனுக்குக் கொடுக்க அவன் குடித்துவிட்டு அவர்களுடன் சேர்ந்த பாம்பு பிடிக்கச் சென்றான்''.

''குறவர்கள் பாம்பைப் பிடித்து அதன் பற்களைப் பிடுங்கிவிட்டு மகுடி ஊதி அதை ஆட்டுவார்கள். அதன் ஆட்டத்தைப் பார்த்து ரசிக்கும் மனிதர்கள் அதற்குப் பணம் கொடுப்பார்கள். பாம்பு பிடிக்கும் போது, பாம்பு பலருக்குக் கடிக்கும். குறவர்கள் பச்சிலை வைத்தியம் செய்வார்கள். சிலர் தப்பி விடுவர். ஓரிருவர் இறந்தும் விடுவர். அவர்களுக்குப் பாம்பு பிடிப்பதில் பழக்கம் உண்டு. ஆனால் எம்மவருக்குப் பழக்கம் இல்லை''.

“**மு**ருகேசனது இனத்தவர் ஒருவர் அவர்கள் கொடுத்த சாராயத்தைக் குடித்துவிட்டு அவர்களுடன் சேர்ந்து பாம்பைப் பிடிக்க முற்பட்டபோது, அது கொத்திவிட்டது. அதனால் அவர் அந்த இடத்திலேயே இறந்துவிட்டார். அதனால் மிகவும் எச்சரிக்கையாக இருங்கள்” என்று தாத்தா சொன்னவர். அதைக் கேளாது குறவர்களின் சாராயத்திற்கு ஆசைப்பட்டு குறவர்களுடன் பாம்பு பிடிக்கச் சென்ற எனது மாமா பாம்பு கடித்து இறந்துவிட்டார். அவர் சாராயம் குடித்திருந்தமையால் பாம்பு கடித்தது அவருக்குத் தெரியாது. வீட்டுக்கு வந்து படுத்தவர் எழும்பவில்லை” என்றது மாறன்.

“**பெ**ரியவர்கள் சொல்வதெல்லாம் நடைபெறும். அதிபர், முருகேசன் தாத்தா, கதிரேசன் தாத்தா எல்லோரும் நல்லவர்கள். கற்றவர்கள். அதனால் அவர்கள் சொற்படி நடந்தால் நல்ல வாழ்வு கிடைக்கும். அதிபரின் சொற்களைக் கேட்டு நடந்தவர்கள் தான் இன்று எமது சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள். இவ்வளவு காலமும் அதிபரின் சொல்லைக் கேளாத நீ இப்போ கேட்கத் தொடங்கிவிட்டாய். அதனால் நீ உயர்ந்தவனாவாய்” என்றது சுந்தரன்.

**அ**திபர் நேற்று காலையில் நடந்த ஆராதனையின் பின் பேசும் போது தற்பொழுது காட்டுக்குள் பாம்பு பிடிப்பதற்காகக் குறவர்கள் வந்துள்ளார்கள். அதனால் அவர்கள் பாம்பாட்டுவதைப் பார்க்கச் செல்லாதீர்கள்” என்றவர். நான் போகவில்லை” என்றது மாறன்.

“**நா**ன் எவ்வளவோ தீய செயல்களைச் செய்தபோதும் அதிபரும், கதிரேசன் தாத்தாவும், முருகேசு தாத்தாவும் என்னை வெறுக்காது புத்திமதிகள் சொன்னமையால் தான் நான் திருந்தினேன். நல்லவர்கள் ஒருபோதும் கோபிக்க மாட்டார்கள். எதிரிகளை வெறுத்தொதுக்க மாட்டார்கள். சுடுசொற்களைப் பேசமாட்டார்கள். அதனால் தான் தீயவர்கள் கூட அவர்களை மதிக்கின்றனர். என்னைத் திருத்துவதற்குக் கதிரேசன் தாத்தா பட்ட வேதனை எனக்குத் தெரியும். அதனால் இனி நான் தீய செயல்களைச் செய்ய மாட்டேன்” என்றது மாறன்.

## 11. நல்இணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்



“முன்பென்றால் எனது மைத்துனர்களைக் காணாது ஒரு நிமிடம் கூட இருக்கமாட்டேன். பாடசாலைக்குச் செல்லாது அவர்களுடன் காடு முழுவதும் சுற்றித்திரிவேன். காட்டின் எல்லைப் பகுதிகளில் இருக்கும் வீடுகளுக்குச் சென்று அவர்களின் வீட்டுக் கூரைகளில் ஏறி விளையாடுவோம். தென்னை மரங்களில் ஏறி குரும்பைகளைக் கடித்துக் குதறுவோம். மாமரங்களில் ஏறி மாங்காய்களைப் பறித்து எறிந்து விளையாடுவோம். இவையெல்லாம் தவறு என்று அதிபர் சொன்ன பின்பு நான் திருந்திவிட்டேன். இப்போது எனது மைத்துனர்களைக் கண்டால் எனக்குப் பிடிப்பதில்லை. முன்பு செய்தவற்றை நினைக்க வெட்கமாக உள்ளது” என்றது சுந்தரன்.

“ஒருவர் சேரும் இடம் அறிந்து சேருதல் வேண்டும். தீயவர்களோடு சேரக்கூடாது என்று கதிரேசன் தாத்தா சொல்லும் போது அதை நாம் பெரிதாக எடுப்பதில்லை. இப்போ அதை உணர்ந்த பின்பு முன்பு செய்ததை நினைக்க வெட்கமாக உள்ளது. அறியாத வயதில் அறியாமை காரணமாகச் செய்துவிட்டோம். இனி அப்படியான செயல்களைச் செய்யக் கூடாது” என்றது மாறன்.

“நல்ல குணமில்லாதவர்களுடன் சேரக்கூடாது என்பதை நீ அறிந்து கொண்டாய். நானும் உணர்ந்து கொண்டேன்” என்றது சுந்தரன்.

## 12. அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்



முருசேகனிடம் அவரது மகள் வந்து சொன்னாள், “அப்பா, என்னுடைய கணவரின் தாயாருக்கு வருத்தம் கடுமையாம். மகனைப் பார்க்க விரும்புகிறாராம்”.

“மகனைத் தனியே அனுப்பாதே.

தகப்பனையும் கூடச் செல்லச் சொல்'' என்றது முருகேசன்.

''**அ**வர் வியாபார விடயமாக வேறொரு காட்டுக்குச் சென்றுவிட்டார். நாளைக்குத்தான் வருவார்''.

சுந்தரனை அல்லது மாறனை அழைத்துச் செல்லச் சொல். முன்புதான் இருவரும் தீயவர்களின் நட்பால் தீயசெயல்களைச் செய்தவர்கள் இப்போ திருந்தி நல்லவர்களாகி விட்டனர். தனியே அனுப்பாதை. அது இருண்ட காட்டுப் பகுதி மனிதரின் நடமாட்டம் அதிகம் உள்ள இடம். தனியே செல்வது ஆபத்து. மனிதர்கள் காட்டு மிருகங்களைக் கண்டால் ஆராயாது கொன்று விடுவார்கள்'' என்றது முருகேசன்.

**மு**ருகேசனது பேரன் சுந்தரனது வீட்டுக்கு வந்தபோது சுந்தரன் அங்கிருக்கவில்லை. அதனால் மாறனிடம் சென்றபோது, மாறனும் இருக்கவில்லை. அதனால் முருகேசனது பேரனுக்குக் கவலையாக இருந்தது. பேர்த்தியார் தன் மீது காட்டும் அன்பை நினைத்துப் பார்த்தபோது அதற்குத் துக்கம் மேலிட்டு அழுகை அழுகையாக வந்தது. ''பேரா, நீதான் எனது உயிர். நன்றாகப் படிக்கவேண்டும். தீயவர்களுடன் சேரக்கூடாது. எம்மைப் பிறர் மதிக்க வேண்டுமானால் நாம் நன்றாகப் படிக்க வேண்டும்'' என்று சொல்லிச் சுவையான உணவுகளை அடிக்கடி செய்து தருபவர். பாசமேலீட்டால் முருகேசனது பேரனது மனம் துடிதுடித்தது. அதனால் தனியே செல்வோம் என்று முடிவெடுத்து செல்லத் தொடங்கியது.

**வெ**கு நேரம் நடந்து சென்ற போதும் பேர்த்தியாரின் வீடுவரவில்லை. எதிரே வெட்டவெளிதான் தென்பட்டது. அதன்பின்புதான் தான் பாதைமாறி வந்துவிட்டது தெரிந்தது.

**அ**து மனிதர்கள் நெல்விதைக்கும் வயல். பலர் இயந்திரங்கள் மூலம் உழுதுகொண்டிருந்தனர். அதைப் பார்க்கப் பயமாக இருந்தது.

**த**டுமாறியபடி திரும்பி வந்தபோது பாதை தெரியவில்லை. பேர்த்தியின் வீட்டுக்குச் செல்லாது திரும்பிச் சென்ற போதும் வந்த பாதையும் தெரியவில்லை. அதற்குப் பயமாக இருந்தது. ''பேரா, இக்கட்டான நிலையில் கூடத் தனியே பிரயாணம் செய்யக் கூடாது. தெரிந்த பாதையானாலும் விபத்து நேர்ந்தால் துன்பம் உண்டாகும். எதிரிகள் தாக்கப்பார்ப்பார்கள். காட்டில் திசை தெரியாது வழிமாறினால் வழியைக் கண்டுபிடிக்க முடியாது அலைய வேண்டும்'' என்று தாத்தா கூறியமை நினைவுக்கு வந்தது. இருட்டவும் தொடங்கியது. பயத்துடன் தடுமாறியபடி வந்தபோது? ''யார் நீ? எங்கிருந்து வருகிறாய், இந்த வழியாக யாரும் வருவதில்லை. நீ தடுமாறுவதைப் பார்த்தால் பாதை மாறி விட்டாய் போலத் தெரிகிறது'' என்று ஒரு குரல் கேட்டது. பயத்துடன் அது திரும்பியபோது எதிரே ஒரு மான் நின்றது. மானைக் கண்டதும் அதன் பயம் நீங்கியது, ''நான் முருகேசன் தாத்தாவின் பேரன்

அவரது மகனின் வீட்டுக்குச் செல்கிறேன். அம்மாவின் தாயாருக்கு வருத்தம் கடுமையாக இருப்பதால் அவர் என்னைப் பார்க்க விரும்புகிறார் அதனால் செல்கிறேன்.

"**அ**தற்காகத் தனியே வரலாமா?" இது பொல்லாத காடு முருகேசனை எனக்குத் தெரியும் வா அழைத்துச் செல்கிறேன் என்றது.

**அ**ப்போது தான் முருகேசனது அறிவு அதற்குப் புரிந்தது, "இனிமேல் தனியே எங்கும் போகக் கூடாது என்று முடிவெடுத்தது".

## 13. அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்



**கா**ட்டின் எல்லையில் வாழும் தனிகாசலம் என்ற மனிதன் காட்டை அழித்து பல்வேறு வகையான பழமரங்களையும் தென்னை மரங்களையும் நட்டிருந்தார். அவை வளர்ந்து பூத்துக் காய்க்கத் தொடங்கின. அதனால் காட்டு மிருகங்கள் தணிகாலசத்தினது தோட்டத்துள் நுழைந்து அங்குள்ள மரங்களில் உள்ள பிஞ்சுகளையும், காய்களையும் பறித்தன. அதனால் மனமுடைந்த தணிகாசலம் பலரைக் காவலுக்கு வைத்தார். அவர்கள் ஆயுதங்கள் வைத்திருந்தனர்.

**அ**ன்று மாலை நேரம் சுந்தரனின் நண்பர்கள் பலர் சுந்தரனைக் காட்டில் இருந்த குளக்கரையில் சந்தித்தனர், "சுந்தரா முன்பென்றால் அடிக்கடி எம்மைத் தேடி வருவாய். இப்போது உன்னைத்தேடி வந்தாலும் உன்னைக் காண முடிவதில்லை" என்றது ஒரு குரங்கு.

"**இ**ப்ப அவர் அதிபரோடும் கதிரேசன் தாத்தாவுடனும் சேர்ந்து எமக்குப் புத்திமதி சொல்கிறார்" என்றது மான்.

"**அ**வர் சொல்லட்டும் இப்ப நாங்கள் வந்தது ஏன் தெரியுமா?" என்று கேட்டது குரங்கு.

"**ந**ல்லதற்கா வந்திருப்பீர்கள் ஏதாவது தீய செயலைச் செய்ய என்னையும் அழைத்துச் செல்ல வந்திருப்பீர்கள்" என்றது சுந்தரன்.

“**ச**ரியாகச் சொன்னாய். தணிகாசலத்தின் தோட்டத்தில் இம்முறை மரங்கள் யாவும் அதிகமாகக் காய்த்துள்ளன. அவற்றை நீதான் சத்தமில்லாது பறித்து வந்து தருவாய்” என்றது மான்.

“**நா**ன் முன்பு அறியாமையால் உங்களுடன் சேர்ந்து தீய செயல்கள் பலவற்றைச் செய்து விட்டேன். அவற்றை இப்போது நினைத்தாலும் வேதனையாக உள்ளது. தணிகாசலம் பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டுப் பழத்தோட்டத்தை உருவாக்கியுள்ளார். அங்கு சென்று களவெடுப்பதோ அல்லது அங்கு விளையாடுவதோ கூடாது. அடுத்தவர்களுக்கு நாம் நன்மை செய்ய வேண்டுமே தவிர தீமை செய்யக் கூடாது. முன்பு தோட்டத்தைச் சுற்றிப் பாதுகாப்பாக வேலி அமைத்திருந்தவர் இப்போ மனிதர்களைப் பாதுகாப்புக்காகப் பணம் கொடுத்து அமர்த்தி ஆயுதங்களும் கொடுத்துள்ளார்”.

“**இ**ரவில் அவர்கள் அயர்ந்து தூங்கும்போது சத்தமில்லாமல் சென்று திருடலாம்” என்றது ஒரு குரங்கு.

“**உ**ங்களுக்கு கதிரேசன் தாத்தாவும், முருகேசன் தாத்தாவும் எவ்வளவு புத்திமதிகளைக் கூறியிருப்பர். முக்கியமாகத் தணிகாசலத்தின் தோட்டத்திற்குப் போக வேண்டாம் என்றவர். ஒருவருக்கு நாம் தீங்கு செய்தால் அவர் எமக்குத் தீங்கு செய்வார். கடவுள் எமக்கு வேண்டியவற்றையெல்லாம் காட்டுக்குள்ப் படைத்துள்ளார். மனிதர்கள் தமக்கு வேண்டியவற்றைப் பணம்கொடுத்துத்தான் பெறகின்றனர். குளக்கரையில் எத்தனை மாமரங்கள் காய்த்துள்ளன அவற்றையெல்லாம் நீங்கள் மரத்தின் மீது ஏறி விளையாடி நாசப்படுத்திவிட்டீர்கள். கடவுள் தந்தவற்றை நாம் மதித்துப் பாதுகாத்தல் வேண்டும். நீங்கள் தணிகாலசத்திற்குக் கேடு செய்தால் தணிகாசலம் உங்களுக்குத் தண்டணை தருவார். மனிதர்கள் பொருளாதார விடயத்தில் கண்டிப்பானவர்கள். மிகக் கொடுமையாக நடந்து கொள்வர். இப்போ உங்களது அட்டகாசத்தைத் தாங்க முடியாத தணிகாசலம் துப்பாக்கி வாங்கிக் கொடுத்துள்ளார். அவர்கள் நெடுதூரத்தில் இருந்து துப்பாக்கியால் தாக்குவர். அதனால் அங்கு போகாதீர்கள். அதைவிட அடுத்தவரைக் கெடுக்காது ஒழுக்கமாக வாழப் பழகுங்கள்” என்றது சுந்தரன்

“**சு**ந்தரன் சொல்வது சரிதான். கடவுள் எமக்கு வேண்டியவற்றையெல்லாம் இலவசமாகத் தந்திருக்கிறார். அதனால் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்” என்றது மான்.

“**ந**ன்றியைச் சொல்லக் கூடாது செயலில் காட்டுதல் வேண்டும். கடவுளுக்கு நீங்கள் நன்றி செலுத்த விரும்பினால் ஒழுக்கமாக வாழுங்கள். அதனால் கடவுள் மகிழ்வார்” என்றது சுந்தரன்.

## 14. மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்



"**க**திரேசன் தாத்தாவுடனும், முருகேசன் தாத்தாவுடனும், அதிபருடனும் சேர்ந்து சுந்தரன் சாமியாராகிவிட்டான். இனிமேல் அவனை நாம் சந்திக்கவே கூடாது. சந்தித்தால் ஒழுக்கம் அது இது என்று தான் சொல்வான். மனிதர்கள் பேசுவதை நான் கேட்டிரக்கிறேன். அவர்கள் கடவுள் ஒழுக்கம் என்றெல்லாம் பேசுவார்களே தவிர செயற்படுத்தமாட்டார்கள். தணிகாசலத்தின் தோட்டத்தில் வேலை செய்யும் ஒருவன் தணிகாசலத்திற்குத் தெரியாமல் தேங்காய்களைப் பறித்து வியாபாரிகளுக்கு மலிவாக விற்கிறான். மலிவாக தேங்காயை வேண்டும் வியாபாரிகள் அதை வெளியே சொல்வதில்லை. இப்படி ஏராளமான களவுகளைப் பகுத்தறிவுள்ள மனிதர்கள் செய்கின்றனர்" என்றது நரி.

"**ஒ**ருவர் அவ்வாறு செய்கிறார் என்பதற்காக நாமும் அவ்வாறு செய்ய வேண்டியதில்லை. நாம் சுந்தரன் சொன்னதைப் போல ஒழுக்கமாக வாழ்வோம். கடவுள் எமக்கும் தேவையான எல்லாவற்றையும் படைத்து இலவசமாகத் தந்துள்ளார். மனிதர்கள் அவற்றைப்பெற பெரும் பணம் செலவு செய்கின்றனர். பிறகேன் நாம் ஆசைப்படவேண்டும். காட்டில் வசிக்கும் எம் நண்பர்கள் அனைவர்க்கும் இறைவன் உணவைத் தந்தபின் ஏன் நாம் மற்றவர்களின் பொருட்கள் மீது ஆசைப்பட வேண்டும்" என்றது குதிரை.

"**உ**ண்மைதான் ஆசை தான் பாவங்களுக்குக் காரணியாகும். ஆசையை விட வேண்டுமானால் மனதைக் கட்டுப்படுத்த வேண்டும். எம்மைப் பொறுத்தவரை போதியளவு உணவு எமக்கு இருக்கிறது. அளவுக்கதிகமாக இருக்கும் போது நாம் ஆசைப்படக் கூடாது. அதுவும் பிறரின் பொருளில் ஆசைப்படக் கூடாது. மனம் போன போக்கிற்கு நாம் வாழக்கூடாது. மனதைக் கட்டுப்படுத்தினால் ஆசை வராது என்றது முயல்.

"**கா**ட்டில் உள்ள பழங்களை விடத் தணிகாலத்தின் தோட்டத்தில் உள்ள பழங்கள் சுவையானவை" என்றது குரங்கு.

"**இ**க்கரைக்கு அக்கரை பச்சை என்பார்கள். தணிகாசலத்தின் மூன்று வருடங்களாகத்தான் பழங்கள் கிடைக்கின்றன. அதற்கு முன்பு நாம் காட்டில் உள்ள பழங்களைத் தானே உண்டோம். இப்போ நாம் அங்கு சென்றால் உயிரை இழக்க நேரிடும்.

அதனால் மனம் போன போக்கில் வாழ ஆசைப்படாது மனதைக் கட்டுப்படுத்தி வாழப் பழகுங்கள்'' என்றது மான்.

## 15. மாற்றானை உறவென்று நம்பவேண்டாம்



**அ**ன்று மாலைவேளை குரங்கும் நரியும் சந்தித்தன

''**நீ** பலரின் மத்தியில் பேசும் போது உத்தமன் மாதிரிப் பேசுகிறாய். இவ்வாறு நடிக்க எங்கே கற்றுக் கொண்டாய்'' என்று கேட்டது குரங்கு.

''**ச**ந்தர்ப்பங்களுக்கேற்ற மாதிரிக் கதைத்தால் தான் வாழலாம். இப்ப எமது நண்பனாக இருந்த சுந்தரனும் மாறனும் நல்லவர்களாக மாறிவிட்டனர். அதனால் பாடசாலையில் அதிபர் அவர்கள் இருவரையும் புகழ்கிறார். கதிரேசன் தாத்தாவும் முருகேசன் தாத்தாவும் அவர்களை நல்லவர்கள் என்று கூறி அவர்களுடன் அன்பாகப் பழகுகின்றனர். இப்போ நடிப்பவன் தான் கெட்டிக்காரன் பலர் மத்தியில் கதைத்தால் அது அதிபருக்கும், கதிரேசன் தாத்தாவுக்கும் போய்விடும். நல்லவர்களாக நடந்து தீயவற்றை ரகசியமாகச் செய்தால் நல்ல பெயர் வாங்கலாம்'' என்றது நரி.

**அ**ப்போது அங்கே வந்த மான் சொன்னது, ''நானும் நடித்தேன், காட்டில் உள்ள புற்கள் காய்ந்துள்ளன. தோட்டத்தில் உள்ள புற்றகள் பச்சைப் பசேல் என்றிருக்கின்றன. கடந்த இரண்டு நாட்களாக இரவில் தணிகாசலத்தின் தோட்டத்திற்குச் சென்று மேய்ந்தேன். நல்ல புல் அத்துடன் அங்கு வேைல செய்யும் ஒரு மனிதன் பச்சைப் புற்களைப் பிடுங்கி வேலிக்கு வெளியே போடுவான். நல்ல மனிதன்'' என்றது மான்.

''**பு**ல்லைப் போட்டுவிட்டு, ''உள்ளே வா'' என்று அழைப்பானா?''

''**ஓ**ம் உனக்கு எப்படி அது தெரியும்?'' வியப்புடன் கேட்டது மான்.

''**மா**னாரே, மாற்றானை உறவென்று நம்பக் கூடாது. மனிதர்கள் எமது எதிரிகள். அவர்கள் காட்டுக்குள் நுழைந்து மிருகங்களை வேட்டையாவது உனக்குத் தெரியாதா? மனதில் உன்னைப் பிடிக்கத் திட்டம் போட்டுக் கொண்டு, உன்னோடு மிகமிக அன்பாகப்

பழகுவர். பின்பு பேசுவர். நீ அதை நம்பி அவர்களின் அருகில் செய்றால் அவர்கள் உன்னைப் பிடித்துக் கொன்று உண்டு விடுவர்'' என்றது நரி.

**மா**ன் பயந்து போனது, ''அப்படியா? அது தெரியாமல் அந்த மனிதன் என்மீது உண்மையான அன்பு செலுத்துகிறான் என்று நினைத்து அவனின் அருகில் சென்று அவனுடன் பேசவிரும்பினேன்'' என்றது மான்.

''**ந**ல்ல காலம் தப்பிவிட்டாய் இனிமேல் அந்தப் பக்கம் போகாதே. தினமும் ஒரு இடத்திற்குச் சென்றால் மனிதர்கள் அவ்விடத்தில் பொறிவைத்துப் பிடித்து விடுவார்கள். அதனால் வேறு வேறு இடங்களுக்குச் சென்று மேய்'' என்றது நரி.

**இ**வ்வாறு ஆபத்தான வாழ்க்கை வாழ்வதைவிட ஒழுக்கமாக வாழ்ந்தாலென்ன? காய்ந்த புல்லென்றாலும் ஒருபோதும் ஆபத்து வராது. பச்சைப் புல்லுக்கு ஆசைப்பட்டு உயிரை விட வேண்டிய நிலை வந்துவிடும். மனிதர்கள் எம்மைக் கொன்று தின்னவே விரும்புவர். அவர்கள் எமது ஜென்ம விரோதிகள். அதனால் எந்த மனிதரையும் நம்பி உறவு கொள்ளாதே'' என்றது குரங்கு.

''**அ**ன்னியர்களை அன்புன்னவர்கள், நம்பிக்கைக்குரியவர்கள் என்று இனிநான் நம்பமாட்டேன்'' என்றது மான்.

## 16. தனம்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்



**வ**ருடப்பிறப்புக்கு முதல் நாள் காட்டில் வாழும் மிருகங்கள் எல்லாம் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஒன்று கூடும். அன்று கதிரேசன் தாத்தாவின் மக்கள் எல்லோருக்கும் புதிய உடைகள். உணவுப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், கற்றல் உபகரணங்கள் என்பவற்றை வாங்கிக் கொடுப்பார்கள்.

**வி**ழா தொடங்கும் போது கதிரேசன் உரையாற்றுவார், ''அன்பான எனது உறவுகளே. வருடாவருடம் வருடப்பிறப்புக்கு முதல்நாள் நாம் எல்லோரும் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஒன்றுகூடி கலந்து பேசி மகிழ்வோம். எமது பிரதேசத்தில் பலதரப்பட்டவர்கள்

வாழ்கின்றனர். இவர்களில் பலர் ஏழைகள் இங்கு வாழ்கின்ற எல்லோரும் வருடப்பிறப்பன்று புத்தாடை உடுத்து நல்ல சத்தான உணவு வகைகளை உண்டு மகிழ்வாக இருக்க வேண்டும் என்பதற்காகவே எனது மக்களிடம் எல்லோரையும் மகிழ்வுடன் இருக்க வழிவகை செய்யுங்கள் என்றேன்''.

''**எ**னது சொல்லைக் கேட்டு எனது மக்கள் உங்களை மகிழ்விக்கின்றனர். நாளைய தினம் வருடம் பிறக்கிறது. காலையில் எழுந்து நீராடி, கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்கி மகிழ்வுடன் அன்றைய பொழுதைக் கழியுங்கள். யாரும் மது அருந்தாதீர்கள். இளைஞர்கள் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்'' என்றது.

**அ**டுத்துப் பேசிய முருகேசன், ''அன்பான நண்பர்களே, நான் வசதி குறைந்தவன். கதிரேசன் பெருந்தனவந்தர். அதனால் அவர் சம்பாதிக்கும் பணத்தின் பெரும் பகுதியைச் சேமித்து வைக்காது தான தருமம் செய்கிறார். என்னால் இயன்றளவு தாணதருமம் செய்கிறேன். சிலர் தாமும் உண்ணாது, மற்றவர்களுக்கும் கொடுக்காது பணத்தை சேமிக்கின்றனர். அண்மையில் எமக்கு அருகில் உள்ள காட்டில் வசிக்கும் யானையொன்று பெருந்தொனையாக பணத்தைச் சேமித்து வைத்திருந்தது. அதைத் திருடர்கள் அபகரித்துச் சென்றது உங்களுக்குத் தெரியும். நீங்கள் கதிரேசனைப் போலச் தருமம் செய்ய வேண்டாம். உங்களால் இயன்றளவு தருமம் செய்யுங்கள். சபையில் அமர்ந்திருக்கும் சிறுவர்களைப் பாருங்கள் உணவுப்பொருட்களும், இனிப்புக்களும், விளையாட்டுப் பொருட்களும் பெற்றதால் அவர்கள் எவ்வளவு மகிழ்வாக இருக்கிறார்கள் என்று பாருங்கள். மகிழ்வுதான் நாம் மற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடிய உயர்ந்த செல்வம்'' என்றது.

**வி**ளையாட்டுப் பொருட்களையும், இனிப்பு வகைகளையும் பெற்ற சிறுவர்கள் கதிரேசனின் அருகில் வந்து அவரை அணைத்து விளையாடி மகிழ்ந்தனர். பெரியவர்கள் வந்து நன்றி கூறிச் சென்றனர். அதன் பின் கலைநிகழ்வுகள் நடைபெற்றன. கதிரேசன் தாத்தா பழைய சினிமாப் பாடல் ஒன்றை இசையோடு பாடினார். அவர் பாடி முடிய எல்லோரும் மகிழ்ச்சியாரவாரம் செய்தனர். சிறுவர்கள் சிலர், ''ஓடி வினையாடு பாப்பா'' என்ற சிறுவர் பாடலைப் பாடுமாறு கேட்டனர். கதிரேசன் பாடினார். எல்லோரும் அதை மெய்மறந்து கேட்டுக்கொண்டிருந்தனர்.

## 17. தருமத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்



**க**லைநிகழ்ச்சி இடை நிறுத்தப்பட்டபோது கதிரேசன் பேசினார், “அன்பானவர்களே, எனது மகன் தனது எதிர்காலத்திட்டத்தை அறிவிக்க விரும்புகிறார். அவர் பேசிய பின்பு கலைநிகழ்ச்சிகள் தொடரும்”.

**க**திரேசனின் மகன் மேடைக்கு வந்து, “அன்பானவர்களே, எனது தந்தையின் விருப்பத்தை இவ்வளவு காலமும் நிறைவேற்றி வருகின்றேன். தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை” என்று உங்களுக்குத் தெரியும். அடுத்த வருடம் விவசாயிகளுக்கு விதைகளும், உரமும் வழங்கலாமென நினைக்கிறேன். தருமத்தை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். எனது தந்தை சொல்வார், “தர்மமாகக் கொடுக்கப்படும் பொருளுக்கு இறைவன் அதிகவட்டி போட்டுத் திரும்பத் தருவார் என்று. அதனால் கொடுத்துக் கொண்டேயிரு” என்பார். அது உண்மை. சென்ற வருடம் நான் வருடப்பிறப்பிற்கு முதல் நாள் கொடுத்த பொருட்களின் பெறுமதியை இறைவன் ஓரிருமாதத்தில் திரும்பித் தந்து விட்டார். அதனால் தான் அடுத்த வருடம் விவசாயிகளுக்கு உதவவுள்ளேன். தருமம் என்பது பெருந்தொகையாகக் கொடுப்பதல்ல. தன்னால் முடிந்ததைக் கொடுப்பது தான் தருமம். தருமம் பொருளால் மட்டும் செய்யப்படுவதல்ல. கல்வியாளர் இலவசமாகப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கலாம். அறிவுடையவர்கள் மற்றவர்களுக்குப் புத்திமதி கூறலாம். நோயாளிக்குத் தைரியம் கொடுக்கலாம். சிலர் நோயாளிகளை வெருட்டிவிடுவார்கள். எனது இனத்தவர் ஒருவருக்கு நாக்கில் புண் வந்து பல நாட்களாக மாறவில்லை.

**ந**ரியார் வந்து சுகம் விசாரித்து விட்டு, “உது புற்றுநோய் போலத் தெரிகிறது” என்று கூறிவிட்டுச் சென்று விட்டார். அவர் செய்வதறியாது மயக்கமடைந்து விட்டார். அதைக்கேள்விப்பட்ட எனது தந்தை அவரை அழைத்துச் சென்று உரிய வைத்தியரிடம் காட்ட அப்புண் ஒருசில நாட்களில் மாறிவிட்டது. அதனால் நோயாளிக்குத் தைரியமளிப்பதும் தருமமாகும். இப்படிப் பொருளில்லாமல் பல வழிகளில் தருமம் செய்யலாம். அதனால் உங்களால் முடிந்தளவு தானதருமம் செய்யுங்கள் பொருள், பணம் கொடுத்துதவ முடியாதவர்கள் மனதால் உதவி செய்யுங்கள். உங்களது ஆதரவான அன்பான பேச்சு மருந்தை விட நோயைக் குணப்படுத்தும் தன்மையானது. நேற்று நான் வீதியால் வரும்போது ஒரு மானொன்று வழியில் வயோதிபத்தால் தள்ளாடியபடி நடந்து சென்ற ஒரு கரடியை

அழைத்துச் சென்றதைக் கண்டு நான் மிக்க மகிழ்ச்சி கொண்டு அதன் அருகில் சென்று பரிசுப் பொருட்கள் கொடுத்தேன். எனவே சிறுவர்கள் உதவிகள் செய்தால் நான் பரிசளிப்பேன்'' என்று பேச்சை முடிக்கக் கலை நிகழ்வு மீண்டும் தொடங்கியது.

## 18. சினம்தேடி அல்லலையும் தேட வேண்டாம்



குட்டியானை வந்து தகப்பன் யானைக்குச் சொன்னது, ''அப்பா, நான் பெரிய அளவில் வியாபாரம் செய்வதும், தானதர்மங்கள் செய்வதும் ஓநாய்க்குப் பிடிப்பதில்லை. நான் எல்லோருடனும் அன்பாகப் பேசுவதாலும் பண்பாக நடப்பதாலும் எல்லோரும் பொருட்களை வாங்க என்னிடம் தான் வருகிறார்கள். அத்துடன் இங்கு விளையும் விவசாயப் பொருட்களை வாங்கிப் பட்டணத்தில் விற்கிறேன். அதனால் விவசாயிகள் எல்லோரும் என்னிடம் தான் தமது விளைபொருட்களை விற்பனை செய்வதால் ஓநாய் விவசாயிகளிடம் சென்று தனக்கும் பொருட்களைத் தருமாறு வற்புறுத்துகிறது. சில விவசாயிகள் ஓநாயின் கரைச்சல் தாங்கமுடியாது ஒப்புக் கொண்டால் அவற்றை நிறுத்து வாங்கிவிட்டுக் கடன் சொல்லிவிட்டுச் செல்கிறது. விவசாயிகள் பணத்தைப் பெறுவதற்காகச் சென்றால் அது ஒளித்துவிடுகிறது. அதனால் விவசாயிகள் ஓநாயினது வியாபார நிலையத்தை அடித்து நொருக்கிவிட்டனர். அதை நான்தான் சொல்லிச் செய்வித்தேன் என ஓநாய் எல்லோருக்கும் சொல்லித்திரிகிறது''.

''மகனே, உன்னில் பிழையில்லாவிட்டால் நீ ஏன் பயப்படுகிறாய்? கோபங்கொள்பவன், கோபத்தால் பல துன்பங்களைத் தேடிக்கொள்வான். விவசாயிகளுக்கு உனது குணம் தெரியும் தானே'' என்றது யானை.

''இல்லை அப்பா சிலர் அறியாமை காரணமாக நான் செய்வித்திருப்பன் என்று சொல்கின்றனர். நரிக்கு ஓநாய் பணம் கொடுத்து நான் தான் செய்யச் சொன்னதாகச் சொல்லச் சொல்ல, நரி நான் சொல்லித்தான் செய்ததாகக் கூறுகிறது'' யானைக் குட்டி மிகுந்த கவலையுடன் சொன்னது.

''மகனே, குற்றம் செய்யாதவன் பயப்படத்தேவையில்லை. பொய், பிரட்டு, ஏமாற்று என்பவற்றைப் பலகாலம் செய்ய முடியாது. அதனால் பொருள் கொள்வனவு செய்வதைச்

சிலகாலத்திற்கு விட்டுவிடு எல்லாம் சரிவரும். அதற்காக நீ கோபப்பட்டு எதையும் செய்துவிடாதே. கோபங்கொள்பவனின் மனம் உடலோடு பொருந்தாது. அதனால் பல துன்பங்கள் வரும். இப்போ உன்னை யாராவது குற்றம் சொல்கிறார்களா? தகப்பன் யானை கேட்டது.

“**இ**ல்லை அப்பா. நரியைத் தவிர யாரும் சொல்லவில்லை. நேற்று விவசாயிகள் நரியைப் பிடித்துக் கட்டிவைத்து அடிக்க நரி உண்மையைக் கூறிவிட்டது. அதனால் காவல்துறையினர் ஓநாயைத் தேடி வருகின்றனர். ஓநாய் வேறொரு காட்டுக்குச் சென்றுவிட்டதாக அறிகின்றேன்” என்றது குட்டி யானை.

“**பா**ர்த்தாயா மகனே, ஆராயாமல் கோபிப்பதால் எவ்வளவு பிரச்சினைகள் வந்திருக்கு. இன்னும் பல பிரச்சினைகள் வரும். இதற்காகத் தான் கோபங்கொள்ளாதே என்று சொன்னேன்” என்றது தகப்பன் யானை.

‘**ச**ரியப்பா, நீங்கள் சொல்லும் வரை நான் விவசாயிகளிடமிருந்து பொருளைக் கொள்வனவு செய்யமாட்டேன்’ என்றது குட்டியானை.

## 19. சினந்திருந்தார் வாசல் வழிச் சேரல் வேண்டாம்



**இ**ரண்டு நாட்கள் கழிந்தன. காவல்துறையினர் ஓநாயைத் தேடிப்பிடித்து விசாரித்த போது, ஓநாய் தான் செய்த தவற்றைக் கூறியது. அதனால் காவல்துறை அதிகாரி விவசாயிகளிடம் வாங்கிய பொருள்களுக்கான உரிய தொகையை உடனே கொடுக்கும்படி கட்டளையிட்டார்.

**ஓ**நாய் பெரும் தனவந்தன். அது ஏமாற்றிப் பிழைப்பு நடத்தி வந்தது. குட்டியானை பொருட்களைக் கொள்வனவு செய்தபோது தானும் பொருட்களைக் கொள்வனவு செய்தால் நிறையச் சம்பாதிக்கலாம், ஏமாற்றலாம் என்று நினைத்தே பொருட்களை விவசாயிகளிடம் கொள்வனவு செய்தது.

**கா**வல்துறையினர் ஓநாயை எச்சரித்த பின் விவசாயிகள் அனைவரும் குட்டியானைக்கே தமது விளை பொருட்களைக் கொடுக்கத் தொடங்கினர். குட்டியானை பெரும் தனவந்தனல்ல. அது கொள்வனவு செய்பவற்றை அன்றே விற்று விவசாயிகளுக்குப் பணம் கொடுத்து வந்தது. அதனால் முழுப்பொருளையுத் அதனால் கொள்வனவு செய்ய முடியவில்லை.

**அ**தை அறிந்த ஓநாய் ஊர்ப் பிரமுகரான நரியுடன் சேர்ந்து குட்டியானையிடம் வந்து சொன்னது, ''தம்பீ, உன்னிடம் போதிய பணமில்லை என்று அறிந்தேன். என்னிடம் போதிய பணமுள்ளது. என்னைச் சேர்த்தாயேயானால் இருவரும் சேர்ந்து வியாபாரம் செய்யலாம்'' என்றது.

**அ**தைக்கேட்ட குட்டியானை சொன்னது, ''அப்பாவைக் கேட்காமல் நான் எதுவும் செய்வதில்லை''.

''**அ**ப்பாவைக் கேள். நான் நாளைக்கு வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றது ஓநாய்.

**கு**ட்டியானை வந்து அதைத் தகப்பனுக்குச் சொன்னது, ''மகனே, தீயவர்களோடு சேரக்கூடாது அத்துடன் கோபப்பட்டவரின் வீட்டு வாசளைக் கூட மிதிக்கக் கூடாது என்று பெரியவர்கள் கூறுவார்கள். நீ வயதில் குறைந்தவன் அவரசப்படாதே. பெரும் முதலீடு செய்தால் தற்செயலாக நட்டமேற்பட்டால் அதை உன்னால் ஈடுசெய்ய முடியாது. அதனால் பெரிதாக ஆசைப்படாது உனது பணத்திற்கேற்ப வியாபாரஞ் செய். ஓநாயும் நரியும் தீயவர்கள். தீயவர்களைத் திருத்த முடியாது. திருந்தியது போல நடிப்பார்கள். சந்தர்ப்பம் வாய்க்கும் போது தமது குணத்தைக் காட்டிவிடுவார்கள்'' என்றது தகப்பன் யானை.

''**நா**ங்கள் உங்களுக்குத்தான் பொருட்களைத் தருவோம். நீங்கள் உங்கள் விருப்பப்படி தொழிலைச் செய்யுங்கள்'' என்றனர் விவசாயிகள்.

## 20. குற்றம் ஒன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்



**கு**ட்டியானையிடம் வந்து நரி சொன்னது, ''நீ ஓநாயைப் பற்றிக் குற்றம் சொல்லித்திரிவதாக ஓநாய் சொல்லிக் கவலைப்பட்டது. இப்பொழுது நீ போதிய பணமில்லாததால் விவசாயிகளின் விளைபொருட்கள் முழுவதையும் கொள்வனவு செய்ய முடியாதநிலையில் இருக்கிறாய்.

ஓநாயிடம் போதியளவு பணமிருக்கிறது. அதைப் பங்காளியாகச் சேர்க்காவிட்டால் கடனாகக் கேட்டுப்பெறு பின் வட்டியுடன் முதலைக் கொடு'' என்றது நரி.

''**நா**ன் செய்யும் வியாபாரத்தின் மூலம் வரும் வருமானம் எனக்குப் போதும். வட்டிக்குப் பணம் வாங்கிவிட்டு வட்டிக்கு உழைக்க என்னால் முடியாது. அத்துடன் பங்காக வியாபாரம் செய்யவும் எனக்கு விருப்பமில்லை''. என்றது குட்டி யானை.

**கு**ட்டியானை கதைக்கும்போது நரி குறுக்கிட்டுச் சொன்னது, ''ஓநாய் ஆரம்பத்தில் மிகவும் ஏழையாகத்தான் இருந்தது. கடன்பட்டுத்தான் வியாபாரஞ் செய்து முன்னேறியது''.

''**எ**னது அன்றாடத்தேவைக்கேற்றளவு பணம் எனக்குக் கிடைக்கிறது. யாரும் எப்படியும் தொழிலைச் செய்யப்பட்டும். நான் இப்போது தான் வியாபாரம் செய்ய ஆரம்பித்துள்ளேன். படிப்படியாகத்தான் முன்னேற வேண்டும். நீங்கள் சொல்வது போல நான் யாரையும் குற்றம் சொல்வதில்லை. குறையாகப் பேசியதுமில்லை. ஓநாய் எனக்கெதிராக பல தீய செயல்களைச் செய்தது. என்னில் குற்றம் கண்டது. அதை நீக்க வேண்டிய பொறுப்பு இருந்தமையால்தான் நான் எனது நிலைப்பாட்டைக் காவல்துறையினருக்கும் விவசாயிகளுக்கும் எடுத்துச் சொன்னேன். அதனால் பிரச்சினை தீர்ந்தது. முடிந்த விசயத்தைப் பற்றி ஏன் கதைக்கிறாய். நான் கெட்டவன், குற்றம் சொல்பவன் என்றால் ஏன் என்னோடு சேர்ந்து வியாபாரம் செய்ய விரும்புகிறீர்கள்'' என்று குட்டியானை கேட்டது.

''**ஓ**நாய்க்கு விருப்பமில்லை. நான் தான் சொன்னனான். நீ பணமில்லாததால் வியாபாரஞ் செய்யக் கஷ்டப்படுகிறாய். ஓநாயிடம் கடன் பெற்றால் விரைவில் முன்னேறிவிடுவாய் என்பதற்காகச் சொன்னேன்'' என்றது நரி.

''**வி**ரலுக்கு ஏற்றது தான் வீக்கம் என்பார்கள். அத்துடன் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் என்றும் சொல்வார்கள். அதனால் அளவோடு வியாபாரம் செய்யவே நான் தற்போது விரும்புகிறேன;'' என்றது குட்டி யானை.

''**ந**ல்லவற்றைச் சொன்னால் யாரும் கேட்கமாட்டார்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றது நரி.

## 21. கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்



**மு**யல், குட்டியானையின் நல்ல நண்பன். இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள். அன்று முயலை நரியும், ஓநாயும் சந்தித்தன.

“**எ**ப்படி நண்பா சுகமாக இருக்கிறாயா?” என்று கேட்டது நரி.

“**ந**ன்றாக இருக்கிறேன்” என்று சிரித்தது முயல்.

“**நீ**யும் நானும் குட்டியானையும் ஒன்றாகப் படித்தோம். இப்போதும் நீ என்னுடன் நண்பனாக இருக்கிறாய். ஆனால் குட்டியானை என்னை விரும்புவதில்லை. குட்டியானை வியாபாரஞ் செய்கிறது. அதற்கு ஊரில் நல்ல மதிப்பு. அதனால் விவசாயிகள் தமது விளை பொருட்களைக் குட்டியானைக்கே விற்பனை செய்கின்றனர். ஆனால் குட்டியானையிடம் போதியளவு பணமில்லை. அதன் மீது கொண்ட அன்பின் காரணமாக ஓநாயிடம் பணம் வாங்கித் தருகிறேன் என்று கூறினேன். வேண்டாம் என்று சொல்லாது தத்துவம் பேசுகிறது. பெரிய முதலீடென்றால் நட்டமேற்பட்டால் தன்னால் தாங்க முடியாதாம். அப்ப ஓநாயைப் பங்குதாரராகச் சேர் என்றால் அதுக்கும் விரும்பவில்லை. கடன்படவும் விருப்பமில்லை” என்றபோது முயல் குறுக்கிட்டுச் சொன்னது.

“**யா**னைக்குட்டி ஒழுக்கமானது, நேர்மையானது, கள்ள வேலைகள் செய்யாதது. ஓநாய் அப்படியில்ல கொலை, களவு எல்லாம் செய்வது. கொலை களவு செய்வாரோடு சேரக் கூடாதென்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முன்பு ஓநாயும் விவசாயிகளிடம் பொருளைக் கொள்வனவு செய்துவிட்டுப் பணம் கொடுக்கவில்லை. கலப்படம் செய்து அகப்பட்டதால் கலப்படம் செய்தது விவசாயிகள் என்றும், அது தனக்குத் தெரியாது என்றும் கூறியது. ஒரு பொருள் யாரிடம் இருக்கோ அதற்குப் பொறுப்புக் கூறவேண்டியது வைத்திருப்பவர்தான். யானைக் குட்டி எனது மேலான நண்பன். அது களவு செய்யாது. பொய் சொல்லாது. பிறரை வஞ்சியாது. மாமிசம் உண்ணாது. ஆனால் நீங்கள் இருவரும் அதற்கு எதிர்மாறானவர்கள். சென்ற வாரம் ஒரு காட்டுப் பசுவை நீயும், ஓநாயும் பிடித்துக் கொன்று தின்றீர்கள் என்று கேள்விப்பட்டேன். அதனால் தான் யானைக்குட்டி உங்களுடன் தொடர்புவைக்க விரும்பில்லை. என்னையும் உங்களுடன் சேரவேண்டாம் என்றது. ஒன்றாகப் படித்ததால் நாம் நண்பர்களானோம். இப்போ நீ தீயசெயல்களைச் செய்வதால் தான் யானைக்குட்டி விலகியது. இனி நானும் சேரமாட்டேன். கொலையும், களவும் பஞ்சமா பாதங்கள். அவற்றைச் செய்வாரோடு சேர்ந்தால் அந்தப்பழி எம்மையும் சாரும். அதனால் இனி நான் உன்னுடன் பழகமாட்டேன்” என்றது முயல்.

## 22. கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்



“**நீ** படிக்கும்போது நன்றாக இருந்தாய். அத்துடன் என்னுடன் மிகவும் அன்னியோன்யமாகவும் அன்பாகவும் பேசினாய். இப்போது பண்டிதரோடு சேர்ந்த பின்பு என்னை வெறுக்கிறாய். பண்டிதர் கற்றவர், அறிவுள்ளவர் அவர்தான் உனக்குப் புத்திமதி என்ற பேரில் தவறானவற்றையெல்லாம் உபதேசிக்கிறார். கற்றவர் இவ்வாறு ஒருவரைப்பற்றி ஆராயாது பேசலாமா? அவர்தான் கற்றவர் அவரது பிள்ளைகள் அல்லது இனத்தவர்கள் கற்றவர்களா? ஒருவர் இன்னொருவர் மாதிரி எப்படி வாழ்வது. அப்படி வாழ முடியுமா?” என்று கேட்டது ஓநாய்.

“**ஒ**ருவர் இன்னொருவரைப் போல வாழ முடியாது. பண்டிதரான மான் சாந்தமானது, அமைதியானது. கற்றபடி வாழ்வது. அடுத்தவர்களுக்குத் துன்பம் செய்யாதது. தவறான வழியில் வாழபவர்களை அன்பாகப் பேசி நல்வழியில் வாழவைப்பது. நீங்கள் இருவரும் அப்படியானவர்கள் அல்ல. தீயசெயல்களைச் செய்பவர்கள். அத்துடன் ஒழுக்கமாக வாழ்பவர்களை ஆசை வார்த்தைகள் கூறிக்கெடுப்பவர்கள். அதனால்தான் உங்கள் இருவரையும் வெறுத்தேன். பண்டிதர் நன்றாகக் கற்றவர். கற்றபடி வாழ்பவர். தீமைகள் எதுவும் செய்யாதவர். எல்லோராலும் விரும்பப்படுபவர். அவரையே தீயவர் என்று சொல்லும் உங்களை நான் எப்படி மதித்து நட்புக் கொள்வது. ஒருவர் ஒழுக்கமாக வாழ்ந்தால் அவருக்கும் நன்மை அவரோ சேர்த்தவர்க்கும் நன்மை. ஊருக்கும் நன்மை. உங்களால் உங்களுக்கும் தீமைதான் வருகிறது. உங்களோடு சேர்ந்தவர்களுக்கும் தீமைதான் வருகிறது. ஊருக்கும் தீமைதான் வருகிறது என்றது” முயல்.

**ஓ**நாய் யோசித்துப் பார்த்தது. முயல் சொல்வது உண்மை. அதனால் யாரும் என்னை மதிப்பதில்லை. அதனால் நல்லபடி முயலோடு பேசுவோம் என நினைத்தது, “நண்பா, நீ சொல்வது சரி. நான் பல தீமைகளைச் செய்ததால் தான் எல்லோரும் என்னை வெறுக்கின்றனர். நீ எனது உண்மையான நண்பன். உனக்காக நான் எதையும் செய்வேன். அதனால் இனிமேல் நான் தீயவற்றைச் செய்யமாட்டேன்” என்றது.

“**சொ**ல்வது இலகு, செயற்படுவது சிரமமானது. நீ எத்தனை முறை இனிமேல் நான் தீய செயல்களைச் செய்யமாட்டேன் என்று கூறிவிட்டு மறுநாள்ச் செய்தாய். உன்னை நான் நம்பமாட்டேன். பண்டிதர் சுற்றவர் அவரை மதிக்க வேண்டும் என்று சொன்ன நீ இப்போது

பண்டிதரைப் பற்றி அவதூறாக எனக்குச் சொன்னாய். நீ சொல்வது உனக்கே தெரியாது அதனால்தான் திரும்பவும் அவற்றைச் சொல்கிறாய். சொல்லும்போது சொல்வது என்ன என்பதைப் புரிந்து கொண்டால் பின் பேசும் போது தவறு ஏற்படாது. புரிந்து பேச வேண்டும். பேசுவது என்ன என்பதை உணர்ந்து பேச வேண்டும். அப்படிப் பேசினால் தவறு ஏற்படாது. நீ நல்லவற்றை உடனே மறந்துவிடுகிறாய். ஆனால் தீயவற்றை ஒருபோதும் மறப்பதில்லை. பண்டிதர் கற்றவர் பண்பானவர் என்று சொல்லிவிட்டு அவர் தான் என்னைக் கெடுத்தது என்று கூறுகிறாய். கற்ற ஒருவர் பண்பாகவும், ஒழுக்கமாகவும் வாழவேண்டும். அவர் அப்படி வாழ்கிறார். கற்ற நீ அவரைப் பழிக்கிறாய். அப்படியான உன்னை எனது நண்பன் என்று எப்படிக் கூறுவது?'' என்று சொல்லிவிட்டுச் சென்றது முயல்.

## 23. கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்



**ஓ**நாயும் நரியும் பண்டிதரின் மாணவர்கள். அவர்கள் படிக்கும் போது நல்ல முறையில் படிப்பதில்லை. ஏனைய மாணவர்களைப் படிக்கவிடமாட்டார்கள். மாணவர்களது அப்பியாசப் புத்தகங்கள், பாடநூல்கள் முதலியவற்றை எடுத்துச் சென்றுவிடுவார்கள். அவற்றை எடுத்தது யார் என்று பண்டிதர் வினாவுவார். யாரும் எதுவும் சொல்லமாட்டார்கள். சொன்னால் ஓநாயும் நரியும் சேர்ந்து சொன்னவரைத் தாக்கிவிடும்.

“**பி**ள்ளைகளே, உண்மையைப் பேச வேண்டும். கண்டவற்றை மறைக்காது கூறவேண்டும். அதனால் ஏதாவது பிரச்சினை வந்தால் நான் இருக்கிறேன். எமது தலைவனான யானை யார் இருக்கிறார். அவரிடம் சொல்லி நீதி வழங்குமாறு கேட்கலாம். பயப்படாதீர்கள். பயப்பட்டால் நல்லகாரியங்கள் எதையும் செய்யமுடியாது. அத்துடன் தீமை செய்பவர்களை இனங்கண்டு அவர்களைத் திருத்தாவிட்டால் அவர்களது எதிர்காலம் பாழாய்ப் போய்விடும். அதற்கு நீங்களும் ஒரு காரணியாகிவிடுவீர்கள். யாராவது பயப்பட்டால் என்னிடம் வந்து இரசகியமாகச் சொல்லுங்கள். நான் நடவடிக்கை எடுக்கிறேன்'' என்றார் பண்டிதர்.

**ஓ**நாய் அதைக் கேட்டுச் சிரித்தது. அது மாணவர்களுக்குச் சொன்னது, “நான் தான் அப்பியாசப் புத்தகங்களையும், பாடப்புத்தகங்களையும் எடுத்தேன். அது உங்களுக்குத் தெரியும். இருந்தும் நீங்கள் சொல்லாமைக்குக் காரணம் பயம்தான். எனது தந்தை வீரன் யாருக்கும் பயப்படமாட்டார். ஆசிரியர் பெரியவரா இல்லைத் தலைவனான யானை தான்

பெரியவரா? எனது தந்தை யானையை மதிப்பதில்லை. ஒரு நாள் அதை எனது தந்தை கொன்றுவிட்டுத்தான் தலைவராவார்'' என்று திமிருடன் சொன்னது.

‘‘**யா**ரும் எதுவும் பேசவில்லை. முயல் சொன்னது, ‘‘நண்பா பயனில்லாத சொற்களைப் பேசாதே தலைவரைப் பற்றிப் பேசக்கூடாது. ஏனென்றால் அவர் நீதியானவர். பண்டிதர் ஒழுக்கமானவர். இருவரும் மனம் வருந்தினாலே சம்பந்தப்பட்டவர்கள் கடவுளால் தண்டிக்கப்படுவர்'' என்றது.

‘‘**மு**யலாரே, நீர் எனது நண்பர். அதனால் தான் நான் உம்மை மன்னிக்கிறேன். இனிமேல் இவ்வாறு பேசக்கூடாது'' என்றது ஓநாய்.

**அ**ன்றிரவு ஓநாயும் அதன் தந்தையும் தலைவனான யானையின் வீரர்களால் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். முயல் வகுப்பறையில் சொன்னது, ‘‘தலைவனான யானைதான் இக்காட்டின் அரசன். நீதியாக அரசாளும் அரசனைப் பற்றிக் குறையாகக் கதைத்தால் தண்டனை கிடைக்கும். நான் பலமுறை சொல்லியும் ஓநாய் கேட்கவில்லை. தலைவனைப் பகைத்தால் உயிரையும் விடவேண்டி வரும்'' என்றது முயல்.

## 24. கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்



**மு**யல் வேகமாக வருவதைக் கண்ட அதன் நண்பரான எலி கேட்டது, ‘‘நண்பா, அவசரமாகப் போகிறாய். என்ன விசேசம். என்னைக் கூடக் கவனிக்கவில்லை'' என்றது எலி.

**உ**ன்னிடம் தான் வந்தனான். இன்று சதுர்த்தியல்லவா காட்டு விநாயகர் கோவிலில் பூசை தொடங்கப் போகிறது. நான் புறப்படும் போது வெளியூரில் இருந்து எனது சகோதரரின் குடும்பம் வந்துவிட்டது. அவர்களை வரவேற்று உபசரித்துவிட்டு வர நேரமாகிவிட்டது. வா...'' என்று அவசரப்படுத்தியது முயல்.

**மு**யலும் எலியும் காட்டு விநாயகர் கோவிலுக்கு வந்தபோது மயில் அழகாகத் தோகையை விரித்து ஆடிக்கொண்டிருந்தது. குயில் இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தது. குரங்கு மேளம் அடித்துக் கொண்டிருந்தது. செவ்வாய், வெள்ளிக் கிழமைகளிலும் சதுர்த்தியன்றும் குயில் பாட மயில் ஆடும். குரங்கு மேளமடிக்கும். அதைப் பார்க்கக் காட்டில் உள்ள மிருகங்களின் குட்டிகள் யாவும் வரும்.

**ப**ண்டிதரான மான், தனது மாணவர்களைக் கண்காணித்துக் கொண்டிருந்தது. பண்டிதர் கண்டிப்பானவர். ஆனால் அந்தக் கண்டிப்பு அன்புடையதாகவே இருக்கும். அவர் வகுப்பில் சொல்வார், “பிள்ளைகளே, கோவில் இல்லாத இடங்களில் குடியிருக்கக் கூடாது. கோவிலில் மணி அடிக்கும் போது அந்த மணியின் ஓசையால் ஊர் முழுவதும் புனிதமாகும். உள்ளங்களும் புனிதமாகும். இறைவனின் நினைவு மனதில் உண்டாகும். அதனால் தீய எண்ணங்கள் விலகிச் செல்லும். புனிதமான இடமான கோவிலில் இறை உணர்வைத் தவிர வேறெந்த நினைவும் இருக்கக் கூடாது. இறைவனின் புகழைத் தவிர வேறெதையும் கதைக்கலாகாது. இறைவனிடம் நல்லவற்றைக் கேட்டால் அவர் மகிழ்வுடன் தருவார். தீயவற்றை ஒருபோதும் கேட்கக் கூடாது. முக்கியமாக எதிரிகளைத் தண்டிக்க வேண்டும், பழிவாங்க வேண்டும் என்று நினைத்து வணங்கக் கூடாது. இறைவன் எவருக்கும் தீங்கு செய்யமாட்டார். உதவிகளையே செய்வார். அதனால் எதிரிகளுக்கும் உதவி செய் இறைவா, அவர்களுக்கு உண்மையைப் புரியவைத்து அவர்களை மகிழ்வுடன் வாழச் செய் என்று வணங்குதல் வேண்டும்” என்பார்.

“**கோ**விலுக்கு வராவிட்டால் எனக்கு நிம்மதியே இல்லை. நாம் அன்று அறியாது செய்த தீமைகளும், அறிந்து செய்த தீமைகளும் மனதைவிட்டுச் சென்றுவிடும். அதனால் எமக்குத் தீமை செய்தவர்கள் மீதும் அன்பு உண்டாகும்” என்றது முயல்.

“**கோ**விலுக்கு வந்து கவலைகள் கஷ்டங்களை இறைவனுக்குச் சொல்லி விட்டால் மனதில் இருந்த சுமை இறங்கிவிடும். இறைவன் எம்மைக் காப்பாற்றுவார் என்ற நிலை ஏற்படும்” என்றது எலி.

**பூ**சாரியான எருது தனது வாயைச் சீலைத் துணியால் கட்டிவிட்டுப் பயபக்தியுடன் தீபம் காட்டியது. தீபஒளியில் பிரகாசமாகத் தெரிந்த காட்டு விநாயகரை எல்லோரும் பயபக்தியுடன் வணங்கினர்.

## 25. வாழாமல் பெண்ணை வைத்துத் திரிய வேண்டாம்



**மு**யல் எருமைக்காளையைத் தேடிக் கொண்டு குளக்கரைக்கு வந்தது. அந்தக் குளத்தைச் சுற்றிப் பல்வேறு வகையான மரங்கள் நின்றன. அதிகமாக நிற்பது பழமரங்கள் தான். அதனால் காட்டு மிருகங்கள் நேரகாலம் பாராது அங்குவரும்.

அது பெரிய குளம் நல்ல நீர்க்குளம்.

**அ**ங்கு வந்தபோது எருமை குளத்தைக் கலக்கிக் கொண்டிருந்தது. அதனால் அது குளிக்குமிடத்திற்கு வெகு தொலைவில் வேறு மிருகங்கள் குளித்துக் கொண்டும், நீர் குடித்துக் கொண்டு இருந்தன. முயலைக் கண்ட மான் சொன்னது, ‘‘நீ எருமையிடமா போகிறாய், அதைத் திருத்தவே முடியாது. மனிதர்கள் கூடத் திருத்தாத மனிதர்களை எருமை என்று தான் ஏசுவர். இது பொதுவான குளம். குளிக்கும் ஏனைய மிருகங்கள் அமைதியாகக் குறிக்கின்றன. எருமை குளம் முழுவதையும் நன்றாகக் கலக்கிய பின்புதான் குளிக்கும். அது குளித்துவிட்டுச் செல்லும் போது பார் உடல் முழுவதும் அழுக்காகவே இருக்கும். உடலைச் சுத்தப்படுத்தத்தான் குளிப்பது. ஆனால் எருமை அப்படியா செய்கிறது. யார் எதைச் சொன்னாலும் அது கேட்பதில்லை. அப்படி ஒரு பிறவி அது’’.

‘‘**மு**யலுக்கு அது தெரியும் காலையில் சந்தித்த அந்த எருமையின் மனைவி, தனது கணவன் தன்னை விட்டுப் பிரிந்து சென்று பதினைந்து தினங்களாகிவிட்டன. பிள்ளைகள் தகப்பனில்லாததால் எனது சொல்லைக் கேட்கிறார்களில்லை. நீ சொன்னால் அவர் கேட்பார். தயவு செய்து அவரை அழைத்து வா’’ என்று சொன்னதால் தான் அது வந்தது.

‘‘**அ**தற்குக் குடும்ப நினைவே இல்லை. மனைவி பிள்ளைகள் மீதும் பாசம் இல்லை. யாராவது காரணமின்றி மனைவியைப் பிரிந்திருப்பார்களா என்ன? அதன் மனைவி நல்ல குணமுள்ள ஒழுக்கமான பெண். கணவனைத் தெய்வமாக மதிப்பது. அப்படிப்பட்ட பெண்ணுடன் வாழத் தெரியாத எருமைக்கு உனது புத்திமதி ஏறுமா?’’ என்று சிரித்தது.

**அ**தைக் கேட்டுக் கொண்டு முயல் எருமைக்கு அருகில் வந்தது. எருமை அதைக் கேலியாகப் பார்த்து அதைக் கவனிகாது குளித்தது முயல் சொன்னது, ‘‘நண்பரே, உம்மைக் காணாது உமது மனைவி பெருந்துன்பப்படுகிறாள். மனைவியோடு சேர்ந்து வாழாமல் பிரிந்து வாழ்வது பெரும்பாவமான செயல். உனது பிள்ளைகள் தாயின் சொல்லைக் கேளாமல் தீய செயல்களைச் செய்கிறார்கள். உனது மனைவி உனக்கு அடங்காமல் நடந்தால் அல்லது உனக்கு விருப்பமில்லாதவற்றைச் செய்தால் கூட அவளைப் பிசகக்கூடாது. அன்பாக எடுத்துச் சொல்லி அவளை மகிழ்வித்து வாழ வேண்டும். ஆனால் உனது மனைவி நல்லவள், ஒழுக்கமானவள், பண்பானவள் பிறகேன் கோபிக்கிறாய். நடந்தவற்றைச் சொல் நான் அவளுடன் கதைக்கிறேன்’’ என்றது முயல்.

**அ**வள் நல்லவள், ஒழுக்கமானவள், பண்பானவள் என்பது எனக்குத் தெரியும். நண்பரோடு ஜாலியாகச் சுற்றித்திரிந்தேன் மாலைவேளை செல்கிறேன்’’ என்றது எருமை.

“உது திருந்தா ஜென்மம். வரும் போதே எனக்குத் தெரியும். மனைவி அன்பாக நடந்தாலும் ஒற்றுமையாக வாழாத பலர் இருக்கிறார்கள். தவறு என நினைத்துப் பிரிபவர்களை நியாயத்தை எடுத்துச் சொல்லிச் சேர்க்கலாம். தவறு செய்யாதபோதும் தமது சுயலாபத்திற்காகப் பிரிபவர்களைச் சேர்த்துவைக்க முடியாது” என்றது எலி.

## 26. மனையாளைக் குற்றம் ஒன்றும் சொல்ல வேண்டாம்



“மனைவி குற்றம் செய்தால் அதை மற்றவர்களுக்குச் சொல்லாமல் மறைப்பவர்கள் தான் ஒழுக்கமானவர்கள். பண்பானவர்கள். மனைவி எந்தவிதமான தவறும் செய்யாத போதும் எருமை தனது மனைவியை விட்டு அடிக்கடி பிரிந்து சென்று விடுகிறது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. பொறுப்புகள் இல்லாமல் வாழத்தான் பலருக்கு விருப்பம். அதற்காகத்தான் சிலர் குடும்பத்தை விட்டுப் பிரிகின்றனர். சிலர் மனைவியைச் சதாகுற்றம் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். இவை இரண்டும் பிழையான செயல்களாகும். குதிரை எப்போது பார்த்தாலும் தனது மனைவியைக் குற்றம் சொல்லிக் கொண்டே இருக்கிறது” என்றது முயல்.

“அது தாயின் சொல்லைத் தான் கேட்கும். தாயின் சொல்லைக் கேட்கத்தான் வேண்டும் அதற்காகத் தாயார் சொல்வதை அப்படியே நம்புவதா? ஆராய்ந்து பார்க்க வேண்டாமா?” என்றது எலி.

“தாய்ப்பாசம் அதன் கண்களை மறைத்துவிட்டது. பெண்குதிரை தன்னை அலங்கரித்தால் தாய்க்குப் பிடிக்காது. தனது இனத்தவர்களுடன் அல்லது தனது பெற்றோருடன் கதைத்தாலும் அதற்குப் பிடிக்காது. தாய் கோள்மூட்டிவிட்டவுடன் ஆண் என்ற திமிரில் குதிரை கண்டபடி கதைக்கும். சில சமயம் காலால் உதைக்கும். அதற்கும் ஒரு மனம் இருக்கிறது. அது வேதனைப்படும் என்று தாய் நினைப்பதில்லை” என்றது முயல்.

“ஒழுக்கமாக வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள், மற்றவர்களின் மனதைப் புரிந்து கொள்ளல் வேண்டும். அப்படிப் புரியாவிட்டால் சண்டை சச்சரவுகள் அடிக்கடி வரும். அது பின் பிரிவுக்கு வழிவகுக்கும். அடுத்து அதுதான் நடக்கப் போகிறது. அது என்னைச் சந்தித்த போது கல்யாணமான ஒரு சில வருடங்களுக்குள் எனக்கு வாழ்வு கசந்து விட்டது. அவருக்கு நான் வேண்டாப் பெண்டாட்டியாகிவிட்டேன். பெண்டாட்டியின் கை பட்டாலும் குற்றம் கால்

பட்டாலும் குற்றம் என்பார்கள். அவர் நான் எதைச் செய்தாலும் குற்றம் காண்கிறார். மிக நுணுக்கமாக நான் பேசுவதை ஆராய்ந்து குற்றம் காண்கிறார். அதனால் எனக்குப் பேசவே பயமாக இருக்கும். பேசாவிட்டாலும் அதற்கும் குற்றம் காண்கிறார். நான் என்ன செய்வது? இந்த நரக வாழ்க்கை எனக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னதைப் பார்த்தால் பிரிவுவரும் போலத் தெரிகிறது'' என்றது எலி.

''**நா**ன் தாய்க்கும் மகனுக்கும் சொல்லக் கூடிய எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். இருவரும் தமது பிடிவாதத்தை விடுவதாக இல்லை. முன்பு ஒருவர் குறைகளைச் சொன்னார். இப்போது இருவரும் சொல்கிறார்கள். ஓயாமல் ஒருவரை ஆராயாது குறை சொன்னால் எப்படிக் கேட்பது. வெறுப்புத்தானேவரும்'' என்றது முயல்.

''**கு**திரை நன்றாகப் படித்தது'' என்று எலி சொல்லும் போது முயல் சொன்னது. ''படிப்பில் என்ன இருக்கு கல்வி எந்த இடத்திலாவது தீமைகளைச் செய்யச் சொல்லியிருக்கா? படிப்பு வேறு பகுத்தறிவு வேறு. எதையும் உடனே நம்பாது ஆராய்ந்து உண்மையை அறிந்தால்தான் பிரச்சினை தீரும்'' என்றது எலி.

## 27. வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்



''**யா**ரும் நியாயத்தை ஒத்துக் கொள்கிறார்களில்லை. குதிரை நன்றாகப் படித்தது. குதிரையின் தாயும் கற்று ஆசிரியையாகத் தொழில் செய்து இப்போது ஓய்வு பெற்றுள்ளது. கற்றவர்களே நியாயத்தை ஒப்புக் கொள்கிறார்கள் இல்லையென்றால் கல்லாதவர்கள் என்ன சொல்வார்கள்'' என்றது எலி.

''**க**ல்லாதவர்களுக்கு நீதி நியாயம் தெரியும். இங்கு யார் கற்றவர்களிடம் ஆலோசனை பெறச் செல்கின்றனர். ஊருக்கெல்லாம் புத்தமதி சொல்கின்ற மான் பள்ளிக்கூடம் சென்றதா? பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்ற பெருச்சாளி பள்ளிக்கூடம் சென்றதா? சென்றவாரம் கற்று ஆசிரியராகக் கடமையாற்றும் வௌவாலுக்கும் வைத்தியம் பார்க்கும் உடும்புக்கும் காணிப்பிரச்சினையால் சண்டை ஏற்பட்டது. சண்டை முடிய வௌவாலும் உடும்பும் யாரிடம் சென்றன. பெருச்சாளியிடம் தானே சென்றன. இருவரினது பிரச்சினைகளையும் தீர விசாரித்த பெருச்சாளி நீதியாக அப்பிரச்சினையைத் தீர்த்து வைத்தது'' என்றது முயல்.

“**நீ** சொல்வது சரிதான் கிராமங்களில் இருக்கும் மனிதர்கள் கூடப் படித்தவர்களிடம் உதவிக்குச் செல்வதில்லை. அவர்களும் ஊர்ப் பெரியவர்களிடம் தானே செல்கிறார்கள்’’

“**ப**டித்தவர்களுக்குத் திமிர் அதிகம். தன்னைவிட அறிவிற் சிறந்தவர்கள் யாரும் இல்லை என்ற நினைப்பு. அந்த நினைப்புத்தான் படித்தவர்களைப் படுகுழியில் தள்ளுகிறது. குதிரைக்குப் பலர் புத்திமதி கூறிவிட்டனர். அதன் மேலாளர் கூட அதை அழைத்துக் குடும்பத்தை விட்டுப் பிரியக்கூடாது. பெண்ணைத் துன்புறுத்துவது பாவம் என்று கூறினவர்’’ என்றது முயல்.

“**கு**திரைக்குத் தற்பெருமை அதிகம். அதனால் அது மேலாளரையும் மதிப்பதில்லை. இவர் எப்படி உந்தப் பதவிக்கு வந்தவர் என்று எல்லோருக்கும் தெரியும் “மேலாளர் என்றால் அலுவலகம் முடியும் வரைதான். வீட்டுக்கு வந்த பின்பும் அவர் எனக்கு மேலாளரோ?’’ என்று குதிரை கேட்டது’’ என்றது எலி.

**தா**ய் மகனை விட மோசமானது, “தனது மகனுக்குப் பெம்பிளையா இல்லை. விவாகரத்துச் செய்தால் நூறுவரும் என்றதாம்’’ என்றது முயல்.

“**இ**ப்போ காடு முழுக்க இதுதான் கதை. தாய் பொல்லாத மனிசி. வாய்க்காரி. அவா புரிசனோடையோ அல்லது இனத்தவரோடையோ எப்பென்றாலும் சமாதானமாக இருந்தவாவோ. உவாவாலை அந்தப் பெண்ணின் குடும்பம் படுகுழியில் விழுந்து மீளமுடியாது அவதிப்படுகிறது’’ என்றது எலி.

“**பெ**ண்ணின் தகப்பன் எனது தகப்பனாரின் நெடுநாளைய நண்பன். அதற்காகத்தான் தாயும் மகனும் ஆராயாது பேசியபோதும் அவர்களை மதித்துச் சென்று கதைத்ததனான். குட்டக் குட்டக் குனிபவனுக்குப் மடையன், குனியக் குனியக் குட்டுபவனும் மடையன். அதனால் இனி நான் போய்க் கதைக்கமாட்டேன்’’ என்றது முயல்.

“**ஒ**ரு முறை சொன்னால் கேட்பவனுக்குத் தான் மறுமுறை சொல்ல வேண்டும். பாவம் அந்தக் குடும்பம்’’ என்றது எலி.

## 28. தாழ்வான குலத்துடனே சேரவேண்டாம்



**தா**ய் ஆடு தனது மகனுக்குச் சொன்னது, ''மகனே, நீ சிறியவன் துள்ளிக்குதிக்கும் வயது. இந்த வயதில் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும்'' என்றபோது குட்டி கேட்டது. ''அவதானம் என்றால் என்ன?''

''**க**வனமாக இருத்தல் வேண்டும். உனக்கு நல்லது கெட்டது தெரியாது. அதை உன்னால் தெரிந்து கொள்ளவும் முடியாது. ஒவ்வொருவரும் நண்பரைத் தேர்ந்தெடுக்கும் போது அவர் நல்லவரா என்று அறிந்தபின்பு தான் சேரவேண்டும். ஏனென்றால் ஆராயாது தீயவர்களுடன் சேர்ந்தால் பிறர் எம்மை மதிக்கமாட்டார்கள். எமக்கும் அவர்களது தீய பழக்கங்கள் தொற்றிக் கொள்ளும்'' என்றது தாய் ஆடு.

''**அ**ப்ப அவர்கள் இழிந்த சாதியோ அம்மா'' என்று கேட்டது குட்டி ஆடு.

''**இ**ல்லை மகனே, உலகில் யாரும் இழிந்த சாதியினர் அல்ல. கடவுள்தான் அனைத்தையும் படைத்தார். உயிர்கள் ஆணவ மிகுதியால் தாம்தான் மேலானவர்கள் என்று நினைத்துத் தம்மை மேலான சாதியினர் என்று கூறிக்கொள்கின்றன. நல்லவர்கள், ஒழுக்கமானவர்கள், பிற உயிர்களின் மேல் இரக்கம் கொண்டவர்கள் இப்படியானவர்கள் தான் உயர்ந்த குலத்தவர்கள். கொலை, கொள்ளை, பிறரைத் துன்புறுத்தல், பிறரது பொருட்களைக் கவர்வோர், மது மாமிசம் உண்போர், உயிர்கள் மீது இரக்கமில்லாதவர்கள் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவர்கள். நரியும் அதன் இனத்தவர்களும் தீயவர்கள். பிறரின் பொருளைக் கவர்பவர்கள். கோவிலுக்குச் சொந்தமான பூமியையும், பிள்ளைகள் இல்லாதவர்களின் நிலத்தையும் தமது பெயரில் கள்ளமாக எழுதிவைத்திருக்கிறார்கள். குடிப்பார்கள் வலியச்சண்டைக்குச் செவ்வார்கள்''.

''**அ**ப்படியா அம்மா?, அதற்காகத் தான் அவர்களுடன் சேர வேண்டாம் என்று சொன்னீர்களா? பண்டிதர் ஐயாவும் அதிபரும் பிள்ளைகளின் பொருட்கள் காணாமல் போனால் நரியின் புத்தகப்பையைத் தான் பார்ப்பார்கள். ஒருநாள் முயலின் பென்சிலை எடுத்த நரி அதைக் குதிரையின் புத்தகப்பையுள் வைத்துவிட்டுப் பிறகு எடுத்துக் கொண்டு போனது என்று

எலி எனக்குச் சொன்னது. அதை நரியின் மீதிருந்த நம்பிக்கையால் நான் நம்பவில்லை'' என்றது குட்டி ஆடு.

''**இ**தற்காகத் தான் இழித்தவர்களுடன் சேரக்கூடாது என்று சொன்னேன். தற்செயலாக அதிபர் குதிரையின் புத்தகப் பையைப் பார்ததிருந்தால் குதிரை தான் திருடியது என்று நினைத்துத் தண்டித்திருப்பர். அதனால் இனிமேல் அதனுடன் சேராதே'' என்றது தாய் ஆடு.

## 29. தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்



''**அ**ம்மா குதிரை நல்ல ஒழுக்கமுடையது. நன்றாகப் படிக்கக் கூடியது. எல்லோருடனும் அன்பாகப் பழகுவது. யானையும் குறை சொல்லாதது. ஆனால் வறுமையானது. அதன் தந்தை நோயாளி அதனால் பாடசாலைக்கு அது ஒழுங்காக வருவதில்லை. சுத்தமான உடையும் அணிவதில்லை. அதிபர் அதற்கு அடிக்கடி உதவி செய்வார். அதனுடன் அதிகமான மாணவர்கள் கதைப்பதில்லை. எனக்கும் கதைக்க விருப்பமில்லை. அது அடிக்கடி வந்து எனக்கருகில் இருந்து கதைக்கும். அப்போது அதன் உடலில் இருந்து துர்நாற்றம் வீசும். என்ன செய்வதென்று பொறுத்துக்கொள்வேன். நரி நீங்கள் சொன்னது போலப் பல தீயசெயல்களைச் செய்தாலும் சுத்தமான உடையை உடுத்தி வரும். வாசனைத் திரிவியங்கள் பூசி வரும். அதனால் அதனுடன் எல்லோரும் விரும்பி விளையாடுவர்'' என்றது குட்டி ஆடு.

''**ம**கனே, குதிரை நல்ல குடும்பத்தைச் சேர்ந்தது. அதன் பெற்றோர் வறியவரானாலும் ஒழுக்கமானவர்கள். பிறரை மதிப்பவர்கள். பிறரின் பொருட்களில் ஆசை கொள்ளாதவர்கள். அதனால் அத்துடன் தான் நீ பழகுதல் வேண்டும். ஒருமுறை குதிரையை எமது வீட்டுக்கு அழைத்துவா. அதற்கு வேண்டிய உதவிகளை செய்வோம்'' என்றது தாய் ஆடு.

''**அ**து மற்றவர்களிடம் எந்தப் பொருளையும் வாங்காது. நான் பாடசாலையில் இயங்கும் சிற்றுண்டிச்சாலையில் ஏதாவது தீன்பண்டம் வாங்கி நான் உண்ணும் போது அதற்குக் கொடுத்தால் அது வாங்காது, ''எனது அம்மா யாரிடமும் எதையும் வாங்கி உண்ணக்கூடாது என்றும் மாணவர்களது அழகான பொருட்களைக் கூட வாங்கிப் பார்க்கக் கூடாது என்றும் சொன்னவா. அம்மாவின் சொல்லை நான் தட்டமாட்டேன். நீ சாப்பிடு என்னை மன்னித்துக் கொள் என்றது. அதனால் நாம் கொடுப்பதை அது வாங்காது'' என்றது குட்டி ஆடு.

“**அ**து உண்மையான உயர்ந்த குலத்தை உடையது. பிச்சை புகினும் கற்கை நன்றே என்ற முதுமொழிக்கு உதாரணமாவது. அதனால் அது எவ்வாறு வாழ்ந்தாலும் அதில் குறை காணாது அன்புடன் பழகு. அப்படிப் பழகினால் அதன் உயர்ந்த குணம் உனக்கும் உண்டாகும். ஏழை எளியவர்களின் வாழ்க்கை முறையை ஒருபோதும் குறை சொல்லக் கூடாது. அவர்கள் ஒழுக்கமுள்ளவர்கள்” என்றது தாய் ஆடு.

## 30. வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரிய வேண்டாம்



**கு**திரைக்குட்டி வந்து ஆட்டுக் குட்டிக்குச் சொன்னது, “நண்பா, எனது தந்தை நோயாளி பலமான வேலைகளைச் செய்யமாட்டார். நான்தான் மூத்தபிள்ளை. எனக்கு மூன்று சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்களும் படிக்கிறார்கள். அதனால் செலவு அதிகம். அப்பா மிகவும் கஷ்டப்பட்டு உழைத்த போதும் போதிய வருமானம் கிடைப்பதில்லை. அதனால் நான் வேலை தேடி வேறு இடத்திற்குச் செல்லலாமென நினைக்கிறேன்”.

“**இ**துபற்றிச் சொல்ல எனக்குத் தெரியாது. அம்மா படித்தவா சொல்ல வேண்டியவற்றைச் சரியாகச் சொல்வா. வா போய் அம்மாவிடம் கேட்போம்” என்றது ஆட்டுக்குட்டி. இதே சாட்டில் அதைக் கூட்டிச் சென்று தனது தாய்க்கு அறிமுகம் செய்ய நினைத்தது.

**கு**திரைக் குட்டி ஆட்டுக்குட்டியின் வீட்டுக்குச் சென்றபோது தாயாரும் குட்டிகளும் மகிழ்வுடன் குதிரையை வரவேற்றன. ஆட்டுக்குட்டி தாய்க்குக் குதிரைக்குட்டி சொன்னதைச் சொன்னது.

“**ம**கனே, உனக்கு இப்போது படிக்கிற வயது. வரும் கஷ்டம் காலப்போக்கில் விலகிவிடும். ஆனால் படிக்கிற காலம் பின்பு வராது. உனக்கு யார் இந்த ஆசையைத் தூண்டியது” என்று கேட்டது தாயாடு.

**நே**ற்று மாலைவேளை நான் குளிக்கச் சென்றபோது எம்மோடு படிக்கும் நரியும் அதன் சகோதரனும் வந்தனர். நரியின் சகோதரன் சொன்னான், “தம்பீ, உனது தந்தை மிகவும் கஷ்டப்படுகிறார். எப்படி உழைத்தாலும் போதியளவு வருமானம் கிடைப்பதில்லை. நான் பிறநகரில் இருக்கும் காடுகளில் இயங்கும் தொழிற்சாலைகளுக்கு வேலையாட்களை

அனுப்புகிறேன். நீ பத்தாயிரம் ரூபா தா. உன்னையும் அனுப்பிவைக்கிறேன். மாதம் முப்பதினாயிரம் ரூபா சம்பளம் தருவார்கள். நீ வேலைக்குச் சேர்ந்ததும் உங்கள் கஷ்டம் நீங்கிவிடும். உனது சகோதரர்களும் படிக்கலாம். அத்துடன் நீங்கள் வசதியாகவும் வாழலாம்'' என்றது. அதுதான் போக நினைக்கிறேன்'' என்றது குதிரைக்குட்டி.

''**ம**கனே, நரியின் சகோதரன் நல்லவன் அல்ல. அவன் இவ்வாறு ஆசைவார்த்தைகள் கூறி மயக்கித் தனது வேலையை முடித்து விடுவான். அவன் இவ்வாறு கதைத்துப் பலரிடம் பணம் பெற்ற பின் ஏமாற்றியுள்ளான். தீயவர்களின் இனிமையான பேச்சு என்றும் தீமையையே தரும். அதனால் உந்த எண்ணத்தை விட்டு விட்டு படி. இளமையில் கஷ்டப்படுவோர் வளர்ந்தபின் வசதியானவர்களாக மாறிவிடுவார்கள். அதனால் நன்றாகப் படி. உனக்குத் தேவையான உதவிகளை நான் செய்கிறேன். ஒருவரிடம் உதவிபெறாமல் இன்னொருவர் வாழமுடியாது. இறைவன் ஏழைகளுக்கு உதவி செய்தால், தான் உதவி செய்பவர்களுக்கு உதவுவான். இதில் வெட்கப்பட எதுவும் இல்லை'' என்றது தாய் ஆடு.

''**ந**ல்லகாலம், ஏமாற இருந்த என்னைக் காப்பாற்றிவிட்டீர்கள். அப்பா தான் கடன்பட்டுக் காசு தாறன் நீபோ என்றவர். நீங்கள் சொல்லாவிட்டால் நாங்கள் கொடுத்து ஏமாந்திருப்போம்'' என்றது குதிரைக்குட்டி.

## 31. மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்



''**அ**ன்ரி, நான் அவசரமாக வீட்டைபோக வேண்டும்'' என்று புறப்பட்டது குதிரைக்குட்டி.

''**ஏ**ன் அவசரப்படுகிறாய்? முதன்முதலாக வந்திருக்கிறாய் சாப்பிட்டுவிட்டுப்போ'' என்றது தாயாடு.

''**நா**ன் இன்னொரு நாளைக்கு வந்து சாப்பிடுகிறேன். என்னை வெளியூருக்கு அனுப்ப வேண்டுமென்று அப்பா விரும்புகிறார். அதற்காக, ''தான் யாரின் காலில் விழுந்தாவது பணம் பெற்றுத் தருகிறேன்'' என்று சொன்னவர். எம்மை நம்பி யாரும் பணந்தரமாட்டார்கள். அப்பாவின் சகோதரன் ஒருவர் இருக்கிறார். அவர் பெரும் தனவந்தன். நாங்கள் ஏழைகள் என்பதால் அவர்கள் எம்மை மதிப்பதில்லை. அப்பா கூலிவேலை செய்வது

பெரியப்பாவின் மனைவிக்கு அவமானமாம். தமது நண்பர்களும், இனத்தவர்களும் அப்பா ஏழை என்பதால் தம்மை மதிப்பதில்லையாம். அதனால் தமது வீட்க்கு எம்மை வரக்கூடாது என்று சொல்லிவிட்டனர். நாங்கள் நல்லது கெட்டதற்குக் கூட அங்கு செல்வதில்லை. அப்பா எப்போவது ஒருமுறை செல்வார். பெரியப்பா அவரை வீட்டுள்ச் செல்லவிடாது வெளியேவைத்துக் கொஞ்சப் பணம் கொடுத்து அனுப்பிவிடுவார்''.

‘‘**இ**ப்படியானவர்களும் இருக்கிறார்களா...?'' என்று கேட்டது ஆட்டுக்குட்டி.

‘‘**நீ** குறுக்கே பேசாதே. நீ சொல்'' என்றது தாய் ஆடு.

‘‘**நா**ன் வெளியூர் செல்வதற்கான பணத்தைப்பெற அப்பா கட்டாயம் தனது சகோதரனின் வீட்டுக்குப் போவார். ஆனால் பெரியப்பா கொடுக்கமாட்டார். அது எனக்குத் தெரியும். இருந்தும் ஒரு நப்பாசையில் அவர் சொன்னதைக் கேட்டுவிட்டு வந்துவிட்டேன். இப்போது நரி ஏமாற்றுக்காரன் என்று சொன்னபின் நான் எனது ஆசையை விட்டுவிட்டேன். அப்படி இருக்க ஏன் பணம். அப்பா போய்க் கேட்டால் அவமானம் தான் வரும்'' என்று அழுதது குதிரைக் குட்டி.

‘‘**அ**ழாதை, மதியாதார் முற்றம் மதித்தொருகால் செல்லாமை கோடி பெறும் என்று ஔவையார் சொல்லியுள்ளார். இவ்வளவு காலமும் உங்களை மதியாதவரின் வீட்டுக்கு செல்வது அழகல்ல. அத்துடன் நீ படி. நீ அறிவுள்ளவன். நன்றாகக் கற்பவன். அதனால் உனக்கு நல்ல தொழில்கிடைக்கும்'' என்றது தாய் ஆடு.

‘‘**அ**ப்பா ஒருமுறை விபத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையில் இருந்தவர். அவரைப் பெரியப்பாவோ, அவரது குடும்பத்தினரோ வந்து பார்க்கவில்லை. அவர்களிடம் வேலை செய்யும் ஒருவனிடம் சிறிதளவு பணமும் உணவுப் பொருட்களும் பெரியப்பா கொடுத்துவிட்டவர். அம்மா அதை வாங்கவில்லை. அது அவர்களுக்குப் பெருங்கோபத்தை உண்டுபண்ணியது. அப்படியிருந்தும் நான் அப்பாவை போகவிட்டது பெரும் பிழை. நான் சென்று அவரைத் தடுக்கப் போகிறேன்'' என்று கூறிவிட்டு விரைவாகச் சென்றது குதிரைக்குட்டி.

‘‘**இ**ப்படியானவர்களும் இருக்கிறார்களா அம்மா?. ஏன் அவர்கள் இவ்வாறு நடந்து கொள்கின்றனர்?. அதிபர் அடிக்கடி ஏழைகளுக்கு உதவிசெய்ய வேண்டும் என்பார். இது அவர்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டது ஆட்டுக்குட்டி.

## 32. மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்



**கு**திரைக்குட்டி வீட்டுக்கு வந்தபோது அதன் தந்தை வீட்டில் இருந்தார். அவர் தனது சகோதரனின் வீட்டிற்குச் சென்றிருந்தால் இவ்வளவு விரைவாக வந்திருக்கமாட்டார். பெரியம்மா அவரை அழைத்து உழைக்காமல் இருப்பதால் தான் மற்றவர்களிடம் கையேந்துகிறீர்கள். நன்றாக உழையுங்கள் என்று குறைந்தது ஒரு மணித்தியாலமாவது பிரசங்கள் செய்திருப்பா. அதனால் அப்பா செல்லவில்லை என்பதை நினைக்கக் குதிரைக் குட்டிக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"**ம**கனே, உனக்கு நம்பிக்கையூட்டியது பெருந்தவறு நான் அண்ணனின் வீட்டுக்குச் செல்லும் போது அதிபரை வழியில் சந்திந்தேன். அவரிடம் உன்னை வெளியூருக்கு அனுப்பப் போவதாகச் சொன்னேன். அவருக்குத் தெரியாமல் நான் எதையும் செய்வதில்லை".

"**அ**வர் சிறிது நேரம் யோசித்துவிட்டுச் சொன்னார், "எனக்கென்றால் நீ, உனது மகனை வெளியூருக்கு அனுப்புவது பிடிக்கவில்லை. அவன் நன்றாகப் படிக்கக் கூடியவன். அடுத்த வருடம் ஏஎல் சோதனை வருகிறது. அவன் நிட்சயமாக அதில் சித்தியடைவான். அதன் பின்பு வேண்டுமானால் அனுப்பு. இப்போது அனுப்பினால் அவன் பத்து பன்னிரண்டு வருடங்கள் கஷ்டப்பட்டுப் படித்த படிப்பு வீணாகிவிடும். கஷ்டப்பட்ட நீ சிரமத்தைப் பாராது இன்னும் சில மாதங்கள் பொறுத்திரு" என்றவர். மூத்தவர், கற்றவர், எம்மீது அக்கறை உள்ளவர் சொல்லும் போது அதைக் கேட்காமல் விடக்கூடாது என்று நினைத்துத் திரும்பி வந்துவிட்டேன். உனக்கு பிடிக்கவில்லையா?".

"எனக்கு மிக்க மகிழ்ச்சி அப்பா. நான் சிறியவன். ஆராயாமல் ஆசை வார்த்தை கூறுவோரின் சொற்களைக் கேட்டு ஆசைப்பட்டு விட்டேன். பின்பு ஆட்டுக்குட்டியின் தாயார் சொன்னதைக் கேட்டு மனம் மாறிவிட்டேன். மூத்தோரின் சொற்களைக் கேட்ட வேண்டும் அத்துடன் மதியாதார் தலைவாசல் மிதிக்கக் கூடாது. எம்மை இவ்வாறு எவ்வளவு நாட்களுக்கு இறைவன் வைத்திருப்பான். எமக்கும் விடிவுகாலம் வரும். நீங்கள் கவலைப்படாதீர்கள்" என்றது குதிரைக்குட்டி.

**ம**கன் வெளியூர் செல்லாவிட்டால் வேதனைப்படுவான் என்று நினைத்த குதிரை மகனின் வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தது.

## 33. முன்கோபக் காரரோடு இணங்கவேண்டாம்



“**நீ**ங்கள், உங்கள் சகோதரரிடம் பணம் கேட்கப் போகிறேன் என்று சொன்ன போது நான் மிகவும் துக்கப்பட்டேன். உங்களது சகோதரன் தனது மனைவியைக் கேளாமல் எதுவும் செய்யமாட்டார். அவர் அனுபவிக்கும் சொத்து முழுவதும் அவரது மனைவியால் சேர்ந்தது. அதனால் அவாவுக்கு அளவுக்கதிகமான திமிர் இருக்கிறது. அதனால் தான் அவா யாரையும் மதிப்பதில்லை. ஒருமுறை எம்மைச் சொந்தமென்று சொல்லத் தனக்கு அவமானமாக இருக்கிறது என்று சொன்னவா. எதையும் ஆராயாது பேசும் அவாவுக்கு எதற்கெடுத்தாலும் கோபம் வரும் வேளைகளில் அவாவுக்குப் பேசுவதென்னவென்று புரியாது. வாய்க்கு வந்தபடி கதைப்பா. அதனால் நீங்கள் பணம் கேட்கப் போனால் கண்டபடி கதைப்பா. சரி கதைத்துவிட்டுத் தந்தாலும் பரவாயில்லை தரமாட்டா. அப்படிப்பட்டவரிடம் நீங்கள் பணத்திற்குப் போவதை நான் தடுத்தால் அது அபசகுணம் என்பீர்கள். அதனால் நான் பேசவில்லை. இப்போ மகன்தான் வெளியூர் செல்லவில்லை என்று கூறியது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது” என்றது பெண் குதிரை.

“**நீ** சொல்வது சரிதான். ஏழைகள் ரோசம், மானம் பார்த்தால் சீவிக்க முடியாது. தம்பி வெளியூருக்குப் போவது எனக்கும் விரும்பமில்லை. நன்றாகப் படிக்கக் கூடியவன் அவன். அதிபர் சொன்னது போல இன்னும் இரண்டொரு வருடம் கஷ்டப்பட்டு உழைத்தால் அவன் பரீட்சையில் சித்தியடைந்து விடுவான். இவ்வளவு காலமும் கஷ்டப்பட்டதற்கு ஒரு பயன் கிடைக்கும். இடையில் விட்டால் படித்ததற்கான பயன் இல்லாமற் போய்விடும். அண்ணி முன்கோபி. எதையும் ஆராயாது ஆணவத்துடன் பேசுவா. என்ன செய்வது கேட்க வேண்டியது எமது கடனாகி விட்டது” என்றது குதிரை.

“**க**வலைப்படாதைங்கோ அப்பா. நான் உழைப்பன். உழைத்து உங்களை மானத்துடன் வாழவைப்பன்” என்றது குதிரைக் குட்டி.

“அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு. நீ கல்வியில் வல்லவன். படித்தால் நல்லதொரு தொழில் பார்ப்பான் என்று அதிபர் அடிக்கடி சொல்வார். உங்களின் அண்ணரின் பிள்ளைகள் படிப்பதில்லை. தீயவர்களுடன் சேர்ந்து விளையாடுகின்றனர். தனது பிள்ளைகள் படிப்பதில்லை என்று உங்களின் அண்ணிக்குக் கவலை. அதைவெளிப்படையாகவும் சொல்வா. “ஒன்டுக்கும் வழியில்லாததுகள் படிக்குது. எல்லாம் இருந்தும் எனது பிள்ளைகள் படிக்கிறார்கள் இல்லை” என்பா. எமது பிள்ளைகள் நன்றாகப் படிப்பதும் அவாவுக்குப் பிடிப்பதில்லை என்றது பெண் குதிரை.

## 34. கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்



நரி குதிரையின் வீட்டக்கு வந்து சொன்னது, “குதிரையாரே நீர் நோயாளி. அதனால் உழைக்க முடியாது கஷ்டப்படுகிறீர். அதனால் பாவம் பார்த்துத்தான் உமது மகனுக்குச் சொன்னேன் வெளியூரில் ஆரம்பத்தில் மாதச் சம்பளமாக முப்பதினாயிரம் ரூபா கொடுப்பார்கள். பின் அதிகரிப்பார்கள். வரிசம், தீபாவளி போன்ற பண்டிகைகளுக்கு நன்கொடையாகப் பணம் கொடுப்பார்கள். இப்போது இரண்டுவருட வேலை ஒப்பந்தத்தில்தான் அனுப்புகிறேன். நன்றாகத் தொழில் செய்தால் முதலாளி தொடர்ந்து வேலை செய்ய அனுமதிப்பார். ஓய்வுபெறும் வரை வேலை செய்யலாம். திருமணமானால் மனைவி பிள்ளைகளையும் அழைத்துச் செல்லலாம். வருடமுடிவில் லாபத்தில் பங்குகொடுப்பார்கள். உமது மகன் இன்னும் இரண்டு வருடங்களுக்குப் படிக்க வேண்டும். பின் வேலை எப்போ கிடைக்குமோ தெரியாது. அதனால் அவனைப் போகவிடு”.

குதிரை பதில் சொல்லாததால் நரி சொன்னது, “என்னிடம் தங்களது பிள்ளைகளை வெளியூருக்கு அனுப்புமாறு பலர் வந்து கேட்கின்றனர். நீ நோயால் உழைக்க முடியாது அவதிப்படுகிறாய் உனது பிள்ளைகளுக்கு நல்ல உணவுவகைகளை வாங்கிக் கொடுக்க உன்னால் முடியுமா...? பாவம் பார்த்துத்தான் கேட்டேன்”.

“குதிரையாரே, நரி மிகமிகத் தந்திரமாகக் கதைப்பதில் வல்லவன். பலரை அவன் தனது கதையால் தான் ஏமாற்றியுள்ளான். இப்போது நீ மறுத்தாலும் அவன் உனது வீடு தேடிவந்து கதையாலை உனது மனதை மாற்ற முயற்சிப்பான். அவதானமாக இரு. அவனது

மயக்கம் தரும் பேச்சால் ஏமாந்துவிடாதே. வெளியூர்களுக்குச் சென்ற பலர் வேலைக் கஷ்டம் காரணமாகவும், பேசிய படி சம்பளம் கொடாமையாலும் திரும்பிவந்து விட்டனர். அதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். அவதானமாக இரு. நன்றாக யோசித்து முடிவெடு'' என்று அதிபர் கூறியது அதன் காதில் ஒலித்தது.

''**இ**துக்கேன் யோசிக்கிறாய். அடுத்த மாதம் நீ பெரும் பணக்காரன்'' என்று நரி சொன்ன போது குதிரை சொன்னது, ''உண்மைதான் நான் பணத்திற்கு எங்கை வோவது? பலரிடமும் கேட்டேன் யாரும் பொறுப்பில்லாமல் தர விரும்புகிறார்களில்லை. நீ இப்ப அனுப்பு மகன் அனுப்பத் தொடங்கியதும் தருகிறேன்''.

''**நா**ன் அனுப்புவதில்லை இன்னொருவர்தான் அனுப்புவது. அவர் பணம் வாங்காமல் அனுப்பமாட்டார். இது நல்ல சந்தர்ப்பம் கைநழுவவிடுவது புத்திசாலித்தனமல்ல'' என்றது நரி.

''**நா**ன் தீரயோசித்துப் பார்த்தேன் பணம் புரட்ட முடியவில்லை. படிப்பு முடியட்டும்'' என்றது குதிரை.

''**வ**லியவாற சந்தர்ப்பத்தை தவறவிடுகிறீர்கள் யோசித்துச் செய்யுங்கள்'' என்றது நரி.

'**எ**ப்படி யோசித்தாலும் பணத்தைப் புரட்ட முடியாது. நீங்கள் உதவி செய்வதற்கு முன் வந்தும் என்னால் எதுவும் செய்யமுடியவில்லை. கடன்படுவதைவிடப் போகாமல் நிற்பது நல்லது. கடன் வட்டியாகப் பெருகிவிடும். அதனால் நான் அவனை அனுப்ப விரும்பவில்லை'' என்றது குதிரை.

''**ஒ**ரு கிழமைக்குள் சொன்னால் சரி'' என்றது நரி.

''**வே**ண்டாம், நான் தீரு ஆலோசித்து முடிவெடுத்துவிட்டேன் .அவன் படிக்கட்டும்'' என்றது குதிரை.

## 35. கணக்கு அழிவை ஒருநாளும் பேச வேண்டாம்



**ஒ**ட்டகம், யானையிடம் வந்து சொன்னது, “ஐயா, நீங்கள் தான் இந்தக் காட்டுக்குத் தலைவர். உங்களது தலைமையில் எல்லோரும் மகிழ்வுடன் வாழ்கின்றோம். எமக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் வர நீங்கள் விடுவதில்லை. ஒரே ஒரு குறைதான் உள்ளது. அதை நீங்கள் ஒரு நொடியில் தீர்க்க முடியும்” என்றது.

“**ந**ரியைப் பற்றித்தானே சொல்ல நினைக்கிறாய். நரி ஏமாற்றுக்காரன், வாங்கிய பணத்தைத் திருப்பித்தராதவன், பொய்க் கணக்குக் காட்டுவான். இவைதானே உனது குற்றச்சாட்டு” என்றது யானை.

“**ஓ**ம் தலைவா, எனது மகனை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக முப்பதினாயிரம் ரூபாவை நரி கேட்டது. முதல் முறை பன்னீராயிரம் ரூபாவும், இரண்டாம் முறை ஏழாயிரம் ரூபாவும், மூன்றாம் முறை பதினொராயிரம் ரூபாவும் கொடுத்தேன். நரி இரண்டாம் முறை பணம் தரவில்லை என்று சொல்லி ஏழாயிரம் ரூபா தந்தால் தான் மகனை அனுப்புவதாகச் சொல்கிறது. நாம் ஏழைகள் அதனால் முழுப்பணத்தையும் ஒரே முறையில் கொடுக்க முடியாது என்றபோது பகுதி பகுதியாகத் தாருங்கள் என்று நரி சொன்னதால் தான் கொடுத்தேன். இதுபோலப் பலரிடம் வாங்கிய காசைத் தான் வாங்கவில்லை என்று நரி சொல்கிறது” என்றது ஒட்டகம்.

“**ந**ரியைப்பற்றி உங்களுக்குத் தெரியும். தெரிந்த பின்பு ஏன் கொடுக்கிறீர்கள். தீர விசாரியாமல் எக்கருமத்தையும் செய்யக்கூடாது. நீங்கள் யாவற்றையும் நேரில் கண்டும், கேட்டும் திருந்துவதாக இல்லை” என்றது யானை.

**ஒ**ட்டகத்தால் பதில்சொல்ல முடியவில்லை, “உங்களில்தான் முழுப்பிழையும் உள்ளது. நரி துட்டன் என்று தெரிந்தும் கொடுத்திருக்கிறீர்கள். இப்போதும் பலர் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கொடுத்துவிட்டு இங்குவந்து என்னைத் தொந்தரவு செய்கிறீர்கள்” என்றது யானை.

**சி**றிது நேரம் பேசாதிருந்த ஒட்டகம் சொன்னது, ‘‘நீங்கள் சொல்வது உண்மை. நரியின் தந்திரமான பேச்சு எம்மைச் சிந்திக்க விடுவதில்லை. வெளியூருக்கு அனுப்பினால் பிள்ளைகளின் எதிர்காலமும் எமது குடும்பத்தின் எதிர்காலமும் நன்றாக இருக்கும் என்ற எண்ணம் மனதில் எழுந்து மற்றவற்றை மறைத்துவிடுகிறது’’ என்றது ஒட்டகம்.

**யா**னையின் கட்டளையை ஏற்றுச் சேவகர்கள் நரியைப் பிடித்துக்கொண்டு வந்தனர். யானை நீதி வழங்குவதில் வல்லது. அது ஒருவர் ஒரு பிரச்சினையைச் சொன்னால் இரகசியமாக எல்லாவற்றையும் ஆராய்ந்து விடும். பின் விசாரணையின்றித் தண்டனை வழங்கும். இது நரிக்குத் தெரியும். நரி யானைக்கு முன்னால் நடுங்கியபடி நின்றது.

‘‘**ந**ரியாரே, குற்றம் செய்யாவிட்டால் ஏன் பயந்து நடுங்க வேண்டும். நீர் குற்றவாளி என்று எனக்குத் தெரியும். குற்றத்தை ஒப்புக்கொள்கிறீரா அல்லது விசாரணையை ஆரம்பிக்கவா?’’ என்றது யானை அதன் குரலில் கோபம் கொந்தளித்தது.

‘‘**கு**ற்றத்தை ஒப்புக் கொள்கிறேன். பணத்தைக் கொண்டு வந்துள்ளேன்’’ என்றது நரி.

‘‘**ந**ரியாரே பணவிடயத்தில் நீர் பல மோசடிகளைச் செய்துள்ளீர். ஒழுங்காகக் கணக்கு வைக்காது கள்ளக் கணக்கு எழுதுகிறீர். மாதாமாதம் வாங்கிய பணத்திற்கு வட்டி கட்டும்போது அதற்கும் கள்ளக் கணக்கு எழுதுகிறீர். இது பாவமான செயல். அதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. இனி இப்படியான ஒரு வழக்கு வந்தால் உமக்குக் கசையடியும், சிறைத்தண்டனையும் வழங்கப்படும்’’ என்றது யானை.

## 36. பொருவார் தம் போர்க்களத்தில் போக வேண்டாம்



**தி**டீரென்று காட்டின் நடுப்பகுதியில் பெருஞ்சத்தம் கேட்டது. மிருகங்கள் யாவும் சத்தம் வந்த திசையை நோக்கி ஓடின. ஓர் இடத்தில் நூற்றுக்கு மேற்பட்ட நரிகள் கோபத்துடன் நின்று ஊளையிட்டன. மறுகரையில் நூற்றுக்கு மேற்பட்ட ஓநாய்கள் சினத்துடன் உறுமின. அவற்றிற்கிடையே அடிக்கடி மோதல் ஏற்படும். அப்போது மிருகங்கள் தூரத்தில் நின்று வேடிக்கை பார்க்குமே தவிரக் கிட்டச் செல்லாது.

**கு**திரை சொன்னது, “தேவையில்லாமல் தம்முள் யார் பெரியவர் என்று தர்க்கித்து அவை போர் செய்கின்றன. இரு பகுதியினருக்கும் புத்திமதி சொல்ல முடியாது. சமாதானமும் செய்து வைக்க முடியாது. ஒவ்வொருவரும் தமக்குள்த் தாம் பெரியவர்கள், உயர்ந்தவர்கள் என்று நினைப்பதால் புத்திமதி கூற முடிவதில்லை. தலைவரான யானையின் சொல்லையும் இரு பகுதியினரும் கேட்பதில்லை. அந்த நேரம் தலைவருக்குப் பயந்து சமாதானமாகச் செல்வதாக ஒப்புக் கொள்வர். இரண்டு நாட்களுள் மீண்டும் சண்டை செய்ய ஆரம்பித்துவிடுவர்”.

“**ஒ**ருமுறை சொன்னால் கேட்பவர்களுக்குத் தான் புத்திமதி கூற வேண்டும். ஒருமுறை குரங்கு புத்திமதி கூற இரு பகுதியினரும் சேர்ந்து குரங்கைக் கடித்தமையால் பலகாலம் குரங்கு நோய்வாய்ப்பட்டிருந்தது. அதன் பின் யாரும் புத்திமதி கூறப்போவதில்லை. சென்றவாரம் கடிபட்ட பத்து நரிகள் பலத்த காயத்துக்குட்பட்டன. பின்பு இரண்டு இறந்து விட்டது. ஏழு ஓநாய்களுக்குக் கடுங்காயம். அப்படியிருந்தும் ஏன் சண்டை செய்கின்றனவென்று தெரியவில்லை” என்றது மான்.

“**எ**ல்லாவற்றிற்கும் காரணம் ஆணவம் தான். நாம் தான் பெரியவர்கள், நாம் தான் கற்றவர்கள், நாம் தான் சாதியில் உயர்ந்தவர்கள், எம்மை வெல்ல யாராலும் முடியாது என்று இரு பகுதியினரும் நினைத்துச் செயலாற்றுவதால் தான் இந்தநிலை. தலைவர் தன்னாலியன்றவரை சொல்லிப் பார்த்துவிட்டார். அதை அவர்கள் கேளாமையால் எதையும் செய்யட்டும் என்று விட்டு விட்டார்” என்றது குதிரை.

“**இ**தற்குக் காரணம் ஏவி விடுவோர்தான். ஒட்டகம் இரு பகுதியினரையும் ஏவிவிட்டுக் கூத்துப் பார்க்கிறது. இருவரும் சண்டை பிடிக்கும்போது அதற்கு லாபம் ஏற்படுகிறது” என்றது குரங்கு.

“**த**லைவர், அவர்கள் சண்டை செய்யும் பொது யாரும் அவர்களுக்கருகில் செல்லாதீர்கள். அவை கோபத்தில் இருப்பதால் ஆராயாது அருகில் செல்வோரையும் தாக்கிவிடும்” என்றவர். அதனால் தான் நாம் தூர இருந்து வேடிக்கை பார்க்கிறோம்” என்றது மான்.

“எம்மால் என்ன செய்ய முடியும்? தனிமையில் இருக்கும்போது இரு பகுதியினருக்கும் புத்தி சொல்ல முடியாது. ஏதாவது சொன்னால் கோபத்தில் கடித்து விடுவார்கள். ஒருமுறை ஓநாய்களுக்கு ஒட்டகம் புத்திமதி சொல்லப் போக ஓநாய்கள் பலவும் சேர்ந்து ஒட்டகத்தைக் கடித்துக் குதறி விட்டன. அதனால் தான் நான் மிக்க வேதனையுடன் அவற்றின் சண்டையைப் பார்க்கிறேன்” என்றது குதிரை.

பெருமூச்சு விட்டது மான், “இவர்களுக்கு மட்டுமல்ல புரிசன் பெண்சாதி சண்டையிட்டாலும் தீர்க்கப் போறவர் தாக்கப்படுகிறார். யாருக்கும் புத்திமதி சொல்ல முடியாது. அறிவாளிகள் எல்லாவற்றையும் உணர்ந்து அமைதியாக இருப்பர். அறிவில்லாதவர்கள் தான் பிரச்சினைப்படுவர்” என்றது மான்.

## 37. பொறு நிலத்தில் ஒருநாளும் இருக்க வேண்டாம்



**ஒ**ட்டகத்தின் பாட்டனார் காட்டுப் பிள்ளையார் கோவிலுக்கு என எழுதிக் கொடுத்த காணிக்குள் பன்றி ஒன்று வந்து வீடுகட்டத் தொடங்கியது. அப்போது பிள்ளையாரை வணங்க வந்த மயில் சொன்னது, “நண்பா, இது ஒட்டகம், பிள்ளையாருக்கென கொடுத்த காணி. அதற்குள் கோவில் நிர்வாகத்தினர் பூந்தோட்டம் அமைக்கவுள்ளனர். நீ யாரையும் கேளாது வந்து வீடு கட்டுவது முறையல்ல. கோவில் காணி எல்லோருக்கும் பொதுவானது. நிர்வாகத்தினர் பூந்தோட்டம் அமைத்தால் எல்லோரும் உதவிசெய்ய வேண்டுமே தவிரச் சொந்தம் கொண்டாடக் கூடாது. அதனால் நீ இதில் வீடு கட்டுவது முறையல்ல” என்றது.

“**நா**ன் கட்டினால் தான் குறை சொல்வீர்கள் நரி பாடசாலைக் காணியைப் பிடித்துக் கமம் செய்கிறது. அதைக் கேட்பீர்களா? அதன் மகன் கோவிலுக்கெழுதிய காணியைக் கள்ள உறுதி முடித்து விற்று விட்டான் அதைக் கேட்டீர்களா? என்னைத்தான் கேளுங்கோ. நான் விடமாட்டன். நிர்வாகம் செய்வதைச் செய்யட்டும்” என்று திமிராகப் பேசியது பன்றி.

**ப**த்துப்பேர் சேர்ந்து மரங்களாகப் வீடுகட்டி கிருகால் கூரையை வேய்ந்தனர். வெளியூருக்குச் சென்றிருந்த ஒட்டகம் மறு நாட்காலை தான் ஊருக்கு வந்தது. வந்ததும் பலர் வந்து பன்றி தான் தோன்றித்தனமாக வீடு கட்டியதைச் சொன்னார்கள். ஒட்டகம் பெரும் சண்டியன். காலால் அடித்தால் பிகிறி பத்தடி தூரத்தில் போய்விழும் ஆனால் நீதியற்ற செயல்களை அது பன்றி ஒருபோதும் செய்யாது.

**ஒ**ட்டகம் வந்து பார்த்தது வீடு அழகாகக் கட்டி முடிக்கப்பட்டிருந்தது. பன்றியின் அருகில் சென்ற ஒட்டகம், “நண்பா, இது பொது நிலம், இதில் வீடு கட்டக்கூடாது. மரியாதையாக வீட்டைப் பிடுங்கிக் கொண்டு போ” என்றது.

‘‘**நா**ன் பிடுங்க மாட்டன். நீ செய்வதைச் செய்’’ என்றது பன்றி.

**ப**ன்றியின் கூட வந்தவர்கள் ஒட்டகத்திற்குப் பயந்து மெல்லச் சென்று விட்டனர், ‘‘கடைசியாகச் சொல்கிறேன் வீட்டைப் பிடுங்கு’’ என்றது ஒட்டகம் பன்றி, பிடுங்கமாட்டன் என்றதும் ஒட்டகம் பின்னங்காலால் ஓங்கிப் பன்றியை உதைத்தது. பன்றி பத்து அடிக்கு அப்பால் சென்று விழுந்தது. ஒட்டகம் வீட்டுள்ச் செல்ல வீடு தானாக கீழே விழுந்தது.

‘‘**இ**ன்னும் பத்து நிமிடத்தில் வீட்டை அப்புறப்படுத்தாவிட்டால் வீட்டுக்குள் உன்னைத் தூக்கிப் போட்டுக் கொழுத்திவிடுவேன்’’ என்றது ஒட்டகம்.

**ப**ன்றி நடுங்கியவாறு வீட்டைப் பிடுங்கி அடுக்கத் தொடங்கியது. ஒட்டகத்திற்குப் பயந்து ஓடியவர்களும் வந்து பன்றிக்கு உதவி செய்தனர். சிறிது நேரத்தில் வீடு அப்புறப்படுத்தப்பட்டது.

‘‘**ம**ரியாதையாக நான் சொல்லும் போது கேட்டிருந்தால் அடி விழுந்திருக்காது. நட்டமும் ஏற்பட்டிராது. பொதுவான இடங்களில் வீடு கட்டினால் பெரும் துன்பம் வரும். நரி பொதுவான இடத்தைப் பிடித்துத் தோட்டம் செய்ததாலும், பாடசாலை நிலத்தைப் பிடித்ததற்காகவும் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். வக்கீல் சென்றும் பிணை கொடுக்காது சிறையில் அடைத்துள்ளனர். உனக்கு அடியோடு முடிந்தது நல்லது. இல்லாவிட்டால் சிறைக்குப் போயிருப்பாய்’’ என்றது மயில்.

## 38. இருதாரம் ஒருநாளும் தேட வேண்டாம்



**ந**ரியொன்று தனது மனைவியுடன் கோபித்துக் கொண்டு அயற்காட்டில் உள்ள தனது சகோதரனின் வீட்டில் சிலகாலம் தங்கியிருந்தது. அப்போது சகோதரனின் உறவினளான ஒரு பெண் நரி அங்கு வந்தது. அதைப்பற்றி நரி கவனம் செலுத்தவில்லை. ஆனால் பெண் நரி அடிக்கடி அதன் அருகில் வந்து கதைத்தது.

**அ**து நரியின் சகோதரனுக்குப் பிடிக்கவில்லை, ‘‘தம்பி, உன்னுடன் கதைக்கும் பெண்ணின் சகோதரர்கள் மிகவும் பொல்லாதவர்கள். முன்பு ஒரு நரி அவளுடன்

கதைத்தபோது சகோதரர்கள் அந்த நரியைப் பலமாகத் தாக்கிவிட்டனர். அவள் கண்ணிப் பெண் நீ திருமணமானவன். மனைவியோடு பிரச்சினைப்படுவது வேறு, அவளை விட்டுப் பிரிவது வேறு. எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் பேசித்தீர்க்க வேண்டுமே தவிரப் பிரியக்கூடாது. பிரிவு பல சிக்கல்களை உருவாக்கும். அதனால் வா உனது வீட்டுக்குப் போவோம்'' என்றது.

''**நா**லைந்து நாட்களுக்குப் பிரிந்திருந்தால் தான் அவளுக்கு எனது அருமை தெரியும். நான் அப்பெண் வலிய வந்து கதைத்தமையால் கதைத்தேன். இனிக் கதைக்க மாட்டேன்'' என்றது.

**அ**ப்படியிருந்தும் அக் கண்ணிப் பெண் நரி தொடர்ந்து வந்து விகடமாகக் கதைத்தது. இரண்டு நாட்கள் செல்ல நரிக்கு அப் பெண் நரி மீது மோகம் பிறந்தது. அதனால் அது அவளோடு தனிமையில் பேச எண்ணி வெளியே சென்றது. பெண்நரி, ஆண்நரி போவதைக் கண்டு அதன் பின்னால் சென்றது. காட்டின் நடுவே குளக்கரையில் இரண்டும் சந்தித்து வெகுநேரமாகக் கதைத்தன. அதனால் பெண்நரி மீது ஆண்நரிக்குக் காதல் உண்டானது. இருவரும் வீட்டை விட்டுப் புறப்படத்திட்டமிட்டனர். அதை அறிந்த பெண் நரியின் சகோதரர்கள் நால்வர் ஆண்நரியின் சகோதரரியின் வீட்டுக்கு வந்து சகோதரனுக்கு நடந்தவற்றைக் கூறினர்.

**ச**கோதரன், தனது தம்பி திருமணமானவன் என்றும் அவனுக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றும் கூறி, தனது சகோதரனுக்குத் தகுந்த தண்டனை வழங்குமாறு கூறியது.

**அ**தனால் பெருங்கோபங்கொண்ட பெண்நரியின் சகோதரர்கள் நால்வரும் ஆண்நரியைக் கட்டிவைத்து அடித்தன.

**அ**வர்கள் பலமாகத் தாக்கிவிட்டுச் சென்றபின் நரியினது சகோதரன் சொன்னது, ''மனைவி இருக்கத்தக்கதாக இன்னொரு பெண்ணை மனதால் நினைப்பதே பாவம். நீ அவளை உன்னுடன் அழைத்துச் செல்லத்திட்டமிட்டால், அதன்பின் என்னை இந்தக்காட்டில் வாழ அவர்கள் விடமாட்டார்கள். நான் வீடு வாசலை இழந்து பரதேசியாகத்தான் திரிய வேண்டும் அத்துடன் இருதாரத்தை ஒருபோதும் விரும்பலாகாது. இருதாரத்தைச் செய்தால் நீ ஒரு கணம் கூட நிம்மதியாக இருக்க முடியாது. இருவருக்குமிடையே நடைபெறும் சண்டை சச்சரவுகளைத் தீர்க்கவும் முடியாது. அதனால்தான் நான் தான் உன்னைக் கண்டிக்கும்படி கூறினேன்'' என்றது சகோதர நரி.

## 39. எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்



**எ**ருமைக்கன்று வந்து தனது தந்தையிடம் சொன்னது, “அப்பா, என்னுடன் படிக்கும் மான்குட்டி என்னை அடிக்கடி கேலி பண்ணுகிறது. எனக்குப் புத்தி இல்லையாம். அதனால் தன்னைப்போல என்னால் படிக்க முடியாதாம். பாடசாலை சென்று வரும்போது வழியில் இருக்கும் குளத்தைக் கண்டால் புத்தகங்களைக் குளக்கட்டில் வைத்துவிட்டு நேரங்காலம் தெரியாமல் குளிக்கிறேனாம். அத்துடன் ஏனைய மிருகங்கள் குளிக்கும் போது குளத்தைக் கலக்குவதில்லையாம். நானும் எனது இனத்தவர்களும் தானாம் குளத்தைக் கலக்குகிறோம். அதனால் மற்றவர்கள் நீரைக் குடிக்க முடியாதுள்ளதாம்” என்று அழுதது.

“**நீ** இப்போது பொய் சொல்லப் பழகிவிட்டாய், நான் வரும்போது வழியில் பாடசாலை அதிபரைச் சந்தித்தேன். அவர் நடந்தவற்றையெல்லாம் விபரமாகச் சொன்னார். மான் குட்டி அமைதியான சுபாவமுடையதாம். எல்லோருடனும் அன்பாகப் பேசுமாம். அடுத்தவரைக் கேலி செய்யாதாம். ஆனால் நீ பாடாசாலையில் ஆசிரியர்களின் சொல்லைக் கேட்பதில்லையாம். எல்லா மாணவர்களுடனும் தேவையில்லாமல் முரண்படுவாயாம். இன்று மான்குட்டியை நீ தாக்கியதால் அது கீழே விழுந்தபோது காலில் காயமுண்டாகி இரத்தம் வந்ததாம். பிறகு அதை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று மருந்து கட்டினவர்களாம். நீ எல்லா மாணவர்களுடனும் முரண்டுவாயாம்”.

“**இ**ல்லை அப்பா, அவர் பொய் சொல்கிறார்” என்று கன்று கூறும்போது தந்தை குறுக்கிட்டுச் சொன்னது, “மகனே, உன்னைப்பற்றி எனக்குத் தெரியும் நீ உனது சகோதரர்களுடன் முரண்பட்டு அவர்களைத் தாக்குவாய். மான்குட்டி மென்மையானது வலிமையற்றது. யாராவது அதட்டினால் கூட அது பயந்து அழும். அப்படிப்பட்ட பலவீனமான மான்குட்டியை தாக்குவது பாவம். பலவீனமானவர்களுடன் பலமுள்ளவர்கள் மோதக் கூடாது. தன்னைவிடப் பலசாலிகளுடன் தான் மோத வேண்டும். அதுவும் காரணமில்லாது யாருடனும் சண்டை செய்யக் கூடாது. நீ மாணவன், ஆசிரியர்களின் சொல்லைக் கேட்டு நடக்க வேண்டும். மூத்தவர்களை மதிக்க வேண்டும். இளையோர் மீது அன்பு காட்ட வேண்டும். உனது மூத்த சகோதரனைப் பார் அவன் எவ்வளவு அன்பானவன், மற்றவர்களை மதிப்பவன். அவன்தான் மான்குட்டிக்கு மருந்து கட்டிவிட்டுப் பத்திரமாக வீட்டுக்குக் கொண்டு சென்று

விட்டவனாம். அவனைப் போல நீயும் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்'' என்றது தந்தை எருமை.

## 40. சேராத இடம் தனிலே சேர வேண்டாம்



''**ம**கனே, உன்னை நினைக்க எனக்கு வேதனையாகவுள்ளது. நீ சேரக்கூடாதவர்களுடன் சேர்வதால் தான் அவர்களது பழக்கவழக்கங்களைப் பழகியுள்ளாய். உன்னுடன் மூன்று நரிக்குட்டிகளும், கீரிக்குட்டிகளும் படிக்கின்றனவாம். அவை பாடசாலைக்கு ஒழுங்காக வருவதில்லையாம். பாடசாலைக்குச் சென்று வந்து புத்தகங்களை மறைத்து வைத்துவிட்டு அவை காட்டில் உள்ள குளத்தில் குளிக்கின்றனவாம். இப்போ நீயும் பாடசாலைக்கு வராது அவர்களுடன் சேர்ந்து திரிகிறாய் என்று அதிபர் சொன்னார்''.

''**ஒ**ருநாள் மட்டும் தான் அப்பா அவர்களுடன் சேர்ந்து குளத்தில் குளித்தேன்''.

''**ம**கனே, யாரும் அக்குளத்தில் குளிப்பதில்லை. அது சேறு நிரம்பிய குளம். அத்துடன் மாரிகாலத்தில் காட்டில் வசித்த முதலை ஒன்று வெள்ளத்தில் அடிபட்டு அந்தக் குளத்திற்கு வந்துவிட்டது. அதனால் அக்குளத்தில் யாரும் குளிப்பதில்லை. சில நாட்களுக்கு முன்பு அதை அறியாத குட்டி ஈன்ற பெண் பன்றி ஒன்று குளிக்கும் போது முதலை அதை விழுங்கியது உனக்குத் தெரியாதா...?''

''**இ**னிமேல் நான் நரிகளுடனும், கீரிகளுடனும் சேரமாட்டேன்'' என்றது கன்று.

''**ம**கனே, இவ்வாறு முன்பும் இரண்டு முறை கூறினாய் இப்போது சேர்ந்து விட்டாய். உனது மூத்த சகோதரர்கள் இருவரும் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்கின்றனர் நன்றாகப் படிக்கின்றனர். ஆசிரியர்களினதும் எனதும் சொற்களைக் கேட்கின்றனர். நீ அதிபரோடும், ஆசிரியர்களுடனும் மதிப்பின்றிப் பேசுகிறாயாம். ஒழுங்காகப் பாடசாலைக்கு வருவதில்லையாம். உன்னை அழைத்து அதிபர் விபரமாக எல்லாவற்றையும் கூறி விட்டாராம். இனி ஒழுக்கமாக இருக்க வேண்டுமாம். தினமும் பாடசாலைக்கு வரவேண்டுமாம். இல்லாவிட்டால் பாடசாலையால் நீக்கிவிடுவேன் என்றார்''.

**எ**ருமைக் கன்று விம்மி விம்மி அழுதது பின், ''அதிபர் எனக்கும் சொன்னவர்'' என்றது.

“மகனே, தீயவர்களுடன் சேர்பவர்களும் தீயவர்களாகி விடுவார்கள். அதனால் தான் பெரியவர்கள் சேரக்கூடாததவர்களுடன் சேரக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். இனிமேல் உனது மூத்த சகோதரர்களுடன் பாடசாலைக்குப் போ. அவர்களுடன் விளையாடு, உனது தீய நண்பர்களுடன் சேராதே” என்றது தகப்பன்.

“நான் இனிமேல் சேரமாட்டன் அப்பா”.

“நான் இனிக் கவனமாக இருப்பேன். நீ எனது சொல்லை மீறி அவர்களுடன் சேர்ந்தால் கடுமையான தண்டனை தருவேன்” என்றது தகப்பன்.

## 41. செய்நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்



எருமைக் கன்றின் தாத்தா வந்து சொன்னது, “பேரா, மான்குட்டியின் தாத்தா எனது நல்ல நண்பர். முன்பு நான் பெரிதாக உழைப்பதில்லை. உழைத்த பணத்தையும் கண்டபடி நண்பர்களுடன் சேர்ந்து செலவு செய்து விடுவேன். அப்போதெல்லாம் மான்குட்டியின் தாத்தா தான் எனக்கு உதவி செய்வார். ஒருமுறை பெருமழையுடன் பலத்த சுழற்காற்றும் வீசியது. அப்போது எமது வீடு முற்றாக அழிந்துவிட்டது. அதனால் எருமையின் தாத்தா எமது குடும்பத்தினரைத் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று தங்க வைத்ததோடு உணவும் உடையும் தந்துதவியது. இது உனது தந்தைக்குத் தெரியும். உனது தந்தையும் என்னைப் போலச் சோம்பேறி. உழைக்கமாட்டான். வேலை செய்யக் கள்ளம் பண்ணுவான். மானின் தாத்தா தான் அவனுக்குப் புத்திமதிகள் கூறி வேலைக்கு அழைத்துச் செல்லும்”.

“சிறு வயதில் உனது தந்தையும் உன்னைப் போலத்தான் பாடசாலைக்குச் செல்லாது ஊர் சுற்றுவான். அதனால் தான் இப்பவும் அவன் கஷ்டப்படுகிறான். மான் குட்டியின் தந்தை உனது தந்தையோடு படித்தவன். இப்போ பெரிய உத்தியோகம் பார்க்கின்றான். இருப்பினும் முன்புபோல எம்முடன் உறவாடுவார்கள். கஷ்டப்படும்போது உதுவுவார்கள். உனது அண்ணா நன்றாகப் படிக்கிறான். பரீட்சையில் சித்தியடைந்தவுடன் அரசாங்கத்தில் தொழில் வாங்கித் தருவதாகச் சொல்லியுள்ளார்”.

அந்தக் குடும்பத்திற்கு நானும் எனது மகனும் அதிகமாகக் கடன்பட்டுள்ளோம். அதனால் நீ மாக்குட்டியுடன் மகிழ்வுடன் பழகு. ஒருபோதும் செய் நன்றி மறக்கலாகாது'' என்றது தாத்தா எருமை.

“மகனே, தாத்தா சொல்வதைக் கேள். நாம் நன்றி மறந்தோமேயானால் எமக்குக் கடவுள் உதவி செய்யமாட்டார்'' என்றது தந்தை எருமை.

“எனக்கு இவையெல்லாம் தெரியாது அப்பா. இனிமேல் நான் மானுடன் மகிழ்வாகப் பேசுவேன். முரண்படமாட்டேன்'' என்றது எருமைக் கன்று.

## 42. ஊரோடும் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்



“பேரா, நீ சின்னப்பிள்ளையல்ல. இந்த வருடம் அரசாங்கப் பரீட்சை எடுக்கவிருக்கிறாய். சேரக்கூடாதவர்களுடன் சேர்ந்து நீ மான் குட்டியின் குடும்பத்தைப் பற்றி மற்றவர்களுக்குத் தரக்குறைவாகக் கூறித்திரிவதாக மான்குட்டியின் தந்தை இங்கு வந்து சொல்லிக் கவலைப்பட்டவர். ஒருவர் தீய செயல்களைச் செய்தாலும் அவரைத் தனிமையில் சந்தித்து சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லும் தகுதி ஒழுக்கமாக வாழும் பெரியவர்களுக்கு மட்டும்தான் உண்டு. உன்போன்ற இளைஞர்களுக்கு நன்மை தீமை தெரியாது. அதனால் யாரைப் பற்றியும் குறையாகக் கூறுதல் கூடாது''.

“நீ மான்குட்டியின் தந்தை குடித்துவிட்டு மோட்டார் சைக்கிலில் வரும்போது விபத்துக்குள்ளாகிவிட்டார் என்று பன்றிக்குச் சொல்லியிருக்கிறாய். பன்றி அதை மான்குட்டியின் தந்தை சரியான குடிகாரனாம். குடித்துவிட்டுக் குடும்பத்தினரோடு பிரச்சினைப்படுவார் என்றும் அயலவர் அவருடன் கதைப்பதில்லை என்றும் கூறியதாம்'' என்றது பேரன் எருமை.

“மானின் வீட்டில் நரியார் பலமுறை திருடியிருக்கிறார். அதை மான் கண்டுவிட்டுப் புத்திமதி கூறி அனுப்பினது. அடுத்தமுறை நரி திருடிய போது அகப்பட்டுவிட்டது. மான் அதைக் காவல்துறையினரிடம் ஒப்படைத்தது. வேறும் பல இடங்களில் திருடியது நரிதான் என்று விசாரணையின் போது தெரியவந்ததால் நரிக்கு ஒருவருடச் சிறைத் தண்டனை கிடைத்தது. அந்த ஆத்திரத்தில் தான் நரி இல்லாத பொல்லாதவற்றை உனக்குக் கூற நீ அதைப் பலருக்கும் சொல்லியிருக்கிறாய். இது நல்லதல்ல'' என்றது தகப்பன் எருமை.

“**பே**ரா, நீ படித்து சித்தியடைந்தாயேயானால் உனக்கு மான் உதவி செய்யும். இப்படி நீ கண்டபடி கதைத்தால் உனது அண்ணாக்கு உதவி செய்வதாகக் கூறிய மான் உதவி செய்யாது. இதையெல்லாம் நீ யோசித்தாயா...? தீயசெயல்களைச் செய்வது உண்மையாக இருந்தாலும் அதைப்பற்றிக் கதைத்தால் தீயவன் பலவிதமான பிரச்சினைகளைத் தருவான். ஒருவர் தீயசெயலைச் செய்யாதிருக்கும் போது செய்ததாகச் சொல்வது மகாபாவமாகும். மான் அன்று விபத்துக்குள்ளானதே தவிர குடித்துவிட்டு விழவில்லை. தயவு செய்து இப்படியான கதைகளைக் கதைத்து எமது உறவைப் பிரித்து விடாதே உனது போக்குச் சரியில்லை. இனிமேல் இவ்வாறு நடந்தால் நான் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டேன்” என்றது தாத்தா எருமை.

## 43. உற்றாரை உதாசீனம் செய்ய வேண்டாம்



“**ம**கனே, நீ உனது சிறிய தாயாரின் மகளின் திருமண வீட்டிற்குப் போகக் கூடாது. அவள் என்னைப் பெரியதாய் என்று நினைக்காது பலரின் முன்னிலையில் அவமானப்படுத்திவிட்டாள். ஊரவை சிரித்தபோது எனக்குப் பெரும் அவமானமாக இருந்தது” என்றது தாய் எலி.

“**பே**ரன் பூட்டனைக் கண்ட பின்பும் உனக்கு ஆணவம் குறையவில்லை. வயது செல்லச் செல்ல தீயகுணங்கள் மறைந்து நல்ல குணங்கள் ஏற்படும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். ஆனால் உனக்கு எல்லாம் தலைகீழாக நடக்கிறது. நேற்று எனது பேரன் பாடசாலைக்குப் போகமாட்டேன் என்று அடம்பிடித்தான். நீ அவனைக் கண்டபடி பேசி அடித்துவிட்டாய். ஒரு விடயத்திற்குத் தண்டனை தீர்வாகாது. அதன்பின் நான் அன்போடு பேச அவன் சம்மதித்துப் பாடசாலைக்குச் சென்றுவிட்டான். முன்பு எதற்கெடுத்தாலும் பாடசாலைகளில் தண்டனை கொடுப்பார்கள். இப்போ அன்பாகப் பேசி மாணவர்களை வசியப்படுத்துகின்றனர்” என்றது மகன் எலி.

“**நீ** கதையை மாத்தாதை. நீ கலியாணவீட்டுக்குப் போனால் நான் உனது உறவையும் துண்டித்து விடுவேன்” என்றது தாய் எலி.

“**நீ** எதையும் செய் நான் போவேன். சென்றவருடம் பெருமழை பெய்தபோது எனது மகள் குட்டியீன்றிருந்தாள். வயலில் நாம் புற்றெடுத்து வாழ்ந்து வந்தோம். மழைநீர் புகுந்ததால் நாம்

மிகவும் கஷ்டப்பட்டோம். அப்போது எல்லோரும் சென்றுவிட்டனர். அவர்கள் தான் வந்து உதவினார்கள். அவர்கள் உதவாவிட்டால் எனது மகளும் ஐந்து பேரப்பிள்ளைகளும் இறந்திருப்பர். உற்றார், உறவினருடன் பிரச்சினைகள் இருந்தாலும் அதைப் பெரிதாக்காது மன்னிக்கப்பழக வேண்டும்'' என்றது மகன் எலி.

''**அ**வைக்கு நாங்கள் எத்தனை உதவிகள் செய்தோம். அதற்காகத்தான் அவர்கள் உதவினார்கள்'' என்றது தாய் எலி.

''**அ**துதானே இயல்பு. நாமும் உதவி செய்யவேண்டும் அவர்களும் உதவி செய்யவேண்டும். மழைபெய்த போது வெள்ளத்தோடு ஒரு பாம்பு வந்து சேர்ந்து எமது இனத்தவர்களை பிடித்துப் பிடித்து விழுங்கியது. அதைத் தனியாக எதிர்க்க முடியுமா...? எல்லோருமாகச் சேர்ந்து பொறி வைத்து அதைப் பிடித்துக் கொண்டு சென்று தூரத்தில் விட்டோம். இதிலிருந்து தனித்து வாழந்தால் பல துன்பங்கள் வருமென்று உனக்குத் தெரியவில்லையா? எனக்கு உறவினர் தேவை. அதுபோல உனக்கும் தேவை. உனக்கு உனது சகோதரியின் பிள்ளைகளைப் பிடிக்காதது போல எனது பிள்ளைகளுக்கு உன்னைப் பிடிக்காது. நீ நெடுக அவர்களைக் காரணமின்றி ஏசுவாய். அதற்காக நான் உன்னோடு கோபித்தால் வயதுபோன நேரத்தில் உன்னைப் பராமரிப்பது யார்'' என்றது மகன் எலி.

**தா**ய் எலி எதுவும் பேசவில்லை. அது சமாதானமாகி விட்டது என்று மகனுக்குப் புரிந்தது. அதனால் அது வெளியே சென்றுவிட்டது.

## 44. பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்



''**அ**ம்மா, இன்று தொடக்கம் மூன்று நாட்களுக்குப் பாடசாலையில் சிரமதானம் செய்யப் போகிறார்களாம். எல்லோரையும் வந்து உதவி செய்யும்படி அதிபர் கூறியுள்ளார். அதனால் அப்பாவையும், அண்ணன்மார் மூவரையும் பாடசாலைக்கு வந்து உதவி செய்யச்சொல்லுங்கள்'' என்றது படிக்கும் எலி.

''**பா**டசாலை இப்போது நல்ல முறையில் நடைபெறுகிறது. முன்பு இருந்த அதிபர், பாடசாலைக்குரிய காணிகளையே பாதுகாக்கவில்லை. இப்போதுள்ள அதிபர் பாடசாலைக்குரிய காணிகளைத் துப்பரவு செய்து

மரங்களை நடுகிறார். பிற்காலத்தில் பாடசாலைக்கு அவை பணத்தை அள்ளித்தரும் என்று சொல்கிறார். அஆதனால் நல்லவற்றைச் செய்பவரை ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் வருவார்கள்'' என்றது தாய் எலி.

''**பா**டசாலைக்கு அருகில் ஒரு வயல்காணி உள்ளது அதை வாங்கினால் விளையாட்டுமைதானமாக்கலாம் என்றும் அதிபர் சொன்னவர். இப்போது நாம் நெடுந்தொலைவில் உள்ள பொதுவிளையாட்டு மைதானத்தில் விளையாட்டுப்போட்டியை வைக்கிறோம். அதனால் பெரும் தொந்தரவு. நாங்கள் தான் தளபாடங்களைக் கொண்டு செல்ல வேண்டும். விளையாட்டுப் போட்டி முடிந்ததும் அவற்றைத் திரும்பவும் பாடசாலைக்குக் கொண்டு வரவேண்டும். அதனால் பாடசாலைக்கு அருகில் உள்ள வயற்காணியை வாங்குவது நல்லது'' என்றது படிக்கும் எலி.

''**யா**ராக இருந்தாலும் நல்லவற்றைச் செய்தால் நாம் ஊக்குவிக்க வேண்டும். உதவவும் வேண்டும். நல்ல காரியங்களைச் செய்யப் பலர் விரும்பமாட்டார்கள். இவர் நல்ல அதிபர், ஒழுக்கம் மிக்கவர், நிதானமானவர், அதைவிடச் சொன்னதைச் செய்பவர். அதனால் கட்டாயம் அவர் வாங்குவார் எனக்கு நம்பிக்கை இருக்கு'' என்றது படிக்கும் எலி.

''**இ**ல்லை அம்மா அவருக்கு எதிர்ப்பும் உண்டு. முன்பிருந்த அதிபர் பாடசாலைக் காணியைப் பிடிக்க முயன்றனவர். இவர் புகழுப்படுவது மற்றவர்களுக்குப் பிடிப்பதில்லை. குறிப்பாகக் கல்வித் திணைக்களத்திற்கே பிடிப்பதில்லை. ஏனென்றால் கல்வியதிகாரிகளின் மனைவிமாரும் இனத்தவர்களும் அருகில் உள்ள பாடசாலைகளில் கற்பிக்காது இருக்கின்றனர். அதை மக்கள் சுட்டிக்காட்ட இலயாமையால் அதிபர் மீது பொறாமைப்படுகின்றனர்'' என்றது மூத்த மகன் எலி.

''**த**ம்பி, இவையெல்லாம் தேவையில்லாத கதை. நல்லதை அதிபர் செய்கிறார். அவர் அதை நல்லபடி நிறைவேற்ற நாம் உதவ வேண்டும். நாம் உதவினால் தான் அதிபர் உற்சாகமாகக் கடமையாற்றுவார். இங்குள்ள மக்கள் பாடசாலையில் விருப்பமுள்ளவர்கள் அவர்கள் கட்டாயமாக உதவுவார்கள்'' என்றது தாய் எலி.

## 45. பிணைபட்டுத் துணை போகித்திரிய வேண்டாம்



**எ**லியின் மூத்தமகன், தாயாரின் அருகில் வந்து நின்றது. அதன் முகம் என்றுமில்லாதவாறு வாடியிருந்தது. அதைப் பார்க்கத் தாய்க்கு வேதனையாக இருந்தது.

"**எ**ன்ன மகனே, ஒருநாளும் இல்லாதவாறு உனது முகம் கலவரமடைந்துள்ளது. சிலநாட்களாக உனது நடவடிக்கைகள் மாறியுள்ளன. ஏதாவது சுகமில்லையா?" என்று கேட்டது தாய் எலி.

**ம**கன் எதுவும் சொல்லாது தாயின் முகத்தைப் பார்த்துக் கொண்டு நின்றது. பின், "அம்மா, எனக்கு அவசரமாகப் பத்தாயிரம் ரூபா தேவையாக இருக்கிறது" என்றது.

"**உ**னக்கேன் இப்பொழுது பணம். என்ன தேவையென்று சொல் தருகிறேன்" என்றது தாய் எலி.

**சி**றிது நேரம் தயங்கிய மகன் எலி, "அம்மா, எனது நண்பனான பிரணவன் வங்கியில் கடன்பெற நான் பிணையாக ஒப்பம் வைத்தேன். அவன் கடனெடுத்ததில் இருந்து பணங்கட்டவில்லை. அதனால் வங்கி முகாமையாளர் பணங்கட்ட இரண்டு நாட்கள் தவணை தந்துள்ளார். கட்டாவிட்டால் காவல்துறையினர் கைது செய்து விடுவார்கள்" என்றது மகன் எலி.

"**மு**ந்தி உன்னைப் பிரியாது திரிபவன் இப்போது ஒருமாத காலமாக வீட்டுப் பக்கமே வரவில்லை. நான் ஏதாவது பிரச்சினையாக இருக்குமென்று நினைத்தேனே தவிர, காசுப் பிரச்சினை என்று நினைக்கவில்லை" என்றது தாய் எலி.

**அ**வன் என்னுடன் படித்தவன். நல்லவன் மாதிரி நடித்து ஏமாற்றிவிட்டான். பலரிடம் இவ்வாறு ஏமாற்றிப் பணம் பெற்றுவிட்டு எங்கோ சென்று மறைந்து விட்டான். பணம் கொடுத்தவர்கள் தேடித்திரிகிறார்கள்" என்றது மூத்த மகனான எலி.

“மகனே, எவருக்காவது பிணையாகக் கையொப்பமிடலாகாது. உனது பெரியப்பா நண்பன் ஒருவனுக்குப் பிணையாகக் கையொப்பமிட்டவர். அவன் வெளியூருக்குப் போய்விட்டான். இப்போது உனது பெரியப்பா தான் பணங்கட்டுகிறார். அவர் ஏற்கனவே கஷ்டப்பட்டவர். இப்போது சாப்பாட்டுக்கே கஷ்டப்படுகிறார். அப்பா தான் உதவி செய்கிறார். அவன் வெளியூரில் நன்றாக இருக்கிறானாம். இங்கு குடும்பம் வசதியாக இருக்கிறது. பெரியப்பா போய்க் கேட்டால் அவன் இருக்கிற இடமே தமக்குத் தெரியாது என்றார்களாம். முன்பு பெருங் கஷ்டப்பட்டவர்கள் இப்போ வசதியாக வாழ்கின்றனர். அவனுடைய மகன் கார் ஒன்று எடுத்திருக்கிறான். இப்போதய காலத்தில் பழிபாவம் பார்க்கக் கூடாது” என்ற தாய் எலி. மகன் கேட்ட பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தது.

## 46. மண் நின்று மண் ஓரம் செல்ல வேண்டாம்



பன்றி வந்து ஒட்டகத்திற்குச் சொன்னது, “என்னிடம் கொஞ்சப் பணம் இருந்தது. அத்துடன் கடன்பட்டு நிலத்தை வாங்கினேன். எனக்கு எட்டுப் பிள்ளைகள். விவசாயம் செய்தால் பிள்ளைகளுக்கும் தொழிலாகுது, வருமானம் வரும் என்று நினைத்துத் தான் நிலத்தை வாங்கினேன். எனது நண்பன் திறமான விளைநிலம் என்று கூறி அந்த நிலத்தை வாங்கித்தந்தான். நட்ட பயிர்கள் குறைத்த விளைச்சளைக் கூடத் தரவில்லை. அதனால் பெரும் நட்டம் ஏற்பட்டுவிட்டது. இப்போது சாப்பாட்டுக்கே மிகவும் கஷ்டப்படுகிறேன். விற்கலாமென்றால் இது களர் நிலம் ஒன்றுக்கும் உதவாது என்று வாங்கிய விலையிலும் பார்க்கக் காற்பங்கு விலை கூடக் கேட்கிறார்களில்லை” என்று அழுதது.

“நண்பா, நீ எனது நெடுங்கால நண்பன். அதனால் சொல்கிறேன். பூமி என்பது தாயைவிட மேலானது. அதில் நாம் நம்பிக்கை வைத்து உரிய முறையில் செயற்பட்டால் பொன்னை அள்ளித்தரும். எதற்கும் உதவாத நிலம் என்று எதுவும் இல்லை அதனால் உரியமுறைப்படி செயலாற்று. நான் விவசாயி எனக்குப் பூமி அள்ளித்தருகிறது. விதைக்கும் நெல்லின் அளவை விட ஆயிரம் மடங்கு நெல்லை எனக்கு வருடா வருடம் அள்ளித்தருகிறது. நீ விதைத்துவிட்டுச் சென்று விட்டாய். விதைத்த நெல்லைப் பறவைகள் உண்டுவிட்டன. பிறகு எப்படி உனக்கு விளைசல் கிடைக்கும்?. விதைத்தால் பறவைகளுக்குக் காவல் இருக்கவேண்டும். சரியாக நீர்ப்பாய்ச்ச வேண்டும். களையெடுத்தல் வேண்டும். கதிர் வந்த பின்பு பறவைகள் கதிரை உண்ண வரும். அதற்கும் காவல் காக்க வேண்டும். வள்ளுவர்

சொல்கிறார், ஒருவன் தனது மனைவியைத் தினமும் அக்கறையுடனும் அன்புடனும் கவனிப்பது போல வயலையும் கவனிக்காது விட்டால் வயல் மனைவியைப் போல பிணங்கி விளையாது என்று சொல்கிறார். இம்முறை நான் உனக்கு உதவி செய்கிறேன்'' என்று கூறிய ஒட்டகம் சகல உதவிகளையுத் செய்தது.

**ப**ன்றியும் அதன் பிள்ளைகளும் கவனமாக ஒட்டகம் சொல்வதைச் செய்தன. அந்தமுறை பெரும் விளைச்சல் கிடைத்தது.

''**எ**ந்தச் செயலையும் முறைப்படி செய்யாது அச் செயல் தவறானது என்று சொல்லக் கூடாது. நிலம் ஒருபோதும் வஞ்சனை செய்யாது. அதை நேசிக்க நேசிக்க அது அள்ளித்தரும்'' என்றது ஒட்டகம்.

''**பூ**மி நீ சொன்னது போல எமது தாய். நான் இனிக் குறை கூறமாட்டேன்'' என்றது பன்றி

## 47. மனஞ்சலித்துச் சிலுக்கிட்டுத்திரிய வேண்டாம்



''**எ**ன்னில் பெரும் பிழையை வைத்துக் கொண்டு நான் முயலைக் கண்டபடி திட்டிவிட்டேன். முயல் எனது நண்பன். நான் படும் கஷ்டங்களைக் கண்டு மனமிரங்கித் தனது சகோதரன் விற்ற வயலை எனக்கு வாங்கித்தந்தது. எனக்கு விவசாயத்தைப் பற்றி எதுவும் தெரியாது. அதனால் வயலை உழுது நெல்லை விதைத்து விட்டு எனது தொழிலைப் பார்த்தேன். பயிர் பெரிதாக முளைக்கவில்லை. முளைத்த பயிர்களும் சரியாகக் கவனிக்காததால் அழிந்து விட்டது. அதை நான் எனது தவறு என்று உணராமல் நட்டமடைந்தமையால் மனம் சலித்து முயலை வாய்க்குவந்தபடி ஏசிவிட்டேன். பலரின் முன்னிலையிலும் ஏசியதால் அது மனமுடைந்து வீட்டை விட்டு வெளியே வராது இருந்தது''.

''**உ**னக்கு நான் எத்தனைதரம் சொல்லியிருப்பேன். ஒவ்வொருவரும் தம்மீது பிழையை வைத்துக் கொண்டு அதைப் பிறர் மீது சுமத்துகிறார்கள். நன்றாகப் படித்த நரி, தனது மகன் சரியாகக் கற்கிறானில்லை என்று கூறி அவனைக் கற்பித்த ஆசிரியர் மீது குற்றம் சுமத்தினார்.

பின்பு ஆராய்ந்து பார்த்தபோது நரியின் மகன் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லாது தனது நண்பர்களுடன் காடுமுழுவதும் சுற்றித்திரிந்தவன் என்ற தகவல் கிடைத்தது. இந்த விடயத்தில் கற்றவர்களும் கற்காதவர்களும் ஒன்றுதான். கற்றவர்கள் ஆராயாது கதைக்கின்றனர்'' என்றது ஒட்டகம்.

"**நா**ன் உண்மையை உணர்ந்த பின் முயலிடம் சென்று என்னை மன்னிக்குமாறு கூறியும் முயல் என்னோடு கதைப்பதில்லை. சென்றவாரம் நடைபெற்ற எனது மகளின் திருமணத்திற்குச் சொல்லியும் வரவில்லை. நான் முன்பு கொடுத்த காசை யாரிடமோ கொடுத்தனுப்பியிருந்தது. முன்பென்றால் எனது வீட்டில் ஒரு கருமம் நடத்தால் குடும்பத்தோடு வந்து கலந்து கொள்ளும். ஐவபவம் முடிந்த பின்பும் தங்கியிருந்து உதவிகள் செய்யும். நான் ஆராயாது கதைத்தமையால் அது என்னை மன்னிக்கவில்லை'' என்றது பன்றி. ஆதன் குரலில் துயரம் தோய்ந்திருந்தது.

"**நீ** ஆராயாது வாய்க்கு வந்தபடி ஏசியும், தூற்றியும் உள்ளதால் அதை அதனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பலரின் மத்தியில் பேசியமையால், பலர் அதை கேலி செய்தனர், சிரித்தனர். தீயினால் சுட்ட புண் ஆறும். நாவினால் சுட்ட புண் ஆறாது என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். நீ ஆராயாது பேசியமையால் ஒரு நல்ல நண்பனை இழந்து விட்டாய்'' என்றது ஒட்டகம்.

## 48. கண் அழிவு செய்து துயர்காட்ட வேண்டாம்



**மு**யல் வந்து ஒட்டகத்துக்குச் சொன்னது, "பன்றி தனக்கு வயல் நிலம் வாங்கித்தருமாறு கேட்டது. அதனால் தான் எனது சகோதரனின் வயலை வாங்கிக் கொடுத்தேன். பலர் அதை விரும்பினர். பன்றி பெருங்கஷ்டப்பட்டது. அதனது பிள்ளைகளும் வறுமையில் வாடினர். அதனால் தான் ஏனையோருக்குக் கொடுக்காமல் பன்றிக்குக் கொடுத்தேன். அதனால் பலர் என்னுடன் கோபித்தனர். பன்றி முறைப்படி வயலைச் செய்யாததால் அதற்குப் பெருநட்டம் ஏற்பட்டது. அதற்கு நானா பொறுப்பு? கண்டபடி அழுதழுது என்னைத் திட்டியது. தான் விட்ட கண்ணீர் எனது குடும்பத்தை அழிக்கும் என்று சாபமிட்டது. அவற்றிற்கெல்லாம் நான் பயப்படவில்லை. செய்வினை சூனியம் செய்வதாலும் திட்டுவதாலும் ஒரு குடும்பம் அழியுமென்றால் கடவுள் என்றொருத்தர் ஏன் இருத்தல் வேண்டும்.

அவரவர் செய்த பாவபுண்ணியங்கள் தான் அவரவருக்குப் பயனாகவும் பிள்ளை குட்டிகளாகவும் வருகிறது. நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டுவிட்டு நிறுத்தியது முயல்.

**ஒ**ட்டகம் எதுவும் பேசாததால் முயல் சொன்னது, ''பன்றி அழுதழுது திட்ட, பன்றியின் மனைவி அழுதழுது மண் அள்ளிப் போட்டுச் சாபமிட்டது. இதுக்கெல்லாம் நான் பயப்படவில்லை. ஏனென்றால் நான் தவறு செய்யவில்லை. தனது துக்கத்தை எல்லோருக்கும் கண்ணீர்விட்டு வெளிப்படுத்திய பன்றி இன்று உங்களின் உதவியோடு முறைப்படி நெல்லை விதைத்துப் பராமரித்து நல்ல விளைச்சலைப் பெற்றுள்ளது. அதை ஏன் மகிழ்வுடன் வெளிப்படுத்தவில்லை?''

''**சி**லர் கண்ணீர்விட்டு அழுதது தமது துயரத்திற்கு முடிவு காண முயல்கின்றனர். இப்போ உண்மையாக அழுதாலும் கவனிப்பாரில்லை. ஏனென்றால் இப்போ கண்ணீர்விட்டு ஏமாற்றப் பார்க்கின்றனர். இவற்றிற்கெல்லாம் நீ கவலைப்படாதே. கடவுளிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டுப் பேசாமல் இரு'' என்றது ஒட்டகம்.

''**எ**னக்கு என்னில் முழுமையான நம்பிக்கை உண்டு. அதனால் தான் பன்றி கண்டபடி பேசி அழுதபோதும் நான் கவனத்தில் எடுக்கவில்லை. இவ்வாறு நடந்த பன்றிக்கு இனிமேல் யாராவது உதவுவார்களா?'' என்று கேட்டது முயல்.

''**எ**னக்கும் உதவ விருப்பமில்லை. சரியாக ஒரு செயலைச் செய்யத் தெரியாது மற்றவர்களைக் குறைகூறியதால் உதவினேன்'' என்றது ஒட்டகம்.

## 49. காணாத வார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்



**ந**ரி வந்து ஆட்டுக்கும் குட்டிகளுக்கும் சொன்னது? ''இன்றுகாலை குளிப்பதற்காக நானும் எனது மைத்துனனும் உச்சுவில் குளத்திற்குப் போனோம்''.

**அ**தைக் கேட்டு ஆடு பதைபதைத்துப் போனது, ''உச்சுவில் குளத்தில் முதலைகள் வாழ்கின்றன. நாங்கள் மேயக்கூட அந்தப் பக்கம் போவதில்லை. நீ ஏன் போனாய்?'' என்று கேட்டது ஆடு.

**ஆ**ட்டின் குட்டிகள் நரியோடு நண்பர்களாக இருந்தன. ஆட்டின் மூத்த மனன் நரியொடு படிக்கிறது.

"**கு**ளிக்கப் போனோம். உங்களது மகனையும் கேட்டேன் அவன் வரவில்லை. குளத்தில் நன்றாகத் குளித்தோம். உச்சுவில் குளம் அகலமானது. பெரிய குளம் அது. முதலைகள் மறுகரையில் தான் நின்றன. நான் அதைப் பார்த்துவிட்டுத் தான் குளத்தில் இறங்கிக் குளித்தேன்'' என்றது நரி.

**ஆ**டு தனது மகனைக் கோபத்துடன் பார்த்தது. பலமுறை நரியுடன் சேரக்கூடாது என்று சொல்லியும் அது கேட்பதாக இல்லை. இப்போது வீட்டிற்குக் கூட்டிவருகிறது. அதனால் ஏனைய குட்டிகளும் நரியுடன் மிகவும் அன்பாகப் பழகுகின்றன. நாளைக்கு அவற்றையும் குளிப்பதற்கு அழைத்துச் சென்றாலும் செல்லும். தாயாரின் சொல்லையும் கேளாதது பாடசாலையில் அதிபரது கட்டுப்பாட்டையும் மீறி நடப்பது ஆபத்தானது. அதனால் ஆடு பயந்தது. அதன் மூத்த மகனுக்குத் தெரிந்தது.

**கா**ட்டில் உள்ள ஏனைய குளங்களில் தண்ணீர் குறைவு. சில குளங்கள் வற்றிவிட்டன. அதனால்தான் சென்றோம். பல நாட்களுக்குப் பிறகு நல்ல முறையில் குளித்தேன;'' என்றது நரி.

**ந**ரி சென்றபின்பு கோபத்துடன் ஆடு சொன்னது, "மகனே, நரியுடன் தமது பிள்ளைகள் சேர்வதை யாரும் விரும்புவதில்லை. உனக்குப் பலமுறை சொல்லியும் நீ கேட்கிறாயில்லை. முதலை நீரின் அடியால் நீந்தி வந்து பிடித்து விடும். நீருக்குள் அதன் பலம் அதிகம். யானையைக் கூடக் கொன்றுவிடும்'' என்று தாய் ஆடு சொல்லும் போது குட்டி குறுக்கிட்டுச் சொன்னது, "அம்மா, நான் அதனுடன் சேர்வதில்லை. இருந்தும் அது வருகிறது. அதிபர் அதனுடன் சேரக்கூடாது என்று சொல்வார். அது என்னைக் குளிக்க வரும்படி கேட்கவில்லை. அது சொல்வதெல்லாம் பொய். இல்லாதவற்றையெல்லாம் இருப்பதாகக் கூறும். தன்னைப் பெரிதாக மதித்துச் செய்யாத செயல்களையும் செய்ததாகக் கூறும். அது சரியான பயந்தாங்கொள்ளி. கதையே தவிர செயலில் எதையும் செய்யாது. அது காலையில் குளிக்கச் செல்லவில்லை. அதன் மைத்துனன் அதனுடன் போகவும் இல்லை. அவன் எனக்குச் சொன்னவன். நீ பயப்படாதை நரியின் கதைகளையும் நம்பாதை'' என்றது குட்டி ஆடு.

**ம**றுநாள்க் காலை அதிபர் நரியையும் அதன் மைத்துனனையும் அழைத்து விசாரித்தபோது மைத்துனன் உண்மையைச் சொல்லிவிட்டான். அதிபர் நரிக்குக் கற்பனையான கதைகளைச் சொல்லி மற்றவர்களைப் பயமுறுத்தக் கூடாது என்று புத்திமதி சொன்னார்.

## 50. புண்படவே வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்




இடைவேளை நேரம் எல்லோரும் மரநிழலில் கூடி நின்றபோது எருமைக் கன்று நரியைப் பார்த்துச் சிரித்தது. பின்பு, "நேற்று உச்சுவில் குளத்தில் நீயும் உனது மைத்துனனும் குளித்தீர்களாம். அப்போது இரண்டு முதலைகள் உங்களைப் பிடிக்கவர நீ ஒரு முதலையுடனும், உனது மைத்துனன் இன்னொரு முதலையுடனும் போராடி முதலைகளைக் கொன்றீர்களாம். காடு முழுவதும் உதுதான் பேச்சு. நீ உண்மையில் பெரும் வீரன். இல்லாவிட்டால் முதலை இருக்கு என்று தெரிந்தும் குளத்தில் யாராவது இறங்குவார்களா? உனது மைத்துனன் கடைசியில் களைத்துப் போனானாம். அவனை முதலை பிடித்துவிட்டதாம் நீ உன்னுடன் போராடிய முதலையைக் கொன்றுவிட்டு மைத்துனனை விழுங்கப்போன முதலையைக் கொன்றனியாம்" எருமைக்கன்று சொல்லிவிட்டு நரியில் முதுகில் தட்டி, "சரியான வீரன்" என்று சிரித்தது. கூடியிருந்த மிருகங்கள் யாவும் பெரிதாகச் சிரித்தன.

நரிக்கு அவமானமாக இருந்தது. தன்னை மிகவும் கேவலப்படுத்தியதால் கோபமும் வந்தது.

"காட்டில் உள்ள குளங்கள் பல வற்றிவிட்டன. நான் நன்றாகக் குளித்துப் பலநாளாகி விட்டன. எல்லா மிருகங்களும் குளிப்பதால் குளம் சேறும் சகதியும் ஆகிவிட்டது. அதனால் நானும் எனது நண்பர்களும் உச்சுவில் குளத்தில் நன்றாகக் குளிக்க விரும்புகிறோம். யாரும் அதைக் கலக்காததால் நீர் சுத்தமாக இருக்கிறது. அது ஆழமான குளம். நன்றாக நீச்சலடிக்கலாம். நீ பாதுகாப்புக்குவா. உன்னைக் கண்டால் முதலைகள் பயந்து ஓடிவிடும். நாங்கள் நிம்மதியாகக் குளிக்கலாம்" என்று எருமைக் கன்று சொல்ல கூடிநின்ற மிருகங்கள் பலமாகச் சிரித்தன.

"காலையில் அதிபர் உன்னை அழைத்துப் பாராட்டினவராம். விரைவில் உனக்கொரு பாராட்டுவிழா வைக்கவேண்டும் என்றவராம். எமது தலைவரும் உன்னைப் பாராட்ட ஒரு விழா

வைக்கவேண்டும் என்று சொன்னது'' என்று எருமைக்கன்று சொன்னபோது நரி பாய்ந்து அதைக் கடித்துவிட்டது. அதனால் எருமைக் கன்றுக்குக் கோபம் வந்தது.

**கு**ரங்கு எருமைக்குச் சொன்னது, ''நண்பா, நீ அளவுக்கதிகமாக நரியைத் தாக்கிப் பேசிவிட்டாய். உனது சொற்கள் சாதாரணமானவை அல்ல. வன்சொற்கள். எதிரிகளுக்குக் கூட வன்சொற்களைப் பேசலாகாது. பேசினால் பிரச்சனைதான் அதிகரிக்கும். நரி புழுகுவது இயல்பானது. அதை நாமெல்லாம் கேட்டுச் சிரித்துவிட்டுப் போகிறோம். ஒருவரின் இயல்பை மாற்றுவது கடினம். அவரது சொல்லால் அல்லது செயலால் பாதிப்பு இருந்தால் தான் கவலைப்பட வேண்டும். நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நரியை ஒரு நகைச்சுவையாளன் என்று நினை. பாவம் அது. பொய்யானவற்றைக் கூறுகிறது என்று அதிபருக்கே தெரியும். அதனால் தான் காலையில் அதை அழைத்துப் புத்திமதி சொன்னவர். யாரும் நரியின் பேச்சைக் கவனத்தில் எடுப்பதில்லை. நீ அதைப் பெரிதாக எடுத்து கேலி செய்தது பிழை''.

**எ**ருமை எதுவும் பேசாது அவ்விடத்தை விட்டுச் சென்றது.

## 51. புறம் சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டாம்



**எ**ருமைக் கன்று குரங்குக்குச் சொன்னது, ''நீ எனது நல்ல நண்பன். அதனால் தான் எல்லோரும் சிரித்த போதும் நீ சிரிக்காது சமாதானம் பேசினாய். நரி எப்போதும் புறம் சொல்லும், புளுகும், இல்லாதவற்றை இருக்கிறது என்று சொல்லும். என்னைப்பற்றி நரி, எனது நண்பர்களுக்கு மிகவும் கேவலமாகச் சொல்கிறது'' என்றபோது குரங்கு சொன்னது.

''**ந**ண்பா, ஒருவர் காரணமின்றி கதைப்பாரேயானால் அவர் மனநிலை குழம்பியவர் என்று அர்த்தம். நரிக்கு என்ன கதைப்பது, எதைக் கதைப்பது என்று தெரியாது. சென்றவாரம் ஒட்டகத்தைப் பற்றித் தரக்குறைவாகக் கதைத்ததாகக் கூறி ஒட்டகம் காலால் அதை உதைத்தது. அந்தக் காயம் இன்னும் மாறாததால் அது நொண்டி நொண்டித்திரிகிறது. அப்படியிருந்தும் அதன் போக்கில் மாற்றம் ஏற்படவில்லை. அது ஒட்டகத்துடன் மட்டுமா முரண்பட்டது. பலரோடு முரண்பட்டது. அவர்கள் ஏசியும், அடித்தும் அதற்குப் புத்தி வரவில்லை. பலர் நரியுடன் கொண்டாடுவதை விட்டு விட்டனர். சென்றவாரம் எம்மோடு

படிக்கும் முயல் தனது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடியது. அது தன்னுடன் படிக்கும் மாணவர்கள் அனைவரையும் அழைத்தது. ஆனால் நரியை அழைக்கவில்லை. அதனால் நரி கோபப்பட்டு முயலைக் கண்டபடி திட்டியது. அதனால் நரி முயலோடு உறவுவைக்காது என்று நான் நினைத்தேன். ஆனால் அது முயலின் பிறந்தநாளன்று பரிசுப் பொருளோடு வந்து வாழ்த்தியது'' என்றது குரங்கு.

''**யோ**சித்துப் பார்த்தால் அதுவும் ஒரு மனக்குழப்பம் என்றே எண்ணத் தோன்றுகிறது. தனக்கு முயல் சொல்லவில்லையென்று மிகவும் தரக்குறைவாக எனக்கும் சொன்னது. கடைசியில் பார்த்தால் விழாவுக்கு வந்து பரிசும் கொடுத்துவிட்டுச் சென்றது. இந்தக் காலத்தில் யாரையும் கணிக்க முடியவில்லை. புறம் கூறுவாரை ஒதுக்கிவைக்க வேண்டும் என்று பெரியவர்கள் கூறுகிறார்கள். அதற்கமைய நாம் விலக்கிவைத்தாலும் நரி வலியவந்து பேசுகிறது'' என்று கவலைப்பட்டது எருமைக்கன்று.

''**பொ**றுத்தார் அரசான்வார் என்பார்கள். அதனால் பொறுமையாக இருப்போம்'' என்றது குரங்கு.

## 52. மறம் பேசித் திரிவாரோடு இணங்க வேண்டாம்



**ஆ**ட்டுக்குட்டி வந்து தாய்க்குச் சொன்னது, ''நரியுடன் சேர எனக்கு விருப்பமில்லை. ஒன்றாகப் படிக்கும் யாரையும் வெறுக்கக்கூடாது என்று நீங்கள் சொன்னதால் தான் நான் நரியுடன் நட்புக்கொள்ளாது வேண்டாவெறுப்பாக பேசிவந்தேன். அதன் தொல்லையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இன்று முயலின் பென்சிலைக் காணவில்லை. நரி அதை எடுத்து எனது புத்தகப்பைக்குள் வைத்துவிட்டது. முயல் தனது பென்சிலைக் காணவில்லை என்று வகுப்பாசிரியரிடம் சொன்னபோது, வகுப்பாசிரியர் மாணவர்களுடைய புத்தகப்பையைச் சோதனையிட்டார். அப்போது முயலின் பென்சில் எனது புத்தகப்பைக்குள் இருந்ததைக் கண்டு கோபங்கொண்ட வகுப்பாசிரியர் என்னை அதிபரிடம் அனுப்பினார்'' அழுதது ஆட்டுக்குட்டி.

''**அ**திபர் அதை நம்பிவிட்டாரா...?'' மீண்டும் அழுத ஆட்டுக்குட்டி சொன்னது, ''நீ ஒரு போதும் குற்றம் செய்வதில்லை. மாணவர்களுடன் வீறாப்புப் பேசி வலுச்சண்டைக்கு இழுப்பதில்லை. நீ ஒழுக்கமானவன் என்று நினைத்திருந்தேன். ஏன் உனது புத்திமாறியது''

என்று கேட்டார். எனக்கு அவமானத்தால் உடல் கூசிக்குறுகிப்போச்சு நான் எடுக்கவில்லை அம்மா'' ஆட்டுக் குட்டி விம்மி விம்மி அழுதது.

''**நீ** எடுக்கமாட்டாய் என்று எனக்குத் தெரியும'' என்றது தாய் ஆடு.

**மு**யலின் இனத்தவர் ஒருவர் வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்து முயலுக்குக் கொடுத்தவராம். நல்ல அழகான பென்சில் அதனால் தான் அதிபர் சந்தேகப்பட்டவர்'' என்றது ஆட்டுக்குட்டி.

''**நா**ம் நேர்மையாக வாழந்தாலும் குற்றம் சொல்பவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். எல்லாவற்றையும் கடவுளிடம் ஒப்படைத்து விட்டு அமைதியாக இரு'' என்றது தாய் ஆடு.

**ம**றுநாள்க் காலை அதிபர் நரியையும் ஆட்டுக்குட்டியையும் அழைத்துச் சொன்னார், ''ஆட்டுக்குட்டியே, நீ மிகவும் நேர்மையானவன், ஒழுக்கமானவன் வெளிநாட்டுப் பென்சில் என்றவுடன் உனக்கு ஆசை வந்திருக்கும் என்று நினைத்தேன் ஆனால் அதை எடுத்தது நரி. அதை ஒருவர் கண்டுவிட்டு எனக்குச் சொன்னார். நீ ஒழுக்கமானவன் யாரும் சந்தேகப்படமாட்டார்கள் என்று நினைத்துத்தான் நரி உனது புத்தகப்பபைக்குள் வைத்துவிட்டுப் பின்பு எடுக்கலாமென்று நினைத்தது. நீ ஒருபோதும் ஒழுக்கத்தை மறவாதே'' என்று கூறிப் பரிசு கொடுத்தார்.

**வெ**ளியே வந்த ஆட்டுக்குட்டி நரிக்குச் சொன்னது, ''ஆராயாது திட்டமிட்டு தீயசெயல்களைச் செய்யும் உன்னோடு இனி நான் பேசமாட்டேன்''.

## 53. வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டாம்



**கு**திரை பரிசுப் பொருட்களுடன் வந்து ஆட்டுக்குச் சொன்னது, ''நண்பா. எனது காணியைக் கோவில் காணியென்று வழக்குப் போட்டிருக்கிறார்கள். இது அப்பா எனக்கு முதிசமாகக் கொடுத்தது என்பது உனக்குத் தெரியும். இவர்கள் இப்படிச் செய்வது நியாயமா...? பத்து வடருங்களுக்கு முன்பு உறுதியெழுதப்பட்டிருக்கு. நீ அப்பாவின் நண்பன். அதனால் நீ நீதிமன்றத்துக்கு வந்து சாட்சி சொல்லவேண்டும்''.

“**எ**னது மனம் ஒப்புக்கொள்ளாதவற்றை நான் செய்யமாட்டேன். அது உனது தந்தைக்குச் சொந்தமான காணி அல்ல. யாரோ பிள்ளையில்லாதவர்கள் அக் காணியைத் தமிழ் நாட்டில் உள்ள சிதம்பரத்தில் உள்ள சிவன்கோவிலுக்கு எழுதியது. அத்துடன் பாடசாலைக்கு அருகிலும் முன்னாலும் உள்ள காணியும் பிள்ளையில்லாதவர்கள் சிவன்கோவிலுக்கு எழுதியது. அந்த நாளில் பிள்ளைகள் இல்லாதவர்கள் சிதம்பரத்தில் உள்ள சிவன்கோவிலுக்கு எழுதுவது வழக்கம். அவ்வாறு பலர் எழுதியுள்ளனர். அவற்றிற்கு உனது தந்தை பாதுகாவலராக இருந்தவர். நாட்டு நிலைமை காரணமா எல்லாம் தடைப்பட்டுவிட்டது. அதனால் உனது தந்தை அந்தக் காணிகளைத் தனது பெயருக்கு மாற்றிவிட்டார். அதற்கான பதிவும் உறுதியும் உங்களிடம் இருந்தால் கொண்டு சென்று நீதிமன்றத்தில் ஒப்படையுங்கள். அவை சரியென்றால் நீதிமன்றம் அந்த நிலங்களை உங்களுக்குத் தரும்” என்றது ஆடு.

“**நீ** என்ன, புதுக்கதை சொல்கிறாய். அது எனது பேரனாரின் சொத்து” என்றது குதிரை.

“**அ**ப்போ எனது உதவி ஏன் உனக்குத் தேவை. ஊரில் நான் சொன்னவாறு தான் கதைக்கின்றனர். அந்தக் காணிக்கு உறுதி இருக்கா? பதிவு இருக்கா? இரண்டும் இருந்தால் சாட்சி ஏன்?” என்று கேட்டது ஆடு.

“**எ**ல்லாம் இருக்கிறது. உன்னை எனக்கு உதவியாகக் கூட்டிச் செல்லலாமென்று நினைத்தேன்” என்றது குதிரை.

“**உ**னது இனத்தவர்கள் யாரையாவது கூட்டிச் செல். கச்சேரியில் பதியப்பட்ட உறுதி இருந்தால் வேறு எதுவும் தேவையில்லை. கோவில்காரரும் பாடசாலைக்காரரும் அக்கறையில்லாமல் இருக்கிறார்கள். அதனால் தான் நீங்கள் வழக்குப் போட்டுள்ளீர்கள் உங்களுக்குச் சொந்தமில்லாததைச் சொந்தம் என்று கூறி வழக்குப் போட்டு வாதாடிப் பணத்தையும் நேரத்தையும் செலவு செய்யாது தர்மமாக நடந்து கொள்ளுங்கள். தர்மமில்லாத விடயங்களில் நான் தலையிட மாட்டேன்” என்றது ஆடு.

## 54. திறம் பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்



"**உ**ன்னிடம் பணமிருக்கு, செவாக்கிருக்கு அதனால் வீராப்புப் பேசிக் கலகத்தைத் தூண்டிவிடுகிறாய். எப்படித்தான் வாதாடினாலும் எவ்வளவுதான் பணத்தைச் செலவு செய்தாலும் பெரிய மனிதர்களின் ஆதரவு இருந்தாலும் உன்னால் வழக்கில் வெற்றிபெற முடியாது. மானம் மரியாதையிருந்தால் வழக்கை மீளப்பெறு மானமாவது மிஞ்சும்" என்றது ஆடு.

"**உ**ன்னை ஊரவை கெடுத்துப்போட்டினை. நீதிநியாயம் என்று பாராது எனக்கு உதவி செய். உனக்கு நான் பணம் தருகிறேன;" என்றது குதிரை.

"**நீ** நீதியாகச் செயற்பட்டால் எனது சாட்சி உனக்குத் தேவைப்படாது. அத்துடன் நீ நீதியாகச் செயற்பட்டால் எனக்கேன் பணம் தருவான். நீதி வெல்லும் என்றிரு. உண்மையில் அக்காணிகள் உனக்குரியனவென்றால் அவை உன்னை வந்தடையும்" என்றது ஆடு.

"**உ**ந்த உபதேசங்களை விட்டு விட்டுப் பிழைக்கிற வழியைப்பார்" என்றது குதிரை.

"நான் ஏழைதான். எனினும் தர்மத்தைக் கடைப்பிடிப்பவன். கடவுளுக்குப் பயந்தவன். அதனால் உனக்கு உதவி செய்யமாட்டேன்" என்றது ஆடு.

## 55. தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்



**கா**ட்டுப் பிள்ளையார் கோவிலில் அன்று சதுர்த்தி விழா நடைபெற்றது. அங்கு சதுர்த்தி விழா நடைபெற்றால் சுற்றியுள்ள காடுகளில் உள்ள மிருகங்கள் யாவும் வந்துவிடும். குரங்கு மேளம் அடிக்க, குயில் இனிமையாகப் பாட, மயில் தோகையை விரித்து ஆடும். அதன் ஆட்டம் முடிய யானை காட்டுப்பிள்ளையாருக்கு

தீபங்காட்டும். அதன்பின் பிரசாதம் வழங்கப்படும்.

**ம**யில் ஆடி முடித்து விட்டு வந்து அமர்ந்தது. அதன் அருகே வந்து அமர்ந்தது நரி. நரியைக் கண்டால் மயிலுக்குப் பிடிப்பதில்லை. அது அதன் ஆட்டத்தைக் குறைகூறும் பிள்ளையாரை நிந்திக்கும்.

“**ஆ**ட்டம் நன்றாக இருந்தது. பிள்ளையாரிடம் என்ன வரம் வேண்டி ஆடினாய்?” என்று கேலியாகக் கேட்டது.

“**எ**னக்கு எதற்கு வரம். ஆறு பிள்ளைகள் இருக்கிறார்கள். எட்டுப் பேரப்பிள்ளைகள் இருக்கிறார்கள். எனது ஆறு பிள்ளைகளும் நன்றாகப் படித்து நல்ல உத்தியோகம் பார்க்கிறார்கள். காடு முழுக்கச் சுவையான பழவகைகளைக் கடவுள் படைத்துள்ளார். இதற்கு மேல் என்ன வேண்டும்” என்று கேட்டது மயில்.

“உன்னோடு கதைத்து வெல்லமுடியாது. உன்னுடைய பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் கூட்டி வந்து பிள்ளையாருக்கு ஆடிக் காட்டு” என்றது நரி

“**பி**ள்ளைகள் வேலைக்குச் சென்றுவிட்டனர். பேரப்பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றுவிட்டனர். அதிகாலையில் வந்து எனது பேரப்பிள்ளைகள் ஆடினவர்கள்” என்றது மயில்.

“**அ**ப்படியா? அப்படியென்றால் பிள்ளையார் அள்ளித்தருவர்” என்றது நரி.

“**ந**ல்லநாளில் வந்து பயனில்லாத கதைகளைக் கதையாதை அதனால் தான் உனக்குத் தரித்திரம். உன்னைப் போல உனது பிள்ளைகளும் கடவுகளை மதிக்காதவர்கள். அதனால் தான் உனது குடும்பம் கஷ்டப்படுகிறது. எந்தக் கஷ்டம் வந்தாலும் கடவுளைக் கேள் தருவார். அதைவிட்டு விட்டுப் பணக்காரரிடம் களவு எடுக்காதை” என்றது மயில்.

**ந**ரிக்கு அவமானமாக இருந்தது. மயில் சரியான திமிர் பிடித்தது ஏன் அதோடு பிரச்சினைப்படுவான்” என்று நினைத்து அவ்விடத்தை விட்டுச் செல்ல நினைத்தது.

“**ந**ரியாரே, தெய்வத்தை ஒருபோதும் மறக்கலாகாது. தெய்வத்தைத் தொழத்தொழ தேவையானவையெல்லாம் கிடைக்கும். மனம் மகிழ்ச்சியாக இருக்கும். அதனால் இனிமேலாவது கடவுளின் மீது நம்பிக்கை வை” என்றது மயில்.

## 56. இறந்தாலும் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்



**ந**ரியை நாலைந்து வேட்டை நாய்கள் துரத்திக் கொண்டு வந்தன. நரி மிக்க பயத்துடன் ஓடிவந்து ஒரு பற்றைக்குள் இருந்த பொந்துள் நுளைந்துகொண்டு வெளியே பார்த்தது. வெளியே ஒரு மான் நின்றது.

“**ஏ**ன் உன்னை வேட்டை நாய்கள் துரத்தின” என்று மான் கேட்டது.

“**அ**வை என்னைத் துரத்தவில்லை. கண்டுவிட்டு ஓடிவந்தேன். நாய்கள் எமது எதிரிகள். நாம் எதுவும் செய்யாவிட்டாலும் அவை எம்மைத் தாக்கும்” என்றது நரி.

“**நா**ன் நீ சொல்வதை நம்பமாட்டேன். நாய்கள் நன்றியுள்ளவை. அத்துடன் தம்முடன் யாரும் பிரச்சினைக்குச் செல்லாவிட்டால் அவையும் செல்லாது, நீ ஏதோ பெரிய தவறு செய்துவிட்டாய்” என்றது மான்.

“**உ**ண்மைதான். யானையின் வீட்டுக்குள் நுளைந்து அது வளர்த்த கோழிகளைத் திருடிவிட்டேன். இன்று கையும் மெய்யுமாக அகப்பட்டுவிட்டேன். தயவு செய்து என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதே. ஒரு நாயே என்னைக் கொன்றுவிடும். நாலைந்து நாய்கள் ஆவேசத்துடன் துரத்திக் கொண்டு வந்தன” என்றது நரி.

**அ**ப்போது அங்கு நாய் ஒன்று ஆவேசத்துடன் சொன்னது, “நரி மிகவும் மோசமானது எமது தலைவர் வெளியூரிலிருந்து அழகான நல்ல இனக் கோழிகளை வாங்கிவந்து வளர்த்தவர். நரி அடிக்கடி வந்து அவற்றைப் பிடித்துக் கொண்டு சென்றுவிடுகிறது. இன்று அதைத் தேடிக் கண்டு பிடித்துக் கொல்லாமல் விடமாட்டோம். இந்த வழியால் தான் நரி ஓடி வந்தது. நீ கண்டாயா?” என்று கேட்டது ஒரு நாய்.

**மா**ன் பொய்சொல்வதில்லை. அதனால் அது உண்மையைக் கூறிவிடும் என்று நினைக்க நரிக்கு உதறல் எடுத்தது.

“**மா**னாரே, நீர் நல்லவர், பொய் சொல்லாதவர் என்று எமக்குத் தெரியும். ஒருமுறை நரி களவெடுத்ததை நீர் கண்டு விட்டு உடனே வந்து தலைவருக்கு சொன்னனீர். நரி

மறுத்தபோது, “தலைவரே, எனக்கு மரணம் ஏற்பட்டாலும் பொய்சொல்ல மாட்டேன் என்றனீர். அதனால் சொல்லும்” என்றது நாய்.

**அ**தைக்கேட்ட நரிக்கு உயிரே போய்விட்டது, “நாயாரே, நீர் நன்றி உள்ளவர் விசுவாசமானவர். அதனால் நான் இரந்து கேட்கும் ஒரு விடயத்தை நீர் ஏற்றுக்கொள்ள வேண்டும்” என்றது நரி.

“நீர் நல்லவர், நன்றியுள்ளவர் சொல்லும்” என்றது நாய்.

“**ந**ரி மறைந்திருக்கும் இடம் எனக்குத் தெரியும். சொல்கிறேன் நீங்கள் அதைத் தண்டிக்கக் கூடாது. இம்முறை மட்டும் மன்னித்துவிட்டு விடுங்கள் இனிமேல் நரி கோழிகளைப் பிடித்தால் அதைக் கொன்றுவிடுங்கள்” என்றது மான்.

**சி**றிது நேரம் நாய் யோசித்தது, “நண்பா, தீயவர்கள் திருந்த நாம் சந்தர்ப்பமளிக்க வேண்டும். மன்னித்த பின்பும் திருந்தாவிட்டால் தண்டனை கொடுத்துத்தான் திருத்த வேண்டும;” என்றது மான்.

**மா**ன் இரக்கப்பட்டுக் கேட்டமையால் நாய்கள் நரியை மன்னித்தன. நரி வெளியே வந்தபோது, மானின் கோரிக்கையால் தப்பினாய் இனிமேல் களவெடுத்தால் தண்டனை நிட்சயமாகக் கிடைக்கும்” என்றது நாய்.

## 57. ஏசலிட்ட உற்றாரை நத்த வேண்டாம்



**த**னது சகோதரனைக் கண்ட எருமை சொன்னது, “தம்பி, உனது நடவடிக்கைகள் எனக்குப் பிடிக்கவில்லை. எமது தந்தையின் சகோதரனை நீ அவமதித்துள்ளாய். அவர் எமது தந்தைக்கு நிகரானவர். எம்மை அன்புடன் அரவணைத்து வளர்த்தவர். வயதில் மூத்தவர். அவர் உனக்கு சொன்னதில் என்ன தவறு இருக்கிறது?. நீ நேற்று இரவும் காட்டின் எல்லையில் உள்ள கிராமத்தின் வயலுக்குச் சென்று அதை நாசஞ் செய்துள்ளாய். கடவுள் இரக்கமானவர். அன்புள்ளவர் அதனால் காட்டில் உள்ள மரங்கள் அனைத்திலும் சுவையான பழங்களைப் படைத்துள்ளார். நிலமெங்கும் பசுமையான புற்களும், இலைகுழை தழைகளும் உண்டு. அவற்றை உண்டு பசியாறுவதை விடுத்து நீ மனிதர்கள்

கஷ்டப்பட்டு பணம் செலவு செய்து விதைத்த வயல்களுக்குள்ச் சென்று பயிரை மேய்கிறாய். அதனால் நீ அழித்த வயலில் உரிமையாளரும் பிள்ளைகளும் உணவின்றி அவதிப்படுவர். இது உனக்குப் பாவமாகத் தெரியவில்லையா?”

**ச**கோதர எருமை எதுவும் பேசவில்லை. அமைதியாக அவ்விடத்தை விட்டுச் செல்ல முயன்றது. அதனால் எருமைக்கு கடுஞ்சினம் உண்டானது.

“**நீ** வயதிற்கு மூத்தவர்களை மதிப்பதில்லை சித்தப்பா உன்னைப் பற்றித் தரக்குறைவாகப் பேசிவிட்டார் என்று நீ அவரை தீயசொற்களால் ஏசியிருக்கிறாய். அவர் இங்குவந்து உனக்கு நாம் தான் இடங்கொடுக்கிறோம். நீங்கள் சரியான நடவடிக்கையெடுத்தால் அவன் இவ்வாறு நடப்பானா? முன்பு ஒரு முறை எமது இனத்தவர் ஒருவர் நாம் சொல்லச் சொல்லக் கேளாது விவசாயிகளின் பயிரை மேய அடிக்கடி செல்ல மனிதர்கள் பொறிவைத்தால் அவரின் முன்னங் கால்கள் இரண்டும் பாதிக்கப்பட்டன. அதுதான் இவனுக்கும் விரைவில் நடக்கும்” என்றவர்.

**அ**தையும் சகோதர எருமை கேட்டதாகத் தெரியவில்லை, “நீ, யார் எதைச் சொன்னாலும் கேட்கமாட்டாய். நீ செய்யும் தீய செயல்களால் எமக்கும் அவமானம் ஏற்படுகின்றது. பெற்ற தந்தையாயிருந்தாலென்ன பிள்ளையாக இருந்தாலென்ன உறவினராக இருந்தாலென்ன இழிவான செயல்களைச் செய்வோரோடு உறவாடக் கூடாது. நீ தொடர்ந்து இவ்வாறான செயல்களைச் செய்தால் சித்தப்பா எமது உறவைக் கைவிட்டுவிடுவதாகக் கூறிச் சென்றுள்ளார். அவர் எமக்கு மிகமிக வேண்டியவர். அதனால் உனது உறவைத் துண்டித்துவிட்டோம். இனிமேல் இங்கு வரவேண்டாம;” என்றது சகோதர எருமை.

**த**ம்பி எருமை எதுவும் பேசாது சென்றது.

## 58. சுறாக்கி ஒரு குடியைக் கெடுக்க வேண்டாம்



**மா**ன் மிகுந்த வேதனையுடன் வருவதைப் பார்த்த அதன் உற்ற நண்பனான பன்றி கேட்டது, "நண்பா, நான் உன்னைக் கடந்தசில நாட்களாக அவதானித்து வருகிறேன். உனது முகத்தில் மகிழ்ச்சியில்லை. நான் ஒன்றைக் கேட்டால் நீயொன்றைச் சொல்கிறாய். உனது தேகம் இளைத்துவிட்டதால் நோயாளிபோலத் தோன்றுகிறது. உனக்கு என்ன நடந்தது என்று சொல்".

**மா**ன் வெகுநேரமாகியும் பதில் சொல்லவில்லை. அதனால் பன்றி கேட்டது, "நான் உனது பாரிய நண்பன் இதுவரை இருவருக்கிடையே ஒழிவுமறைவு இருந்ததில்லை இப்ப நீ பெருங்கவலையுடன் இருப்பதை எனக்கு மறைக்கப் பார்க்கிறாய். விருப்பமானால் சொல் இல்லையென்றால் வேண்டாம்" என்றது பன்றி.

**சி**றிதுநேரம் யோசித்த மான் சொன்னது, "நண்பா, எனது இளைய மகன் ஒரு பெண்ணைக் காதலித்தது உனக்குத் தெரியும். அது பெண் வீட்டாருக்கு விருப்பமில்லை. நாங்கள் ஏழைகள். அவர்கள் பெரும் பணக்காரர்கள். அவர்களுக்கு ஒரே ஒரு பெண்பிள்ளை. அதனால் வேறு வழியின்றிச் செய்யச் சம்மதித்தனர்" பேச்சை நிறுத்திய மான் கலங்கியது.

**ப**ன்றி எதுவும் சொல்லாததால் மான் சொன்னது, "நாங்கள் வசதியில்லாதவர்கள். தாம் வசதிமிக்கவர்களாம். அதனால் இந்தமுறை வருடப்பிறப்புக்குக் கூட மருமகள் எமது வீட்டுக்கு வரவில்லை மகன் வந்து ஒருசில நிமிடங்கள் நின்று விட்டு ஏதோ அவசர வேலை இருப்பதாகக் கூறிச்சென்று விட்டான். அது நடந்து ஆறு மாதகாலமாகிவிட்டது. அவர்கள் எமது வீட்டுக்கு வரவில்லை".

"**அ**து பெரிய கவலை தான். உனது மனைவி தனது மகன் மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தவள் அவள் வேதனைப்படுவாள் என்று உனது மகனுக்குத் தெரியாதா?" என்று கேட்டது பன்றி.

"**அ**தெல்லாவற்றையும் யார் நினைத்துப் பார்க்கிறார்கள். மகன், தனது மனைவியின் சொல்லுக்கு அடங்கிவிட்டான். நாங்கள் தான் பாசமிகுதியால் அடிக்கடி சென்று வருகிறோம். பெத்தமனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்று ஒரு முதுமொழி உண்டு அதைத்தான் நான் நினைப்பேன்" என்றது மான்.

"**க**வலைப்படாதை, எல்லாம் காலப்போக்கில் சரி வரும்" என்றது பன்றி.

“**அ**ந்த நம்பிக்கையில் தான் நான் இருக்கிறன். தாய்க்காரி மகனைக் குறை சொல்லவிடா. எனது மூத்த மகன் குளத்தில் குளிக்கும் போது முதலை கொன்றது உனக்குத் தெரியும். அதைப் பொறுத்துக் கொண்டு தானே இருக்கிறன்” என்றது மான்.

“**அ**ப்படிச் சொல்லாத ஒற்றுமையாக இருந்த குடும்பம் பிரியக்கூடாது. நீ அங்கு போகாவிட்டால் குடி பிரிந்துவிடும். குடிபிரியாது இருக்க வேண்மேயானால் தொடர்பு இருத்தல் வேண்டும். அதனால் எக்காரணம் கொண்டும் அங்கு செல்லாமல் விடாதை. காலம் யாவற்றையும் சரி செய்யும்” என்றது பன்றி.

“**நா**ன் போகாவிட்டாலும் தாய் ஒரு நாளைக்கு இரண்டு தரமாவது போய்வருவா அவாவையும் மறித்து விடுவேன் அப்படி மறித்தால் நல்ல ஒற்றுமையாக இருந்த குடும்பம் பிரிந்து விடும்” என்றது மான்.

## 59. தூறாக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்



**ப**ன்றி மானுக்குச் சொன்னது, “நண்பா, உனது மகனின் மாமனார் மிகவும் நல்லவர். அவரை எனக்கு முன்பே தெரியும். அவருக்கு தனது மனைவியின் நடத்தை குறித்துப் பெருங்கவலை. அவள் பெரும் பணக்காரரின் மகள். அதனால் தலைக்கனமும் திமிரும் அளவுக்கதிகமாக இருக்கிறது. அவள் சுற்றத்தவர்கள் எல்லோருடனும் பிரச்சினைப்படுவாள். மற்றவர்களை அவள் மதிப்பதேயில்லை. அதனால் யாரும் அவர்களது நன்மை தீமைகளில் கலந்து கொள்வதில்லை. அண்மையில் அவளது பேரனார் இறந்தார். பக்கத்து வீட்டுக்காரன் கூடப் போகவில்லை. இது தான் அவர்களின் நிலை. தம்மை உயர்த்திப் பிறரைத் தாழ்த்திப் பேசுவது அவளின் பண்பு. அது அவளது கணவனுக்குப் பிடிக்காததால் நெடுங்காலம் அவர்கள் இருவரும் பேசுவதில்லை. மற்றவர்களை மதிக்காது எப்போதும் குறைசொல்பவர்களுடன் சேரக்கூடாது என்று சுற்றத்தவர்கள் நினைத்து அவளை விலக்கி வைத்துள்ளனர். அது அவளின் இயல்பு. அதனால் கவலைப்படாதே” என்றது பன்றி.

“**தா**யைப் போலத்தானே மகளும் இருக்கிறாள். எமது இனத்துப் பெண்கள் கணவனை மதிப்பவர்கள். கணவன் சொல்வது பிடிக்காவிட்டாலும் சமாளித்துச் சமாதானமாகிவிடுவார்கள். ஆனால் எனது மருமகள் தனது சொற்படி தான் தனது கணவன் நடக்க வேண்டும் என்று

விரும்புகிறாள். அப்படி நடக்காவிட்டாலும் பெரும் பிரச்சினை வருகிறது. முன்பு காதல் மோகத்தில் அவள் சொல்வது தான் வேதவாக்கு என்று நினைத்த எனது மகன் இப்போது தனது தவறை உணர்ந்து என்ன பயன்?. சில சமயம் குடும்பம் பிரிந்து விடுமோ என்று எனக்குக் கவலையாக இருக்கிறது'' என்றது மான். அதன் குரலில் வேதனை தெரிந்தது.

''**அ**ப்படி நினைக்காதை. நாம் நல்லதையே நினைக்க வேண்டும். நினைவு தான் செயலானது அதற்காகத் தான் பெரியவர்கள் தீயவற்றை ஒருபோதும் நினைக்ககூடாது என்றனவை. கவலைப்படாதை. கவலைப்படுவதால் பிரச்சினைகள் தீருமென்றால் கவலைப்படலாம். கவலைகளால் நோய்தான் அதிகரிக்கும். மனம்குழம்பி நிம்மதியைக் கெடுக்கும்'' என்றது பன்றி.

''**நீ** சொல்வது உண்மைதான். ஆனால் மனம் கட்டுப்பட மறுக்கிறது. எங்கே சென்றாலும் இதே நினைவு தான். இப்போ நிம்மதியாக உண்ண முடியவில்லை. ஒரு வேலையைச் செய்ய முடிவதில்லை. ஏன் கோவிலுக்குக் கூடப்போய் நிம்மதியாகக் கடவுளை வணங்க முடியவில்லை பிறரின் மீது இல்லாதது பொல்லாததுகளை ஏன் கூறுகிறார்கள் என்று புரியவில்லை. அதனால் அவள் புரிசனைப் பிரிந்தாள் இப்போ மகளுக்கும் அதே கதிதான் நடக்கப் போகுது'' என்று கவலைப்பட்டது மான்.

## 60. துர்ச்சனராய்த் திரிவாரோடு இணங்க வேண்டாம்



''**ந**ண்பா, எனது மூத்த சகோதரனின் மனைவியும் எனது மருமகளின் தாயைப் போன்றவள். அதனால் எனது சகோதரனுக்கும் அவளுக்கும் அடிக்கடி சண்டை நடக்கும். அதனால் அண்ணன் அடிக்கடி பிரச்சினைப்பட்டுக் கொண்டு எமது வீட்டுக்கு வந்து விடுவார். ஆனால் அண்ணி, அண்ணாவுக்கு நாம்தான் புத்திமதி சொல்லித் தன்னைப் பிரித்து வைத்திருப்பதாகக் கூறுவா. பெண்ணோ அல்லது ஆணோ மற்றவர்களுடன் இசைந்த வாழ வேண்டும். அதற்கு அறிவும், பொறுமையும் வேண்டும். பொறுமையாக இருந்து யோசித்துப் பார்த்தால், அறியாமை நீங்கும்'' என்றது மான்.

''**அ**ப்படி யோசிக்காததால் தானே பிரச்சினைகள் வருகின்றன. தீயவர்கள் ஒருபோதும் நல்லவற்றை எண்ணுவதில்லை. தான் கள்வன், பிறரை நம்பான் என்றொரு முதுமொழி இருக்கு. திருடன் எப்பொழுதும் மற்றவர்களும் திருடர்கள் என்றே நினைப்பான். ஆனால் நல்லவர்கள் எல்லோரும் நல்லவர்கள் என்றே நினைப்பர். பாரதக் கதையில் கிருஷ்ணன் தருமனை அழைத்து நீ நாடு முழுவதும் சென்று ஒரு தீயவனை அழைத்து வா என்றார்.

அதுபோலத் துரியோதரனை அழைத்து நீ நாடு முழுவதும் சென்று ஒரு நல்லவனை அழைத்து வா என்றார். சில நாட்கள் கழிந்தன. இருவரும் தனியே வந்தனர். தருமன் சொன்னான், ''நண்பா, நாட்டில் ஒரு தீயவனை என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. எல்லோரும் நல்லவர்களாக இருக்கின்றனர் என்றான். துரியோதனன் சொன்னான், ''நாட்டில் ஒரு நல்லவன் கூட இல்லை எல்லோரும் தீயவர்களாகவே இருக்கின்றனர்'' இது தான் உலகம். இந்த உலகத்தில் தான் நாம் வாழ்கிறோம். அதனால் தீயவரோடு சேராமல் வாழப்பழக வேண்டும்'' என்றது பன்றி.

**மா**ன் எதுவும் பேசவில்லை. அதற்கு என்ன பேசுவதென்று புரியவில்லை.

## 61. வீறான தெய்வத்தை இழை வேண்டாம்



**மா**ன்குட்டி வந்து பன்றிக்குச் சொன்னது, ''மாமா, அவளின் அழகில் மயங்கி, நான் அவளைக் காதலித்தேன். காதலிக்கும்போது பலர் அக் குடும்பம் பண்பில்லாதது. அடுத்தவரை மதிக்காதது. என்று சொல்லி அக் குடும்பப் பெண்களைத் திருமணம் செய்ய வேண்டாம் என்று கூறினர். நான் காதல் மயக்கத்தில் யாரினதும் சொற்களையும் கேட்கவில்லை. அவர்கள் பணக்காரர்கள் அதனால் பொறாமைப்பட்டுச் சொல்கிறார்கள் என்று நினைத்தேன். அப்பாவுக்கும் விருப்பமில்லை. அவர் எவ்வளவோ எடுத்துச் சொன்னவர். அதையும் நான் கேட்கவில்லை. அவருக்கு ஒரு தங்கை இருக்கிறார். அவளுக்கு ஒரு மகளும் இருக்கிறாள். அப்பாவுக்குத்தனது தங்கை மீது அளவுக்கதிகமான பாசம் இருந்தது. அதனால் தனது தங்கையின் மகளை எனக்குத் திருமணம் செய்து வைக்கவே இவ்வாறு சொல்கிறார் என்று நினைத்தேன். வேறும் பலர் சொல்லிய போதும் நான் கேட்கவில்லை'' என்று கவலைப்பட்டது மான்.

''**மு**டிந்தவற்றை நினைத்துக் கவலைப்படாது வாழ்வது தான் புத்திசாலித்தனம். அறிவுடையவர்கள் அதைத்தான் செய்வர். நீ நன்றாகப் படித்தவன் நல்ல உத்தியோகம் பார்ப்பவன் அதனால் உனக்கு நான் எதையும் சொல்லத்தேவையில்லை'' என்றது பன்றி.

''**நா**ன் காட்டுப் பிள்ளையாரின் பெரும்பக்தன். அவரை வணங்கி அவரின் அனுக்கிரகத்துடன் தான் அவளை மணந்தேன். ஆனால் அவர் எனக்குத் துரோகம்

செய்துவிட்டார். நம்பிய என்னைக் கை விட்டு விட்டார். இனிமேல் ஏன் உவரை. எனக்கு வாழ்வே அழிந்து விட்டது. இனிக் கும்பிட்டு என்ன பயன்'' மான் குட்டி கோபப்பட்டது.

''**ம**கனே, ஒவ்வொருவரும் தம்மேல் குற்றங்களை வைத்துக் கொண்டு பிறரை நோகின்றனர். தெய்வத்தை ஒருபொழுதும் இகழலாகாது. ஏனென்றால் தெய்வம் தான் நேரில் வந்தும் உதவி செய்யும். பிறர் மூலமாகவும் உதவிசெய்யும். உனக்கு எத்தனை பேர் அப் பெண்ணைத் திருமணம் செய்யவேண்டாம் என்று கூறினார்கள். அவர்கள் காட்டுப் பிள்ளையாரின் கட்டளைப்படி தான் சொல்லியிருப்பார்கள். அதைவிட மாதா, பிதா, குரு என்போர் உனக்கு அவளைத் திருமணம் செய்ய வேண்டாம் என்று கூறவில்லையா? எல்லோரும் எடுத்துச் சொன்னபோதும் அவற்றை மதியாத நீ இப்போது சக்திமிக்க காட்டுப் பிள்ளையாரை நிந்திக்கிறாய். திட்டுகிறாய். அதைவிட்டு விட்டு உனது மனைவியின் கெட்ட குணங்களை மாற்றித் தா என்று கேள். அது சரிவரும்'' என்றது பன்றி.

## 62. வெற்றியுள்ள பெரியோரை வெறுக்க வேண்டாம்



**எ**லிக்குட்டி வந்து தாய்க்குச் சொன்னது, ''அம்மா, நான் இனிப் பாடசாலைக்குச் செல்லமாட்டன்''.

''**ஏ**ன் குட்டி'' என்று அன்புடன் அணைத்து முத்தமிட்டது தாய் எலி.

''**பா**டசாலையில் அதிபரும், ஆசிரியர்களும் நெடுகப் படி படி என்கிறார்கள் எனக்குக் கணிதபாடத்தில் ஐந்து புள்ளிகளாம். கவனமெடுத்துப் படிக்க வேண்டும். பாடங்களில் குறைவான புள்ளி எடுக்கும் மாணவர்களுக்குப் பாடசாலை முடிந்த பின்பு தனியாக வகுப்பெடுப்பேன். நாளையிலிருந்து மதிய உணவைக் கொண்டு வாருங்கள்'' என்று கணித ஆசிரியர் சொன்னவர். நானும் இன்னும் மூன்று பேரும் கணித பாடத்தில் குறைவான புள்ளிகளை எடுத்தோம். அதைவிட அதிபர் மோசம். பின்நேரம் கட்டாயம் நின்று படிக்க வேண்டும்'' என்று சொன்னார். அதனால் பாடசாலைக்குச் செல்ல எனக்கு விருப்பமில்லை'' என்று அழுதது எலிக் குட்டி.

''**ம**கனே, அதிபரும் ஆசிரியரும் மிகவும் நல்லவர்கள். பல அதிபர்களுக்குப் பாடசாலையின் நினைவே இல்லை. பல்வேறு தொழில்களைச் செய்து சம்பாதிக்கின்றனர். எமது அதிபர் தான் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறார். அவர் நன்றாகப் படித்தவர்.

பண்பானவர். எல்லோரும் கற்று நல்ல தொழில் பார்க்க வேண்டும் என்று விரும்புபவர். அப்படியான பெரியவர்களைப் பற்றிக் குறை கூறலாகாது. அவர் சொல்வதைக் கேட்கவேண்டும். உனது பெரியம்மாவின் மகன் பாடசாலைக்குச் செல்வதில்லை. பாடசாலைக்கென்று சென்று புத்தகங்களை மறைத்து வைத்துவிட்டு நண்பர்களுடன் காடு முழுவதும் சுற்றித்திரிவான். அதிபர் தான் அவன் திரியும் இடங்களுக்கெல்லாம் சென்று அவனைப் பிடித்து வந்து கற்பிப்பார். அத்துடன் பாடசாலைக்கு வராத பிள்ளைகளை அழைத்து வரவும் ஏற்பாடு செய்திருப்பார். ஆதனால் தான் அவன் படித்து இன்று பெரிய உத்தியோகம் பார்க்கிறான். இல்லாவிட்டால் கூலிவேலை தான் செய்திருப்பான்'' என்றது தாய் எலி.

"**அ**ப்பாடியா அம்மா?. நான் பாடசாலைக்குச் செல்லாவிட்டால் என்னைப் பிடித்துக் கொண்டு செல்வார்களா?''.

"**ம**கனே, கல்வியை நன்றாகக் கற்றால் என்னும் இன்பமாக வாழலாம். அதற்கு அதிபர் உதவி செய்வார். கற்ற பெரியவரான அதிபரைப் பற்றிக் குறையாகச் சொல்லக் கூடாது. அவர்களை வெறுக்கவும் கூடாது. அவர்கள் கடவுளைப் போன்றவர்கள்'' என்றது தாய் எலி.

"**நா**ன் தெரியாத்தனமாகச் சொல்லிவிட்டேன். இனிமேல் அதிபரும், ஆசிரியர்களும் சொல்வதைக் கேட்டு நன்றாகப் படிப்பேன்'' என்றது குட்டி எலி.